27

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1350 ஜமாதுல்அவ்வல் 1931 அக்டோபர்மீ | இதழ் 10

உள்ளடக்கம் — பக்கம்

1. ஸூரத்துல் கத்ர் தொடர் ... 433
2. நாயக வாக்கியம் ... 434
3. ஷரீ அத்தெ இஸ்லாம் ... 436
4. ஆசிரியர் குறிப்பு ... 437
5. முஃஜிஸாக்களின் உண்மை ... 438
6. அக்பர் பாஷாவின் கல்வித்திறமை ... 440
7. காதியானிக்கொள்கையா? ஸயன்ஸ்ஞானமா? 444
8. பூர்த்திவிழா மகாநாடு ... 445
9. மாதர் பகுதி ... 447
10. நாம் முன்னேறும் மார்க்கம் ... 449
11. மேனாட்டுவாழ்க்கையில் இஸ்லாத்தின் ஆதிக்கம் ... 452
12. பண்டை உலமாக்களின் மார்க்கசேவை 455
13. லார்டு ஹெட்லி அஹ்மதியரா? ... 459
14. முஸ்லிம்கள் ஒற்றுமைப்படவேண்டும் ... 462
15. ஒரு கண்ணோட்டம் ... 463
16. "உலக மதபோத உத்தமர்"மீது கண்ணோட்டமும், தா. இ. ஹாபீஸின் தடுமாற்றமும் 468
17. தாருல் இஸ்லாத்தின் சிருஷ்டி வாதம் ... 471
18. ஆராய்ச்சி மேடை ... 475
19. மலேரியா ... 478
20. மதிப்புரை ... 480

7 OCT. 1931

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1350 ஜமாதுல் அவ்வல் ௴ 1931 ௵ அக்டோபர் ௴	இதழ் 10

27 OCT 1931

லைலத்துல் கத்ர்

(சென்ற மாதத்தொடர்)

இம்மகத்தான இரவில் வணக்கம் புரியாமல் வீண் விளையாட்டுகளில் பராக்காக யிருப்பவர்களையும், தூக்கத்தில் அயர்ந்திருப்பவர்களையும் கண்டு மலக்குகள் கைச்சேத மடைகின்றார்கள். அவர்களது பாவங்களை மன்னிக்கும்படியும் கேட்கின்றனர்.

அல்லாஹூ தஆலா ஆதம் (அலை.) அவர்களைச் சிருஷ்டிக்க நாடியபொழுது அமரர்கள் மானிடனைப்பற்றி குறை கூறினார்கள். "பூ உலகின்கண் ஒருவருக்கொருவர் சச்சரவு செய்துகொண்டிருக்கும் மனிதனையா படைக்கப்போகின்றாய்?" என ஆண்டவனிடம் விண்ணப்பித்து கொண்டார்கள். ஆதம் (அலை.) அவர்களைப் படைத்து அவர்களுக்களிக்கப்பட்டிருந்த விசேஷங்களை யெல்லாம் மலக்குகளுக்குக் காட்டும்படி செய்து, மலக்குகளை ஆதம் (அலை.) அவர்களுக்கு தலை வணங்கி ஸஜ்தா செய்யும்படி கட்டளை யிட்டான். அதுபொழுது மலக்குகள் மனிதவர்க்கத்தாரை குறைகூறிய காரணத்தால் அம்மாக்ஷிமை தங்கிய இரவில்மலக்குகள் மானிடர்களைக் கண்டு முஸாபஹாச்செய்து திருப்தி செய்துகொள்வதற்காக இப் பூ உலகின்கண் இறங்கும்படி அல்லாஹூதஆலா அமரர்களுக்கு உத்திரவிடுகின்றான் என்று கூறப்பட்டிருக்கின்றது.

அவ் விரவில் மேலுலகத்தோரும் கீழுலகத்தோரும் இப்பூமியின்கண் ஒன்று சேருகின்றார்கள். இஃதொரு ஆச்சரியமும் மாண்பும் பொருந்திய இரவென்பதில் சந்தேகமில்லை. அவ்விரவின் விசேஷத்தில் இதுவு மொன்றாகும். அஃதாவது :— அல்லாஹூ தஆலா அடியார்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காகவும் பிழைகளை மன்னிப்பதற்காகவும் வெளியாகின்றான். அன்றிரவில் முஸ்லிம்கள் தங்கள் பிழைகளைப் பொறுக்கத் தேடவேண்டியதும், இம்மை மறுமையின் நலன்களை அல்லாஹ்விடம் கேட்கவேண்டியதும் மிகமிக அவசியமானதாகும். இவ்விரவை அல்லாஹூ தஆலா 'ஸலாம்' எனக் கூறினான். பக்தர்கள் ஈடேற்றம் அடையக் கூடியதும், ஷைத்தானின், மற்றும் கெடுதிகளை விட்டும் கார்மான மடையக் கூடியதுமான இரவெனத் தெளிவாகின்றது. அவ்விரவானது சூரியன் அஸ்தமித்தது முதல் வைகறை தோன்றும்வரை நீடித்திருக்கும். அதன்பின் மலக்குகளும் ருஹூம் வானலோகம்சென்று விடுவார்கள். நம் முஸ்லிம் சோதரர்கள் அப்புண்ணிய இரவை எதிர்பார்த்து நற்கருமங்கள் புரிந்து மேன்பதவி அடைவார்களாக!

நாயக வாக்கியம்.

தானத்தின்பெரும்பயன்.

“ஓரடியான் தன் ஹலாலான சம்பாத்தியத்தினின்று ஒரு பேரீச்சம்பழப் பிரமாணம் (ஏழைக்கு) தானஞ் செய்வானாயின், ஆண்டவன் அதை தன் அருளினால் ஏற்றுக்கொள்கின்றான். மேலும், நீங்கள் கன்றை வளர்ப்பதற்கொப்ப இறைவனும் அவ்வடியானின் தானத்தை (அதன் புண்ணியத்தை) அஃதொரு மலைபோல் ஆகும்வரை வளர்க்கின்றான். ஹலாலான சம்பாத்தியமாயில்லாத தானத்தை இறைவன் ஏற்றுக்கொள்ளான்.” (திர்மதீ.)

ஒவ்வொரு முஸ்லிமும் தன்னிடமுள்ள சொத்துக்காக ஜக்காத் கொடுக்கவேண்டியது இஸ்லாமிய ஐங்கடமைகளிலொன்றாகும். ஜக்காத்தின் அளவுக்கு அதிகமாகக் கொடுக்கும் தானம் புண்ணியத்துக்குக் காரணமாகும். ஏழையொருவன் தனது உத்தம சம்பாத்தியத்தினின்று ஒரு சிறிது பொருளேனும் வேறொரு ஏழைக்குத் தானமளிப்பானாயின் இது ஆண்டவனால் பெரும்விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுமென்பதில் ஐயமில்லை.

ஜக்காத்தும், தானமும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முக்கிய நிபந்தனை அப்பொருள் புனிதமான (ஹலாலான) வழியில் சம்பாதிக்கப்பட்டதா யிருத்தல்வேண்டும். கஷ்டப்பட்டு நேரிய முறையில் சம்பாதித்த பொருளைக் கொண்டு செய்யப்படும் தானத்துக்குரிய புண்ணியம் ஆண்டவனால் மலைபோல் வளர்க்கப்பட்டு, அம்மாபெரும் புண்ணியம் அதற்குடையானுக்கு அருளப்படுகிறதென இந்நாயகத் திருமொழியில் பிரஸ்தாபிக்கப்பட்டுளது. மேலும் ஹலாலல்லாத—ஹராமான வழியில் சம்பாத்தியம் புரியப்பட்ட பொருளின்று எத்துணை தானதருமஞ் செய்யப்படினும் அது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியற்றதேயாகும்.

ஒருவனை மோசஞ்செய்தோ, எளியோரிடமிருந்து அபகரித்தோ, வட்டி வாங்கியோ, இலஞ்சம்பெற்றோ, களவு-கொள்ளைபுரிந்தோ, சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட மற்ற ஹராமான வழிகளில் சம்பாதித்தோ கிடைக்கும் பொருளினின்று அளிக்கப்படும் தானம் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இத்தகைய ஹராமான பொருளினின்று தானதருமம் புரிந்துவிட்டுத் தங்கள் பாபம் தொலைந்துவிட்டதென்று சிலர் எண்ணுவது அறியாமையேயாகும்.

ஆண்டவன் பாதையின் சேவை.

மனிதரில் உத்தமர் யார்? தீயவர் யார்? என்பதை உங்கட்கு யான் அறிவிக்கட்டுமோ? எவனொருவன் குதிரைமீது சென்றோ, ஒட்டகத்தின்மீது சென்றோ, தன் பாதங்களால் சென்றோ தன் ஆயுள்பரியந்தம் (பீஸபீலில்லாஹ்) ஆண்டவனது பாதையில் நற்சேவை புரிகின்றானோ அவனே மனிதர்களுள் உத்தம புருஷனாவான். எவனொருவன் ஆண்டவனது (திருவேத) குர்ஆனை ஒதியுணர்ந்தும் (அதன் போதனையால்) யாதொருஉணர்ச்சியும் அவன்பால் எற்படவில்லையோ அவனே மனிதரில் தீய புருஷனாவான்.” (நஸயீ)

இத் திருமொழியிலிருந்து இரண்டு விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். ஒன்று, ஆண்டவன் தனக்களித்துள்ள சாதனத்தைக்கொண்டு மனிதன் இறைவனது பாதையில் பொதுச்சேவை புரிவதாகும். மற்றொன்று, தான் குர்ஆனில் ஓதி உணர்ந்ததிலிருந்து பக்தியும், ஞானமும் பெற்று நல்லனுஷ்டானம் புரிவதும், ஓதி யுணர்ந்தவற்றைப் பிறர்க்குப் போதிப்பதுமாகும்.

இறைவன் நமக்கு சரீரசக்தி யளித்திருப்பது அவ் வல்லோனை வணங்கி சேவைபுரிவதற்காகவன்றி வேறு எதற்கென்று நினைக்கின்றீர்கள்? பிரமுகர்கட்குப் பொருளும், சொத்து மளித்திருப்பது ஆண்டவனுக்காகவென்று அவனது மார்க்கத்தில் ஏழை எளியோர்கட்குத் தானதருமஞ் செய்வதற்கும், உபகாரங்கள் புரிவதற்குமேயாகும். மேலும் சுயநலமில்லாமல் ஆண்டவனது சேவை புரிபவன் இறைவனது பேரருளுக்கும் நற்பாக்கியத்துக்கும் உற்றவனாவான். உடல், பொ

ருள் ஆகியவற்றை இறைவனது தொண்டுக்காக அர்ப்பணஞ் செய்வோர் ஆண்டவனது நல்லடியாரும், உத்தமபக்தசிகாமணியுமாவர். ஓர் ஏழைக்கு உணவளித்தல், அல்லது ஓர் உபகாரம் புரிதல், நேர்வழிகாட்டல், தீய மார்க்கத்தினின்றுந் தடுத்தல், ஆடையற்றோர்க்கு உடையளித்துதவல் முதலிய கருமங்கள் ஆண்டவனது பாதையில் புரியும் நற்சேவைகளாகும். ஏழைகள், அநாதைகள், எளியவிதவைகள், அந்தகர்கள், அங்கஹீனர்கள் முதலியோர் ஆண்டவனது பக்ஷத்துக்குரியவர்களாதலால், இத்தகையோர்க்கு உணவளித்தல், உடையளித்தல், சகாயஞ்செல்தல், ஆதரித்தல் ஆகிய நற்செயல்கள் அக் கருணாகர மூர்த்தியின் (அல்லாஹ்வின்) திருப்தியையும் திருவருளையும் நாம் பெற்றுய்வதற்குரிய வழியாகும்.

இரண்டாவது, ஓதியுணர்ந்தபடி அனுஷ்டிப்பதும், பிறர்க்குப் போதிப்பதும் அவசியமான கடமைகளேயாகும். ஆண்டவனது திருவேதம், மனித சமூகம் அதை ஓதியுணர்ந்து அதன் போதனைப்படி யொழுகுவதற்கும், உணர்ந்ததைப் பிறர்க்கு உணர்த்திவைப்பதற்குமென்று அருளப்பட்டதென்பது வெளிப்படை. "இது சர்வ லோகத்தாருக்கும் உரிய போதனையாகும்" என்று ஆண்டவனே தன் திருமறையில் விளம்பியுள்ளான். மேலும், "இத்திருவேதம் நல்லோர்கட்கு சன்மார்க்கமாகும்; இதில் யாதோர் ஐயமுமில்லை" என வேறோர்இடத்திலும்இறைவன் புகன்றுள்ளான். மற்றுமோர்இடத்தில், "பிறர்க்குப் போதியுங்கள், இப்போதனையானது நன்னம்பிக்கை யுடையோர்க்கு நற் பிரயோஜனம் தரும்" என்றுங் கூறியுள்ளான். இதனலெல்லாம் நாம் தெரிந்து கொள்வது யாதெனின், மனித சமூகத்தின் விமோசனத்துக்காக அருளப்பட்ட குர்ஆன் ஷரீபை ஓதியுணர்ந்து அதன் போதனைப்படி நடப்பதும், அப்போதனையைப் பிறர்க்கும் புகட்டி அதன்படி நடந்துய்யத் தூண்டுவதும் அவசியமான புனித காரியமென்பதே யாகும். இதுவே உத்தம பக்தர்களின் அழகிய நற்கருமமும், திருச்சேவையுமாகும். இங்ஙனமின்றி, குர்ஆனை ஓதியுணராமலிருப்பதும், ஓதியுணர்ந்தும் தானும் அனுஷ்டிக்காமலும் பிறர்க்கும் போதிக்காமலு மிருந்துவிடுவதும் தீயோர்க்குரிய அடையாளமாகும்என்பதுஇந்நாயகத் திருமொழியால் இனிது விளங்குகின்றது.

சுவன பதவிக்குரியவர் யார்?

யார் தன் இரு மோவாய்கட்டைக் கிடையிலுள்ளதை (நாவை) பற்றியும், தன் இரு கால்களுக்கிடையேஉள்ளதை (மர்மஸ்தானத்தை) பற்றியும் 'ஜாமின்' தருவாரோ அவருக்கு சுவனபதவி உண்டென்று யான் 'ஜாமின். தருகின்றேன்'' என்று நபி (ஸல்.) கூறியுள்ளார்கள். (புகாரீ)

நாவைச் சரிவர அடக்கியாளாததன் பயனாய் ஏற்படும் பாபங்களோ அளவிடற்பாலதன்று. மர்மஸ்தானத்தால் நேரிடும் பாபங்களோ மகா கோரமான பாதகங்களாகும். நாவால் நேரிடும் பாபங்கள் பொய், தூஷணை, புறம்பேசல், பிறரை வைதல், மற்றோரை மனம் நோகவைத்தல், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசல், வழக்குகளில் பொய்சாக்ஷியம் கூறல், பிறர் மீது அபாண்டப்பழி சுமத்தல், ஆண்டவன் இல்லையென்று கூறல், நாஸ்திக வாதம் புரிதல் முதலியவைகளாகும். இவைகளை எல்லாம் ஒருவன் ஒழித்துப் பரிசுத்தவானாய் விடுவானாகில், நிச்சயம் அவன் உத்தமோத்தமனாய் விடுதல் எளியகாரியமாகும். நாவினால் சித்தியாகும் புண்ணிய காரியங்களோ அனந்த மனந்தமாகும். இறைவன் மீது ஈமான் கொண்டு நாவால் உறுதிகூறல், ஆண்டவனைப் புகழ்ந்து ஜபித்தல், உண்மைப் பேசல், உபதேசம் புரிதல், குர்ஆன் ஓதல், முதலியவைகளாகும். 'நாவை யடக்கினல் க்ஷேமம் பெறலாம், என்பது முதுமொழியாகும். நாவை யடக்குவதென்பது எவ்விதநற் காரியங்களையும் புரியாமல்ஊமையைப்போல் மௌன விரதம்பூண்டிருந்துவிடுவதன்று. தீய காரியங்களைவிட்டு நாவைப் பேணி நற்காரியங்களுக்கு இடமளிப்பதாகும். தீயதை விட்டு நலனைக் கிரகிக்கும் இவ்வித புனித கருமத்தினால், நாவைப்பற்றி ஜாமின் தருவோர்க்கு சுவர்க்க பதவியுண்டென்று நபிகள் பெருமானார் (ஸல்.) திருவுளம்பற்றியது மிக மிக வாஸ்தவமும், பொன்னே போல் போற்றத் தக்கதுமான அரும் போதனையுமாகும்.

மர்மஸ்தானத்தினால் நேரிடும் தீயகருமம் யாவரும் அறிந்ததே. அத்தீக்கருமம் பெரும் பாபமானதுமாகும்.

حفاظة الإسلام مدراس

ஷரீ அத்தெ இஸ்லாம்.

இஸ்லாம் மார்க்கமானது புத்திக்கும் யுக்திக்கும் மிகமிகப் பொருத்தமான தென்பதும், மனிதரின் இயற்கைக்கு முற்றும் ஒத்தமைந்த தென்பதும், அது மனிதகோடிகட்கு இன்றியமையாத தென்பதும், அனுஷ்டானத்துக்கு மிகமிக இலேசான தென்பதும் உலகமறிந்த உண்மையாகும். நந் திருக் குர்ஆனனது சகல கலைகளையும் ஒருங்கே போதிக்கும் அரும் பெரும் கல்விக் களஞ்சியமாகும். சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் இம்மூன்றினுடைய இயல்புகளைப்பற்றியும் அத்திரு வேதம் பிரஸ்தாபித் திருக்கின்றது. நமது நபிகள் திலகம் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் அத்திருக் குர்ஆனின் போதனைகளை தம் அனுஷ்டான மூலமாகப் புரிந்து உலக மக்களுக்கொரு முன் மாதிரியாய்த் திகழ்ந்தார்கள். அப்பெருமானரவர்களின் அனுஷ்டானங்கள் நந்திருமறையின் போதனையின் காக்ஷிகளாவே துலங்கின; அவ்வள்ளலவர்களின் சற்குண ஒழுக்கங்களை திருக்குர்ஆனே சிலாகித்துக் கூறிவிட்டன. அத்தயாளரின் திவ்வியானுஷ்டானங்கள் எவ்வித மிருந்ததென வென்று ஆயிஷா நாயகி (ரலி.) யிடம் வினவியபோது, "அவர்களது அனுஷ்டானம் திருக் குர்ஆனகவே துலங்கிற்று" என்று விடைப்பகர்ந்துள்ளார்கள். திருக் குர்ஆனின் போதனை விபரங்களையும், கருத்துகளையும் எம்பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்கள் ஷஹாபாக்களுக்கு ஐயமற போதித்து வந்தார்கள். ஸஹாபாக்களும் அவற்றினை உறுதியாய் மனனஞ் செய்து பிற ஜனங்களுக்கு இனிதெடுத்து போதித்துவந்தார்கள்.

"என்னுடைய ஸஹாபாக்கள் நக்ஷத்திரங்களைப்போ லிருக்கின்றனர். அவர்களை நீங்கள் பின்பற்றுவீர்களாயின் பரமஜயம் பெறுவீர்கள்" என்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சிலாகித்துக் கூறியுள்ளார்கள். மேலும் இஸ்லாமிய பாரவான்களாகிய நம் இமாம்களும் குர்ஆன் ஷரீபைக்கொண்டும், ஹதீது ஷரீபைக் கொண்டும், ஹஸாபாக்களின் வியாக்கியானங்களைக் கொண்டும் சன்மார்க்கத்தின் சட்டதிட்டங்களை நிர்ணயித்து மக்களுக்கு போதித்தார்கள். அதையே முஸ்லிம் சமூகத்தினர் பின் பற்றி அனுஷ்டித்து வருகின்றனர். இங்ஙனம் மார்க்க பக்தி பூண்டு நந் தீனுல் இஸ்லாத்தின் அனுஷ்டான முறைகளை ஒழுங்குபடுத்தி அனுஷ்டித்து வந்த காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் சீரும் சிறப்பும் பெற்று முன்னேறி வாழ்ந்து வந்தனர் என்பது சரித்திர உண்மையாகும்.

நம் முஸ்லிம் சமுதாயம் அனுஷ்டித்தொழுகவேண்டிய ஆசார நடை முறைகள் நம் இஸ்லாமிய பெரியோர்களால் நன்கு விளக்கப்பட்டுப் போன விஷயங்களாகும். அகீதாக்களாகிய நிர்ணயங்கள் நமதிஸ்லாத்தின் முக்கியமான அம்சங்களாகும். நமது நிர்ணயங்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் எள்ளத்துணையேனும் மாருயிருப்பது முற்றுங் கூடாத காரியமாகும். நிர்ணயத்தில் ஒரு சில மாறுதல் எற்படினும் நம் ஈமான் சிதையுற நேரிடுமென்பது திண்ணம். இதனை பாதுகாத்துக் கொள்ளவேண்டியது ஒவ்வொரு

முஸ்லிமுடைய முதற்கடமையாகும். தம்தம் ஈமானை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எத்துணை பிரதானமான விஷய மென்பதை நேயர்கள் நன்குணர்ந்தேதாமிருப்பர்.

இப்பிரபஞ்சத்துப் பல்கலைகளில் எந்தக் கல்வி யாயினும், எவ்வித ஞானமாயினும், எவ்வண்ணமான சைன்ஸாயினும் நந்தீனுல் இஸ்லாத்தின் போதனைக்கு ஒத்தமைந்த தாயின், அது முஸ்லிம்கட்கு வேண்டற்பாலதேயாகும். அவ்விஷயம் இஸ்லாத்துக்கு சிறிதேனும் விகற்பமாயிருப்பின், அதனை திரஸ்கரித்து இஸ்லாமிய போதனை யொன்றினையேபின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மனித சமுதாய முன்னேற்றத்துக்கு பரிசுத்த இஸ்லாத்தின் அரும் போதனைகளே சாலச்சிறந்த தென்பதை இவ்வுலக நிகழ்ச்சிகளே நிரூபித்துக் காட்டி வருகின்றன. ஆனால், ஒரு சில பிற்போக்காளர் இஸ்லாம் மதம் மனித முன்னேற்றத்துக்கு தடைக்கல்லா யிருக்கின்றதென நினைத்தும் பறைசாற்றியும் வருகின்றனர்; இவர்களின்இக்கூற்றுக்கு சன்மார்க்கதத்துவத்தை நன்கறியா பாமரமக்கள் செவிசாய்த்து நடப்பதால் எத்துணை தீமைகள் நேரிடுகின்றன வென்பது வெளிப்படை. ஆகவே வழிகேட்டுக்குக் காரணமாகவுள்ள தீயப்பிரசாரகர்களின் விபரீதக்கொள்கைகள் பரவா வண்ணம் பாமரமக்களுக்கு சத்தியமின்ன தென்பதை எடுத்துக் கூறி நஞ்சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு அறிஞர்களுடைய கடமையாகு மென்பது நாம் சொல்லித் தெரியவேண்டிய தில்லையன்றோ? நேயர்கள் நம் சுத்தசத்திய தீனுல் இஸ்லாத்தின் நேர்மையான நிர்ணயங்களையும், அநுஷ்டான ஆசாரங்களையும், பின்பற்றி ஒழுகி இகபரநலம் பெற்றுய்வார்களாக!

ஆசிரியர் குறிப்பு

காலஞ்சென்ற வி. மீ. அப்துர் ரஹ்மான் அம்பலம் மர்ஹூம் அவர்கள் :— ரெங்கூன் பிரபல வியாபரப் பிரபுவும், ஸோலிய முஸ்லிம் அசோஷியேஷன் ஜீவிய அக்கிராசனுதிபதியும், B. I. S. N. &. கம்பெனியின் சப் ஏஜண்டும், பற்பல தர்மங்களைப் புரிந்தவரும், நம் சங்கத்தின் போஷகரும், பொதுநல ஊழியரும், உலமாக்களின் அன்பரும், கொடை வள்ளலுமான ஆலீ ஜனப் வி. மீ. அப்துர்றஹ்மான் அம்பலமவர்கள் 8-9-31 ல் ரெங்கூனில் மாரடைப்பு நோயால் அகால மரண மடைந்தார்களென்று தெரிந்து மிக விசனிக்கிறோம். (இன்னலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) கனம் மர்ஹூம் அவர்கள் நம் மார்க்கத்திற்கு செய்திருக்கும் தொண்டுகள் அளவிட முடியாததாகும் நமது சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபொழுது ரெங்கூன் ஸோலிய முஸ்லிம் அசோஸியேஷனின் நிர்வாக சபை கூட்டி சங்கத்தை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அத் தீர்மானத்தை நமக்கறிவிக்கும் சமயம் ரூ 200 நன்கொடையும் அனுப்பிவைத்தார்கள். அதன்பின் அவர்கள் சென்னைக்கு விஜயஞ் செய்தக்கால் நாம் அவர்களைக் கண்டு பேசியபோது நமது சங்கநோக்கத்தின் மீது மிக அன்புடையவராகவே காணப்பட்டார்கள். அவர்களின் விஜயத்தை முன்னிட்டுநாம் உபசாரம் நடத்தியபொழுது நமது சங்கத்தின் சேவையையும்நோக்கத்தையும்பார்த்து ரூ 1,000 நன்கொடை அளித்ததுடன், சங்கத்தின் முழு நோக்கமும் இனிது பூர்த்தியடையவேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும், இனியும் இச்சங்கத்திற்கு தங்களாலான உதவிபுரிவதாகவும் கூறினார்கள். தவிர சங்கம் தனது சேவையில் ஈடுபட்டு திருப்திகரமாய் நடைபெற்று வருவதைப்பார்த்து மன மகிழ்ச்சி அடைய ஆண்டவன் கிருபைசெய்ய வேண்டுமெனவும் கூறினார்கள். ஏக பராபரனை அல்லாஹ் தஆலா மவுத்தாவுக்கு (மக்பிரத்) பிழை பொருத்தருள்வதுடன், அவர்கள் பந்துமித்திரர்களுக்கு அழகிய ஸப்ரையும் அருள்புரிவானாக! நமது அனுதாபத்தை அவர்களது புத்திரர்களுக்கும் சகோதரர்கட்கும் மற்றும் உறவினர்கட்கும் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்கள் ஸ்தானத்தை வகிக்கும் அவர்களது குமாரர்கள் பொதுநல காரியங்களிலும் மார்க்க சமூக அபிமானத்திலும் அவர்களது அருமைப் பிதாவாகிய மர்ஹூம் அம்பலம் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து நற்பயனையும் கீர்த்தியையும் பெறுவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

முஃஜிஸாக்களின் உண்மை.

(எம். வி. அப்துல் ஜப்பார் எழுதுவது)

சோதரீர்! நபிகள் திலகம் ரஸூல் (ஸல்.) அவர்களுக்கு அநேக முஃஜிஸாக்களென்னும் அற்புதங்கள் நிகழ்ந்தனவென்பது பிரசித்தமான விஷயமாகும். அவற்றுள் எண்ணிறந்த முஃஜிஸாக்கள் திருக் குர்ஆனிலும், ஸஹீஹான ஹதீதுகளிலும் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளை முஸ்லிம்கள் உண்மையானதென ஒப்புக்கொண்டே தீரவேண்டுமென்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். அவை சம்பந்தமாக எற்படும் ஐயவினுக்களுக்கு முஸ்லிம் அறிஞர்கள் தக்கவிடை பகர கடமைப்பட்டிருக்கின்றனர். அவ்வப்போது விடையும் பகர்ந்தும் வருகின்றனர். சிலர் ஆதாரமற்ற விஷயங்களையும் முஃஜியாவென்றுகூறுவதுமுண்டு. இது சம்பந்தமான விபரங்களை தக்க ஆதாரத்தோடு அல்லாமா ஸையத் ஸுலைமான் நத்வீ அவர்கள் தங்கள் "ஸீரத்துன்னபீ" மூன்ருவது பாகத்தில் பாகுபடுத்தி விளக்கியுள்ளார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, தா. இ. ஆசிரியர்கள், குர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அநேக முஃஜிஸாத்துகளென்னும் அற்புத நிகழ்ச்சிகளைமறுத்து அஃது இயற்கையான நிகழ்ச்சிகளென்றே திரித்துக் கூறிவந்திருக்கின்றனர். இதன் விபரங்கள் "ஜவாஹிருல் புர்கானி" லிருந்து பன்முறை எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அன்னவர்களின் கொள்கைகட்கேற்ப தமது தா. இ. ஹிஜ்ரீ மலரில் 'எல்லா முஃஜிஸாக்களையும் நிராகரித்துக் கூறுந் தோரணையில், தா. இ. ஹாபிஸால் நீண்ட வியாஸமொன்று வெளியிடப்பட்டிருந்தது. அதனை கண்டனஞ் செய்து தக்க ஆதாரங்களுடன் வியாஸமொன்றைசென்றஜுலைமாத "ஹிபாஜத்துல்இஸ்லாம்" பத்திரிகையில் எழுதியிருந்தேனென்பதை நேயர்கள் படித்தறிந்திருக்கலாம். அதற்கு 4-9-31-ல் வெளியான தா. இ. வில் "இப்பொழுது என்ன விடை" என்ற தலைப்பின்கிழ் ஹாபிஸ் பாகவீ வரைவதாவது:—

"............கண்டனூர் என்னுமிடத்திலிருந்து "பாரத மித்திரன்" என்று ஒரு வாரப் பத்திரிகை வெளியாய்கொண்டிருப்பதாய்த் தெரிகின்றது. இப் பத்திரிகையில் 'முஹம்மதிய மதத்தின் பெரியநபியென விளங்கும் முஹம்மது நபி யென்பார் புற்றைப் பேசவைத்திருக்கிருரென்று சீராப் புராணங் கூறுகின்றது. இதை நீர் ஒப்புக்கொள்கிறீரா? புற்று ஜடவஸ்துவல்லவா? ஜடவஸ்துவாகிய புற்றுக்கு உயிருண்டா? முகமுண்டா? வாயுண்டா? பற்களுண்டா? நாக்குண்டா? மேற்கூறியவைகளிலிருந்தாலல்லவா புற்று பேசும்? இவையொன்றும் அப்புற்றுக்கு இருந்ததாக அந்நூலில் கூறவில்லையே? கூறுதபோது புற்றுப் பேசியதென்று எவ்வாறு நம்ப முடியும்? இச் சரித்திர கர்த்தாவாகிய முஹம்மது நபி யொருவர் இருந்தாரென்பது நம்பக்கூடிய தொன்றோ?' என்று ஒருவர் வரைந்திருக்கின்றார். இவர் எழுதியவைகளுக்கு விடை சொல்வது ஒருபுறமிருக்க, எமது முஸ்லிம் நேயர்களிடம் நாம் கேட்பதென்னவெனில், புற்றுப் பேசியதென்பதை மறுத்துக்கொண்டிருக்கும் இந்த ஹிந்துவுக்கு நீங்களென்ன விடை யிறுக்கப்போகின்றீர்களென்பதே. ஒரு சமயம் நான், நாயகம் (ஸல்.) அவர்கள்மீது கட்டிவைக்கப்பட்டிருக்கும் பொய்யான ரிவாயத்துகளை எடுத்துச் சொன்னது தங்களுக்கெல்லாம் ஞாபகமிருக்கலாம். அதுவும் நான் சொந்தமாய்ச் சொல்லாது மௌலானு செய்யித் சுலைமான் நத்வீ அவர்கள் தம்முடைய ஸீரத்துன்னபீயின் மூன்ரும் வால்யத்தில் குறிப்பிட்டிருப்பதைத்தான் சொல்லியிருந்தேன்............உண்மையைக் கவனிக்குமிடத்து நமது வள்ளல் (ஸல்.) அவர்களுக்கு ஆதாரமற்றனவும், பொய்

யானவுமான அற்புதங்களினல் மகிமை யொன்றும் உண்டாய்விடப்போவதில்லை யென்பதை குறுகிய மனப்பான்மை யுடைய பெரியார்கள் அத்தியாவசிய மாய்த் தெரிந்துகொள்ளல் வேண்டும்.... ....நாயகமவர்களுக்கு உண்மையிலே யே காணப்படும் முஃஜிஸாத்துகளை நாம் எடுத்தோதுவோமாயின் எல்லா மக்க ளும் எவ்வித மறுப்பும் சந்தேகமு மின்றி ஒத்துக்கொள்ளக்கூடிய விஷ யமா யிருந்துவரும்."

மேற்கண்ட கூற்றுகளிலிருந்து புற்று பேசிய முஃஜிஸாவை பொய்யான கதை யென்று ஹாபிஜ் கூறுகின்ருரென்று தெள்ளென விளங்குகிறது. சீராப்புராணத் தில் கூறப்பட்டிருக்கும் அற்புத நிகழ்ச்சிகள் யாவும் சரியான ஆதாரங்களைக்கொண்டு நிரூ பித்துக் கூறப்பட்டிருக்கின்றனவா? இல் லையா வென்பதைப்பற்றிய விவாதத்தை ஈண்டு நான் எடுத்துக்கொள்ளவில்லை. புற் றுக்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக் காக பேசினதா? இல்லையா? என்பதை கவ னிக்கவேண்டும்.

ஸஹீஹ் புகாரியில் உமர்கத்தாப் (ரலி.) இஸ்லாத்ததை தழுவிய விபரத்தைக் கூறும் அத்தியாயத்தில் வரையப்பட் டிருப்பதா வது:—"இஸ்லாத்துக்கு முன் யான் ஒருநா ளன்று ஒரு விக்கிரகத்தின் சமீபமாக நித் திரை செய்துகொண்டிருந்த சமயத்தில் ஒரு மனிதன் ஒரு கன்றுக்குட்டியைக் கொண்டு வந்து அவ் விக்கிரகத்துக்குப் பலியிட்டான். அந்நேரத்தில் "ஒய்! ஜலீஹ்! சித்திபெறக் கூடிய ஒருவிஷயம் என்னவென்ருல், அல் லாஹ்வைத் தவிர வணக்கத்துக் குரியவன் எவனுமில்லை யென்று நாகரிகமுடைய ஒருவர் கூறுகின்ருர்" என என்றுமே நான் கேட் டிராத அவ்வளவு பெரிய தொனியில் ஒருசப் தம் அந்த விக்கிரகத்துக்குள்ளிருந்து கிளம் பியதைக் கேட்டேன். இச் சப்தத்தைக்கேட் டதும் அங்கு கூடியிருந்த யாவரும் பயந்து ஒடிவிட்டனர். எனினும், யான் மட்டில் இதன் உண்மையை அறிந்துகொள்ளாமல் அவ்விடத்தைவிட்டுச் செல்வதில்லை யென்ப தாக உறுதிகொண்டு அசையாது அவ்விடமே நின்றிருந்தேன். பின்னும் பின்னும் அதே சப்தத்தை இரண்டுமுறை செவியுற்றேன் இச் சம்பவம் நிகழ்ந்த சொற்பநாட்களுக்குள் ளாகவே நபி பெருமானர் (ஸல்.) அவர்கள் தம்மை நபியென்று கூறுவதாக மக்காவில் பிரஸ்தாபம் ஏற்பட்டது!"

ஸீரத்துன்னபீ மூன்ருவது வால்யூம் 555-பக்கத்தில் இச் சம்பவம் புகாரீஷரீபிலிருந்து எடுத்தெழுதப்பட் டிருக்கிறது. எனவே, இதில் சந்தேகங்கொள்ள எவ்விதத்திலும் இடங்கிடையாது. ஸய்யித் ஸுலைமான் நத்வீ சாஹிப் அவர்களும் இதனை ஆதார முள்ள அற்புதங்களில் சேர்த்துக் கூறியிருக் கின்ருர்கள். 'ஸீரத்துன்னபீ' யை ஆராய்ச்சி செய்ததாகப் பறைசாற்றிக் கொள்ளும் ஹாபிஸ் பாகவீ இதனை மறுப்பதற்கு எவ் வித முகாந்தரமுங் கிடையா தென்பது நிச்சயம். சிற்சில நிகழ்ச்சிகளைக் குறிப் பிட்டு அவற்றிற் குத் தகுந்த ஆதாரமில்லை யென்று ஸய்யித் ஸுலைமான் நத்வீ யவர் கள் கூறியிருக்கும் காரணத்தை முன்னிட்டு எல்லா அற்புதங்களையும் ஒரே அடியாய் மறுப்பதற்கு முற்படுவது பெரும் விந்தை யாகவே காணப்படுகின்றது. இதனல் புற் றுப்பேசிய விஷயத்தில் எவ்வித சந்தேகமுங் கிடையாதென்பதை நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளுகிருேம்.

"பாரத மித்திரன்" என்னும் பத்திரிகை யில், நபிகள் நாயகம் அவர்களுக்காக புற்று பேசியதென்ற விஷயத்தை நம்புவதற்கில்லை யென்றும், அதற்கு வாயுண்டா? பல் லுண்டா? நாக்குண்டா? என்று வினவியும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இக் கேள்வி இக்காலை மிகமிக அனவசியமான தென்றே கூறுகின்றேன். இக்காலை கிராம்போன் பிளேட் பேசுவதைக் காண்கின்ருேம். அதற்கு வாயோ, பற்களோ, நாவோ, உயிரோ, இல்லா மல் பேசுகிறதென்பது பிரத்தியக்ஷம். ஆனல் 'ஏதோ ஒரு யந்திரசக்தி அதைப் பேசச் செய்கிறது' என்றுகூறமுற்படுவாருயின், இவ் வாறேதான் "தெய்வீக அந்தரங்க சக்தியினல் அந்தப் புற்றுப் பேசிற்று" என யாம் வலி யுறுத்திக் கூறுவோம். ஆனல் இங்கு இவ் விஷயத்தில் நாம் ஆச்சரியப் படக்கூடிய விந்தையான விஷயமென்னவெனில் ஹாபிஸ் சாஹிப், முஃஜிஸாத்துகளில் ஆதாரமுள் ளது இன்னது? ஆதாரமில்லாதது இன் னது? என்பதைத்தெரிந்து கொள்ளாமல் எல்லாவற்றையும் ஆதார மில்லாதவை

யென்று நிராகரிக்க முற்பட்டு விட்டதுதான். இது அவரது விஷய ஞானமின்மையையே விளக்குகின்றது. மேலும் இவர் இவ்வாறு தத்தளித்துத் தடுமாறுவதிலிருந்து தான் ஏதோ முஃஜிஸாத்துகள் சம்பந்தமாக வினவுவதற்கு இடமிருக்கிறதென்று ஹிந்து பத்திரிகைகளும் நம்பி வியாஸங்களெழுதத் துணிந்து விடுகின்றன.

அக்பர் பாஷாவின் கல்வித்திறமை.

"அக்பர் சக்ரவர்த்தி படிக்கத்தெரியாத, கல்விஞானமற்ற, பாமரராயிருந்தார்" என இந்திய சரித்திராசிரியர்கள் பல்லோரும் ஒரு முகமாய் எழுதிவைத்துச் சென்றுள்ளனர். ஆனல், உண்மையை ஆராய்ந்து பார்க்குங்கால் அக் கூற்று பொய்யென்பதும், அதற்கு அணுவத்துணையும் ஆதாரமில்லையென்பதும் நன்கு வெளியாகின்றது. அக்கூற்று ஓர் அபவாதமொழியாகவும், தலைவாலில்லாத கட்டுக்கதையாகவும் காணப்படுகின்றது. ஆகவே, ஈண்டு அக்பர் சக்ரவர்த்தியவர்களது கல்வித் திறமையின் நிலையென்ன? வென்பதைப் பற்றிச் சிறிது ஆராய்ந்து, உண்மை என்னவென்பதை அறிந்துகொள்வோம்.

'அக்பர் பாதுஷா எழுதப்படிக்கத் தெரியாத மூடர்,' என்று முதல் முதல் பொய்க் கதை கட்டி விட்டவர்களுள் முக்கியமானவர்கள் போர்த்துக்கேசியர்களான மான்ஸ்ரேட், ஜய்ரோம் ஸேவர் ஆகிய இரு பாதரிகளுமே யாவர்.

மான்ஸ்ரேட் என்பார் கிறிஸ்துவப் பிரசாரம் செய்வதற்காக வந்தவர். இவர் அக்பர் மன்னருடைய அனுமதிப்படி அக்காலை புர்கவ்வா என்னுந் தன்னிருப்பிடத்தினின்று கி. பி. 1568-ம் வருடம் டிசம்பர்மாதம் 3-ம் தேதி அக்பர் மன்னருடைய சமுகத்துக்கு வந்திருந்தார். இவர் கி. பி. 1583-ம் ஆண்டுவரை அக்பர் ஆண்ட நாட்டிலேயே வசித்து வந்தார். இன்னவர் பொதுவாக முஸ்லிம்கள் மீதும், குறிப்பாக இஸ்லாமிய மன்னர் மீதும் மிகக் குரோதம் கொண்டவராதலால் தமது நூலொன்றில் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"அக்பர் படிக்கவும் எழுதவுந் தெரியாத மூடராய் இருந்தார். ஆனல் விசித்திர வழக்கமும் கூரிய புத்தியுமுடையவராயிருந்தார். உலமாக்களும், அறிஞர்களும் எந்நேரமும் இவரைச் சூழ்ந்தவண்ணமே இருந்துவந்தனர். அக்பர் மன்னர் அந்த அறிஞர்களுடன்பற்பலமர்க்கமஸ்அலாக்களைப்பற்றியும்,பொது விஷயங்களைப்பற்றியும், சமவாதமும் ஆராய்ச்சியும்புரிந்துகொண்டிருப்பார். இன்னும் அவர்களிடமிருந்து கதைக் காவியங்களையும் செவியுற்றுக்கொண்டிருப்பார்."

இரண்டாவது நபரான ஜய்ரோம் ஸேவர் என்பார் கத்தோலிக் கிறிஸ்துவ வர்க்கத்தைச் சேர்ந்த பாதிரியாவர். முதல்வர் அக்பர் மன்னருடைய இராஜ்ஜியத்தினின்றும் வெளியேறிவிட்டபின்னர்இந்தஇரண்டவதுநபர்ஒரு புதிய தூதுவராக அக்பருடைய ராஜ்ஜியத்துக்குப் போய்ச் சேர்ந்தார். இன்னவர் கி. பி. 1598-ஆம் ஆண்டில் எழுதிய நிருபமொன்றில் அக்பர் மன்னரைப்பற்றி எழுதியிருப்பதாவது:—

"அக்பர் சக்ரவர்த்திக்கு மிக அபூர்வமான தீக்ஷண்ய ஞான மிருந்துவந்தது. அன்னவர் எழுதவோ படிக்கவோ தெரியாத மூடராயிருப்பினும், ஆலிம்-அறிஞர்கள் தர்க்க வாதங்கள் செய்யும்போது மிக சிரத்தையுடன் அவற்றைச் செவியேற்று விஷயங்களை மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைத்துக்கொள்வார். இன்னமும் பிறரைக்கொண்டு பல விஷயங்களை படிக்கச்செய்து அவற்றைச் செவியுற்று ஞாபகத்தில் வைத்துக் கொள்வார். எனவே அவர் பலவற்றையும் அறிந்தவராயிருந்தார்."

கத்தோலிக் கிறிஸ்துவப் பிரசாரகர் இருவர் கூறிய மேற்படி இரு கூற்றுக்களையும், தக்க சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்தால்தான் அவை எத்துணை தூரம் பொய் அல்

லது மெய் என்ற விஷயம் வெட்ட வெளிச்சமாகும். மேலும் அப்பிரசாரகர்கள் அவ்விஷயத்தை அனுபவபூர்மாய்க் கண்டறிந்து கூறுகின்றனரா? அல்லது குருட்டுவாதமாய் திரித்தோ, கேள்விபட்டதாகவோ கூறுகின்றனரா? வென்பதையும் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

அக்பர் மன்னர் எழுதப்படிக்கத்தெரியாதவரென்று அப்பாதிரிகள் குறிப்பிடுவது ஒன்று மதக்குரோதங் கொண்டு கூறியதாகத் தானிருக்கவேண்டும். அல்லது ஆதாரமில்லாமல் காதில் விழுந்ததை உண்மையென்று நம்பிக்கூறியகட்டுக்கதையாகத் தானிருக்கவேண்டும். ஏனெனின், பொதுவாக சுயேச்சையுடன் ஆளும் இஸ்லாமிய அரசர்களுடைய ஆக்ஷிக்குள் வந்து தயவுபெற்று வதியும் அன்னிய வர்க்கத்தினர்கள் அநேகமாக நம்பிக்கைக் குரிய யோக்கியமான மனிதர்களா யிருப்பதில்லை. ஆகவே அவர்கள் ராஜ தர்பாரின் பொதுச் சபைக்கு மாத்திரம் வர அனுமதிக்கப்படுவர்களே யல்லாமல், அரசரின் பிரத்தியேக—அந்தரங்க சபைக்குள் வர அனுமதிக்கப்படுவது கிடையாது. ஆகவே, இத்தகையோர் அவ்வரசர்களது அந்தரங்க விஷயங்களைப்பற்றிக் கூறும் விஷயங்கள் உண்மைக்கு மாறாகவோ, கேள்விப்பட்டதாகவோ தானிருக்கும். எனவே அக்கூற்றினை உண்மையென நம்புவது கூடாது.

அக்பர் சக்ரவர்த்தி எழுதுவதும் படிப்பதும் அவரது சொந்த—அந்தரங்க விஷயமாதலால் அதைப்பற்றி அயல்நாட்டு மதப்பிரசாரங்கள் கூறுங்கூற்று வாஸ்தவமென்று கொள்வது நியாயமாகாது. மேலும் மேற்படி பாதிரிகள் இந்தியதேச சரிதையை யொட்டி எழுதியுள்ள இதர கட்டுரைகளில் அறியாமையின் காரணத்தால் கைகொட்டிச் சிரிப்பதற்கு லாயக்கான தப்புந்தவறுமான விஷயங்களை சுயமாகக் கற்பனை செய்து மனம் போனபடி எழுதிவைத்துள்ளனர். அவற்றினின்று மாதிரிக்காக சிலவற்றை கீழே குறிப்பிடுவோம்:—

(1) "நர்பதா நதி அஹ்மதாபாத்தில் உற்பத்தியாகி அந்நகரைக் கடந்துசெல்கின்றது"

(2) "ஸம்பல் நதியானது சிந்து நதியின் கிளை நதியாகும்"

(3) "தய்மூர் அரசனுடைய காலத்தில் டில்லி நகரத்தில் கிறிஸ்துவ அரசர் ஆக்ஷி புரிந்து கொண்டிருந்தனர்."

(4) 'அக்பர் மன்னருக்குப் பணம் தேவைப்பட்டால் மஸ்ஜிதுடைய பொதுப்பணத்திலிருந்து அபகரித்துக்கொள்வது வழக்கம்."

இந் நான்கு விஷயங்களும் முழுத்தவறுகள் என்பதை அற்ப சரித்திர ஞானமுள்ள எவனும் எளிதில் தெரிந்துகொள்வான். இவ்விதப் பொய்களினால் அந்தப் பாதிரிகளுக்கு என்ன கீர்த்தி எற்படுமோ தெரியவில்லை. இஸ்லாமிய மஸ்ஜித்களின் பணத்தைச் செலவுக்கு எடுத்துக்கொள்ள, அதை சோமனாதர் கோவில் என்று அந்தப் பாதிரிகள் எண்ணிக் கொண்டனர்போலும்! பாதிரிகளின் மேற்படி கூற்றுகள் முற்றும் பொய்யென்பதை எண்பிக்க அதிகமாக இதைவிட வேறு அத்தாக்ஷி அவசியமில்லை யென்றே கருதுகிறோம்.

அக்பர்மன்னரின் கல்விஞானம்.

அக்பர் பாதுஷா அவர்கள் சன்மார்க்கக் கல்வியிலும், லௌகீக கல்வியிலும் உலக அனுபவத்திலும், எத்துணைத் தேர்ச்சியும் ஆற்றலுமுடையவராயிருந்தாரென்பதைஈண்டு எடுத்துக் கூறுவது அத்தியாவசியமாகும். இதை நாமே ஸ்திரப்படுத்திக்கூறுவதைக் காட்டினும் அரசருடன் நெருங்கிப் பழகி அவரது அருமைத் தோழராயிருந்தவரும், அவரது நம்பிக்கைக் குரித்தானவராயிருந்து வந்தவருமான "அல்லாமா அபுல் பஜல்" அவர்களுடைய மெய்யான எழுத்து அத்தாக்ஷியை கொண்டே எடுத்தோதுவோம். அல்லாமா அபுல்பஜல் அவர்கள் தமது "ஆயீனே அக்பரீ" என்னும் கிரந்தத்தில் எழுதியிருப்பதாவது:—

"தினந்தோறும் (அக்பர் மன்னரவர்கள்) தமது காரியஸ்தலத்துக்குச் சென்று தமது சொந்த எழுதுகோலினால் "ஹந்தஸா" வின் நக்ஷாக்களை எழுதிவருவார். இன்னும் புஸ்தகத்தில் தாம்படித்து முடிக்கும் ஏடுகட்டு சிகப்பு மையினால் அடையாளம் வைத்து வருவார்.

இன்னமும், 'உமர்பேரிய்யா' என்னும் கல்விக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதில் தினந்தோறும் எவரேனும் பாண்டித்தியமுடையவர் ஒருவர் கிதாபுகளைப் படிப்பார். அதனை அக்பர் மன்னர் ஆழ்ந்து கேட்டு விஷயங்களை விளங்கிக்கொள்வார். படிப்பவர் தின

மும் நிறுத்தும் இடத்தில் (புத்தகத்தில்) அக்பர் மன்னர் தமதுகரத்தாலேயே பக்கங்களின் தொகை, தேதி, கையெழுத்து முதலியவற்றை எழுதிவைப்பார். இவ்வாறே அக்பர் மன்னர் தமது கல்விஞான ஆற்றலை மிகவும் அபிவிருத்திக்குக் கொண்டுவந்தார். எந்தக் கல்வித்துறையிலாகட்டும் எவரேனும் அறிஞர் எழுதிய லாயக்கான புத்தகங்களில் அக்பர் சக்கிரவர்த்தி படித்துக் கேட்டுணராத தொன்றுமில்லை யென்பது உண்மை. மேலும் நல்ல புத்தகமாயின் ஒன்றுக்குப் பன்முறை திரும்பத் திரும்பப் படிப்பதும் கேட்பதுமுண்டு. கல்வி விஷயத்தில் மட்டும் அக்பர் மன்னர் சலிப்பு கொள்வதே கிடையாது. எப்போதும் உற்சாகமுள்ளவராகவே திகழுவார்."

அக்பர் சக்கிரவர்த்தி யவர்கள் நன்கு படித்து கற்றுணர்ந்த இஸ்லாமிய கிரத்தங்களின் நாமங்கள் பின்வருமாறு காண்க :—

(1) அக்லாகெ நாஸிரீ.
(2) காபூஸ் நாமா.
(3) கீமியா யெ ஸஆதத்து.
(4) குலிஸ்தான்.
(5) போஸ்தான்.
(6) ஹதீகயெ ஹகீகத் ஸனயீ.
(7) மஸ்னவீ மஅனவி.
(8) ஜாமெ ஜம்.
(9) ஷாஹ நாமா.
(10) கம்ஸயெ நிஜாமீ.
(11) கம்ஸயெ அமீர் குஸ்ருவும், இதர நூல்களும்.
(12) ஜாமீயின் நூல்கள்.
(14) தவாவீன் அன்வரீ, காகானீ முதலியன.

ஈண்டு கூறிய முதல் விஷயத்தால், அக்பர் மன்னர் அவர்கள் வானசாஸ்திர கணிதமான "ஹந்தஸா" எழுதவும் கற்றுணர்ந்தாரென்று தெரிகிறது. மற்ற விஷயங்கள் எழுதக் கற்றறிந்தபின்னர்தான் "ஹந்தஸா" கற்பித்துக் கொடுக்கப்படுவது அக்கால வழக்கம்.

இன்னமும் ஈண்டு பெயர்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள நூற்கள், ஞானம், தத்துவ சாஸ்திரம், ஒழுக்க நூல் முதலியவற்றில் சிறந்தனவாகும். இவ்வாறே "காபூஸ் நாமா" எனப்படுவது சரித்திரக் கலை வகையில் பிரசித்திபெற்றதாகும். ஆகவே, பல கிரந்தங்களைக் கற்றுணரவல்ல அக்பர் பாஷா எழுதவும் படிக்கவும் தெரிந்துகொள்ளாதவரா யிருந்தாரென்று பாதிரிகள் எழுதியது பொய்யென்று நன்கு தெரிந்துவிட்டது.

அக்பர் மன்னரின் நுட்பபுத்தியும் ; வாக்கு வன்மையும்.

அக்பர் அரசர் அவர்கள், பற்பல மதத்து அறிஞர்கள், மேதாவிகள், ஆலிம்கள் ஆகியோர்கூடி சமவாதம் புரியும் சபைகளில் கலந்து தாமும் சமமாய்த் தர்க்கவாதமும் ஆராய்ச்சியும் புரியும் ஆற்றலும் நுட்பபுத்தியும் உடையவராயிருந்தார் என்றும், சமவாதத்திலிருந்து நுட்பமான விஷயத்தை விளங்கிக்கூறுபவராயிருந்தாரென்றும், மிகவும் நேர்மையான தீக்ஷண்ணிய சுபாவமும் உற்சாகமான தன்மையும் உடையவராயிருந்தாரென்றும், உயர்தரமான முறையில் ஆராய்ச்சிப் புரிபவராயிருந்தாரென்றும் அநேக கிரந்த கர்த்தாக்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். இத்துணை விஷயஞானமும், தத்துவ ஆராய்ச்சியும், தெய்வபக்தியும், ஒழுக்கத்திறனும், ஆசாரப்பற்றுமுடைய உத்தம அரசரை படிக்கவும் எழுதவும் தெரியாத மூடர் என்று கூற முன்வந்த கிறிஸ்துவப் பாதிரிகளின் குறுகிய புத்தியை என்னென்றியம்புவது?

கவிவன்மை.

அக்பர் மன்னர் சுயமாய்க் கவி படித்துக் கவி பாடும் வன்மையுடையவரா யிருந்தாரென்றும், பிறர் கூறும் கவியிலுள்ள குற்றங்குறைகளைக் கண்டு பிடித்து திருத்திக்கொடுப்பவரா யிருந்தாரென்றும் சரித்திர கிரந்த கர்த்தாக்கள் எழுதிவைத்துள்ளார்கள்; அக்பர் அரசர் சிறந்த கவிவாணர்களின் திவ்வியமான கவிகளைச் சிலாகித்து அதற்கு தக்கபடி சன்மானமளிக்கும் தன்மையாளரா யிருந்தார். "பித்ரதீ கஷ்மீரி" என்பார் எழுதிக் காட்டிய "நாலடிக் கவி"யை மெச்சிய அக்பர் மன்னர் அவருக்கு 'பன்னிரண்டாயிரம் நாணயம்' சன்மான மளித்தாரென்று "கஜானயெ ஆமிரா" என்ற நூலாசிரியர் எழுதியுள்ளார்.

அக்பர் பாஷாவுக்கு பார்ஸீ பாஷையில் அதிக பாண்டித்தியமிருந்தது. ஞானம், தத்துவம், மார்க்கம் முதலிய கல்விகளை பார்ஸீயிலேயே பெரும்பாலும் கற்றுத் தேர்ந்தார். பிரபல பார்ஸீ கவிவாணரான "ஹாபிஜ்" அவர்களுடைய கவிகளை அதிகப்பற்றுடன் படித்து வருவார்.

சன்மார்க்க கல்வி.

அக்பர் மன்னரின் பால்யத்தில் அவருக்கு சன்மார்க்கக் கல்வி கற்பித்து வைப்பதில் அவரது அன்னையார் 'ஹமீதா பானு' மிகவும் சிறத்தையுடையவரா யிருந்தார். தினமும் இருவேளையும் தவறுமல் பிரபல ஆசிரியரான 'ஷெய்கு அப்துன் னபீ' அவர்களுடைய சமுகத்தில் 'ஹதீஸ்' பாடங்களை கற்றுக்கொள்ள அனுப்பி வைப்பார்.

ஷெய்கு அப்துன்னபீ, இஸ்லாமிய மகானுன ஹஜ்ரத் ஷெய்கு அப்துல் குத்தூஸ் கங்குஹீ (ரஹ்.) அவர்களது பேரராவர். ஹுமாயூன் மன்னர் இவ்வாசிரியருக்கு "ஸத்ருல் இஸ்லாம்" என்ற சிறப்புப் பதவியை அளித்திருந்தனர். பேரம்கான் இப்பெரியாருக்கு வருடந்தோறும் லக்ஷம் ரூபாய் அளித்து வந்தார். இஸ்லாமிய (வக்பு) பொதுச் சொத்துகள்—ஜாகீர்கள் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பு இவரது ஆதீனத்திலிருந்து வந்தது.

இப்படிப்பட்ட உத்தம ஆசிரியர்தான் அக்பர் மன்னருக்கு இளமைக் காலத்தில் மார்க்க பக்திப் புகட்டினர். ஹதீஸ் கலையிலும் அரசரைத் தேர்ச்சியடையச் செய்தார். அக்பர் மன்னர் இவ்வாசிரியரின் வீட்டுக்குச்சென்று ஊழியம் பலபுரிந்து கல்வி கற்றுவந்தார். இளமைப் பருவத்தில் அக்பர் பாஷா தமது மார்க்கத்தின் மீதுள்ள அபிமானத்தின் பயனுல் மஸ்ஜிதை பெறுக்கி சுத்தப்படுத்தி பொதுநல வேலையுஞ் செய்துவருவார். அக்பர் மன்னர் பால்யத்தில் ஆசிரியருக்கு மிகவும் பயந்து ஒழுகிவந்தார். ஆசிரியரிடம் பிரம்படியும் பட்டு பாடங் கற்றுள்ளார். ஆசிரியரிடம் அடிபடுவது தமது பிற்கால கீர்த்திக்கு உதவிசெய்வதாகுமென எண்ணி அடிகளைச் சகித்து வந்தார்.

அக்பர் அரசர் அரபிப் பாஷையில் அதிகம் பயிற்சியுடையவரா யிருந்தாரா இல்லையா என்பது புலப்படவில்லை. எனினும் அரபியில் சாதாரண பயிற்சி பெற்றிருந்தாரென்பதில் சந்தேகமில்லை.

அக்பரின் பால்யம்.

அக்பர் 4-வயது 4-மாதம் 4-நாட்களும் கடந்த சிறுவயதினரா யிருந்தபோது அவரது பெற்றேர்கள் கல்வி கற்பித்து வைப்பதற்காக (கி.பி. 1544-ம் ௵ நவம்பர்மீ 2-ந் தேதி) மௌலானு அஃஜமுத்தீன் அவர்களிடம் ஒப்படைத்தனர். பிறகு மௌலானு பாயஜீத் என்னும் அறிஞரிடம் கல்வி பயின்ருர். அதன்பின் முன்யிம்கான் என்பவர் ஆசிரியராயிருந்து அக்பருக்கு யுத்தப்பயிற்சி கற்றுக் கொடுத்தார். இன்னும், மீர் அப்துல் லதீப், பீர் முஹம்மத்கான், ஹாஜி முஹம்மத்கான், முல்லா அப்துல் காதிர் முதலியோரும் அக்பர் அரசரின் ஆசிரியர்களா யிருந்துள்ளனர்.

அக்பரின் தந்தையான ஹுமாயூன் மன்னர் தம் புதல்வருக்கு கல்வி கற்பித்து வைப்பதில் அதிக சிரத்தையுள்ளவரா யிருந்தார். ஒரு சில ஆசிரியர்களிடம் காணப்பட்ட துர்குணம் தமது புதல்வருடைய சுபாவத்திலும் பிரதிபலித்து விடுமோ என்ற அச்சத்தால் அத்தகைய ஆசிரியர்களை அடிக்கடி விலக்கி வந்தார்.

ஸம்ஸ்கிருத ஞானம்.

அக்பர் மன்னர் பாரஸீ, அரபி ஆகிய இரு பாஷைமட்டுந்தான் கற்றிருந்தாரெனக் கருத வேண்டாம். ஸம்ஸ்கிருத பாஷையிலும் அவருக்கு ஞானமும் பற்றுமிருந்தன. உதாரணமாய் கி. பி. 1582-ல் அக்பர் மன்னர் மஹாபாரதத்தை மொழிபெயர்க்கச்செய்வதற்காக பெரிய பெரிய சம்ஸ்கிருத பண்டிதர்களை வரவழைத்தார். மேலும் அக்பர் தமது சுய ஆற்றலினுல் மஹாபாரதத்தைப் படித்துக் காட்டி அதன் பொருளை நகிப்கானுக்கு சொல்லிக்கொண்டு வந்தார். இன்னவர் அப்பொருளை பார்ஸீ பாஷையில் எழுதிக் கொண்டே வந்தார். இங்ஙனம் வேறு சிலர் உதவியை கொண்டும் அக்பர் மன்னர் ஸம்ஸ்கிருத மஹாபாரதத்தை பார்ஸீ பாஷையில் மொழிபெயர்த்துதவினர். இதனை பண்டிதர்கள் சரிபார்த்துக் கொடுத்தனர். இம்மொழி பெயர்ப்புக்கு "ரஜ்ம் நாமா" என்று பெயரிடப்பட்டது. பிரசித்திப்பெற்ற பல சித்திரக்காரர்களை கொண்டு பல சித்திரங்கள் வரையச்செய்து அந்த நூலில் ஆங்காங்கு அமைத்து அழகுப்படுத்தினர். இதன் கைப்பிரதிகள் பல புத்தகசாலைகளிலும் வைக்கப்பட்டன. இந்த "ரஜ்ம் நாமா" வை பார்ஸீ பாஷையிலாக்கி முடிப்பதற்கு அக்பர் பாஷா நான்காயிரம் தங்க நாணயங்கள் செலவிட்டா

ரென்று கூறப்படுகிறது. இந்தப் பிரதியில் ஒன்று இப்பொழுதும் ஜெயபூரில் இருக்கிற தாம்.

பார்ஸி, அரபி, சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று பாஷைகளிலும் நல்ல ஞானமும், தத்துவ ஆராய்ச்சியில் தேர்ச்சியும், மார்க்கக் கல்வியில் பாண்டித்யமும், கவிபாடுவதில் வன்மையும், வானசாஸ்திரம்போன்ற கலைகளில் தக்க பயிற்சியும், எழுதுவதில் நல்ல பழக்கமும் பெற்றுக் கல்விமானுயும்—அறிஞராயும் விளங்கிய அக்பர் சக்ரவர்த்தியை, "எழுதப் படிக்கத் தெரியாத மூடர்" என்று கூற முன் வந்த பாதிரிகளின் புத்தியின் போக்குதான் என்னே ! என்னே !! என்னே !!!

கதியானிக் கொள்கையா? ஸயன்ஸ் ஞானமா?

(K. அப்துற்ரஹமான் வரைவது)

சென்னை தாருல் இஸ்லாம் பத்திராசிரியர்கள் உலகத்தோடொத்துவாழாமல் வீரத் பிரசாரத்திலுங்கூடத் தங்கள் சுயநலத்தைப் பாராட்டி பெரும்பான்மை முஸ்லிம்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமான அபிப்பிராயங்கொண்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டுத் தங்கள் வயிற்றை நிரப்பி வருவதோடல்லாமல், அப்புத்தகத்தின் மூலமாகத் தாங்கள் இஸ்லாத்திற்காக உழைப்பதாகவும் நடித்துப் பொது ஜனங்களை ஏமாற்றி வருகின்றனர். "வஞ்சிப்பவன் வஞ்சிக்கப்பெறுவான்" என்றபடி பொதுஜனங்களை வஞ்சிப்பவர்களாகிய இவர்கள் தங்கள் காதியானிக் கொள்கையை மறைக்கமுடியாமல் அப் புத்தகத்தில் தங்களுக்குத் தெரியாமலே புகுத்தி உலகத்தாரிடம் அகப்பட்டுக்கொண்டு தாங்கள் இறைவனுல் காட்டிக் கொடுக்கப்பட்டதைக் கண்டு உளர ஆரம்பித்துவிட்டனர். இதனுல்தான் பா. தா. வுடன் பாக்கவீ ஆசிரியர் 41-கண்ணேட்டக்காரர்களுக்கு மறுப்பு எழுத முன்வந்து தென்னிந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் யாவரையுமே தூற்ற ஆரம்பித்துவிட்டார். என்னே ! இவரின் அறியாமை !!

'உலகமதபோத உத்தமர்' என்ற நூலின் 9-ம் பக்கத்தில் கூறப்பெற்ற "அன்றியும் இத்தரணியின்கண் ஒன்று அழிந்து மற்ருென்று உற்பத்தியாகுங்கால் மனிதனே அதனைச் சிருஷ்டித்துவிடுவது முடிவதில்லை. உதாஹரணமாக இவ்வுலகில் மரித்துவரும் மனிதர்களின் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்பட்டு வருகின்றன............" என்று வரைந்திருக்கும் வாக்கியமானது மேனுட்டினரின் ஸயன்ஸுக் கொள்கையின் பிரதிபிம்பமாகும் என்பதைத் தவிர வேருென்றுமில்லை. அதாவது, உலகத்திலிருக்கிற சகல வஸ்துக்களும் உருவ மாறுபாட்டை அடைகின்றனவே அன்றி அவைகள் அடியுடன் அழிந்துவிடுவதில்லை; உயிர்ப் பிராணி ஒன்று மரித்துவிடுமாயின் அதன் ஜடலம் நமது கண்ணுக்கு தெரியாமல் வெளித்தோற்றத்தில் அழிந்தாலும் அது சிறு சிறு அணுக்களாக மாறி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆகியவைகளில் கலந்து வேறு ஜடலத்துடன் சேர்ந்துவிடுகின்றது. இஃதேபோல் ஒரு மரம் பட்டு அழிந்து போகுமானுல் அது வேறு வஸ்துவாக மாறி விடுகிறது. ஆதலால், பூமியின்கண் 10000 வருஷங்களுக்கு அல்லது லக்ஷம் வருஷங்களுக்குமுன் எத்தனை அணுக்கள் இருந்தனவோ அத்தனை அணுக்களும் கொஞ்சமேனும் குறையாமல் இருந்துவருகின்றன. அவ்விதமாகவே உலகம் லக்ஷம் வருஷங்களுக்குமுன் எவ்வளவு பளுவாக இருந்ததோ அதே அளவு பளுவே இப்பொழுதும் பூமிக்கு இருக்கிறது. எனவே, நாளுக்குநாள் ஜனபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டுவரும் இற்றைநாளில் ஜனபிவிருத்தியினுல் பூமிக்குப் பாரமேற்படுவதில்லை என்பது மேனுட்டு ஸயன்ஸ் சாஸ்திரிகளின் கொள்கையாகும். அதாவது மரித்தவர்களுக்கு ஏற்படும் நரகவேதனையும் சொர்க்கானந்தமும் ஆன்மாவுக்கு மாத்திரமா? அல்லது ஆன்மாவுக்கும் ஜடலத்திற்குமா என்ற விவாதத்திற்கு மேற்கண்ட சாஸ்

திரக் கொள்கைகளைப் பலமாக நம்பிக்கொண்டிருப்பவர்களாகிய மேனாட்டு ஆஸ்திகர்கள் மறுமையிலுள்ள இன்பமும் துன்பமும் ஆத்மாவுக்கு மாத்திரமேதான் என்றும், ஜடலத்திற்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை என்றும் கூறுகின்றனர். இஃது இஸ்லாமிய கொள்கைக்கு முற்றும் மாற்றமானதாகும். நமது காதியானிகள் மேனாட்டுக் கொள்கைகளின்மீதுள்ள மோகத்தில் மயங்கியவர்களாதலால் அவர்கள் மறுமையில் ஆத்மாவுக்கு மாத்திரமே இன்பமும் துன்பமும் எனத் தங்கள் நூற்களில் கூறிவருகின்றனர். இவ்வாறே ப்ா. தா. வும்கூட ஆத்மாவுக்கு மாத்திரமே மறுமையில் இன்பமும் துன்பமும் ஏற்படுகிறதென தமது ஜவாஹிருல் புர்கான் முதலிய நூற்களிலும் பத்திரிகைகளிலும் கூறியிருக்கின்றார். எனவே, இவர்களுடைய காதியானி-மேனாட்டுக்கொள்கையாகிய மறுமையில் ஆத்மாவுக்கு மாத்திரமே இன்பமும் துன்பமும் உண்டு என்ற கொள்கையையே "உலக மதபோத உத்தமர்" என்ற தமது புத்தகத்தில் வேறு முறையில் மாற்றி எழுதி இருக்கிறார். இவ்வுண்மையை அறியாத திருச்சி பப்ளிஷர் ஒருவர் பெரிய மேதாவிபோல் 41-கண்ணேட்டக்காரர்களைப் போலி மௌலவி என்று கூறி கைகூசாது எழுதிவிட்டிருப்பது பொது ஜனங்களை வழி கெடுப்பதாகவே இருக்கிறது. மௌலவிகளும் ஆலிம்களும் தங்கள் தங்களாலியன்றவரை எத்தனையோ அனாச்சாரங்களை நீக்கி இருப்பதுடன், இன்னும் அதற்கான முயற்சிகளையும் செய்துவருகின்றனர் என்பது உலகறிந்த விஷயம். எனவே இம்மாதிரியான மிரட்டலாலும் பிதற்றலாலும் உலகம் ஏமாந்துவிடுமென்ற எண்ணத்தை இவ்வாசிரியர்களும் பப்ளிஷரும் உணரவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூர்த்திவிழா மகாநாடு.

தஞ்சை மானம்புசாவடி அஞ்சுமனே "தர்பியத்துல் இஸ்லாம்" சங்கத்தின் முதலாண்டு பூர்த்திவிழா மகாநாடு 20-9-31 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு சென்னை ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர், மௌலானா மௌலவீ S. S. அஹ்மத் சயீத் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது.

அன்றுகாலை 8-20-க்கு தஞ்சைக்கு வரும் திருவனந்தபுரம் பாஸன்ஜரில் சென்னையிலிருந்து ஜனாப்களான மௌலானா மௌலவீ S. S. அஹ்மத் சயீத் சாஹிப், மௌலவீ ஹாஜி S. A. முஹம்மத் அலீ சாஹிப், மௌலவீ A. R. அப்துர்றஹீம் சாஹிப், மௌலவீ நா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் முதலியவர்களும், திருச்சியிலிருந்து மௌலவீ A. K. அப்துல் ஹமீது சாஹிப் முதலியவர்களும், புதக்குடியிலிருந்து மௌலவீ அஹ்மத் சாஹிப், முதலியோரும் கா. முஹம்மது சுல்தான் சாஹிபும் விஜயஞ்செய்தனர். மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டியாரும் வாலண்டியர்களும் இதரர்களும் பெரும் திரளாக ஸ்டேஷனிற்கு வந்து வரவேற்று தலைவர்களுக்கு மாலைசூட்டி மோட்டாரில் அமரச்செய்து வாலண்டியர்கள் அணிவகுத்து நின்று ஊர்து புகழ்பாக்கள் பாடிக்கொண்டு கீழவாசல் மார்கட்வழியாக தலைவர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்த விடுதிக்கு ஊர்வலமாக அழைத்துச்சென்றனர்.

மகாநாட்டுக்கென்றே சிங்காரமாக அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் மாலை 3-30-க்குஅம்மகாநாடு ஆரம்பமாயிற்று. அதற்கு சுமார் 1,000-பேர்களுக்குமேல் ஹிந்து முஸ்லிம்கள் விஜயஞ்செய்திருந்தனர். அதில் நகரின் பல பாகங்களிலுமுள்ள அநேக பிரமுகர்களும் வெளியூர்களிலிருந்து அநேக கனவான்களும் விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆரம்பத்தில் குர்ஆன் ஷரீப் ஓதப்பட்டவுடன் இருமாணவர்களால் புகழ்பாக்கள் பாடப்பட்டன. பின்னர் வரவேற்புக் கமிட்டி உபதலைவர் ஜனாப் K. S. யூசுப் ஷரீப் சாஹிப் பிரதிநிதிகளையும் தலைவர்களையும் வரவேற்று சொற்பொழிவாற்றினார். அவர் தஞ்சாவூரின் மகிமையையும்தங்கள் மஹல்லா ஏற்பட்டதின்

வரலாற்றையும் அஞ்சுமன் ஏற்படுத்தப்பெற்றதின் நோக்கத்தையும் நன்குவிளக்கிக்கூறினர்.

பின்னர் ஆலீஜனுப் கான்சாஹிப் டாக்டர் சையத் தாஜுத்தின் சாஹிப் M. L. C அவர்கள் ஜனுப் மௌலான மௌலவீ அஹ்மத் சயீத் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரணைசெய்து பேசுகையில் தலைவர் அவர்களால் நடத்தப்பெறும் "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை இஸ்லாம் மார்க்கத்திற்கு செய்துவரும் அரும்பெரும் தொண்டுகளை விளக்கிக்காட்டி அதை கூடிய சீக்கிரம் தினசரியாக ஆக்கிவிட நாம் முற்படல் வேண்டுமென்று கூறினர்கள். இத் தீர்மானத்தை மௌலவீ நா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்கள் ஆதரித்தும் கனம் மௌலான அவர்களின் மார்க்கசேவை புகழ்ந்தும் பேசினர்கள். எல்லோராலும் தீர்மானம் அங்கீகரிக்கப்பெற்று அல்லாஹு அக்பர் என்னும் கோஷத்தினிடையே மௌலான அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். உபகாரிய தரிசி H. பகீர் முஹம்மது அவர்களால் தலைவர் அவர்கட்கு உபசாரபத்திரமொன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குத் தக்க பதிலளிக்கப்பட்டபின் வரவேற்புப் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது.

தலைவர் அவர்கள் முஸ்லிம்கள் சங்கங்கள் அமைக்கவேண்டிய அவசியத்தையும், இலௌகீக வைதீகக் கல்விகளை ஒருங்கே கற்பிக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டியஅவசியத்தையும், இராப் பாடசாலையின் அவசியத்தையும் இவைகளுக்கு தக்க மூலதனம் சேகரிக்க வேண்டிய அவசியத்தையும், முஸ்லிம் தொண்டர்படை ஏற்படுத்தவேண்டிய முக்கியத்தையும், சங்கங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தி அழகியதோர் பிரசங்கஞ் செய்தார்கள்.

பின்னர், சங்கத்தின் வருஷாந்திர ரிபோர்ட்டு காரியதரிசி, ம கா. றஹ்மான்சா அவர்களால் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் உபகாரியதரிசி, எச். பகீர் முஹம்மது அவர்களால் சிற்றுரை கூறப்பட்டது. பின்னர் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன:—

தீர்மானங்கள்.

1. நம் முஸ்லிம் சிறுவர்கட்கு இலௌகீக வைதீகக் கல்வியை ஒருங்கே போதிக்கும்பாடசாலை ஒன்று இம்மஹல்லாவில் ஏற்படுத்தி அதை அபிவிர்த்தி செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

2. பகற்காலங்களில் கல்வியில் சௌகரியமற்ற முஸ்லிம் சிறுவர் பெரியோருக்கு இராக்காலங்களில் கல்விபோதிக்க இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. அஞ்சுமன் மதரஸா இவைகளின் அபிவிர்த்திக்கு பண்டு திரட்டவேண்டியது அவசியமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. இவ்வூரிலுள்ள கவர்ன்மெண்டு டிரெய்னிங் ஸ்கூல் முஸ்லிம் மாணவிகளுக்கு மார்க்கத்தைக் கற்றுக்கொடுக்கவும் பூரண சுதந்திரமிருந்து வந்தது. இப்பொழுதுள்ள ஹெட் மிஸ்டிரஸ் அச்சுதந்திரத்தில் தலையிட்டுஅதை விலக்குவதாகத் தெரிகிறது. ஆதலால், அவ்வாறு தலையிடாமல் வழக்கம்போல் சுதந்திரத்தை அளிக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்கிறது. இதுசம்பந்தமான விஷயத்தில் தக்கமுயற்சிகள் எடுத்துக்கொண்டு முஸ்லிம்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும்படி இம்மகாநாடு ஜனுப் கான் சாஹிப் டாக்டர் சையத் தாஜுத்தீன்சாகிப் M. L. C. அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

5. தஞ்சைமா நகரிலுள்ள முஸ்லிம் வாலிபர்களைக்கொண்டு தொண்டர்படை ஒன்று அமைத்து இஸ்லாமிய ஊழியம்செய்துவரவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

6. நம் தமிழ்நாட்டிலுள்ள சங்கங்களுக்குள் ஐக்கியமும் ஒற்றுமையும் ஏற்படுத்த முயற்சிப்பதுடன் சங்கங்களின் ஐக்கிய மகாநாடொன்று ஒவ்வொரு வருஷமும் ஒவ்வோரிடத்தில் நடத்தவேண்டுமென்று இம்மகாநாடு சிபாரிஷ் செய்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை பிரேரணை செய்தும் ஆதரித்தும் ஆமோதித்தும் பலமேதாவிகளும் மௌல்விகளும் சொற்பெருக்காற்றினர். அடுத்த வருஷத்திற்கு உத்தியோகஸ்தர் தெரிந்தெடுக்கப்பெற்றபின் அக்கிராசனரவர்கள் முடிவுரை கூறியதும் உபகாரியதரிசியால் வந்தனம் கூறப்பட்டு புஷ்பம் மிட்டாய் வழங்கப்பெற்று இரவு 9-30-மணிக்கு சபை இனிது முடிவுற்றது.

சென்னையிலிருந்து விஜயஞ் செய்திருந்த தலைவர்களுக்கும் மற்றும் நண்பர்கட்கும் மறுநாள் பகல் ஆலீஜனுப் கான்சாஹிப் டாக்டர் சையத் தாஜுத்தீன் சாஹிப் M.L.C. அவர்கள் விருந்தொன்று நடத்திவைத்தார்கள்.

மாதர் பகுதி.

குடும்பவாழ்வின் அரிய போதனைகள்.

(குடும்ப வாழ்வவென்னும் இல்லற தருமம் ஓங்கி ஜ்வலித்து இரு தம்பதியரும் சுகமும் நலனும் பெற்று, இன்பவாழ் வுற்று உய்வ தற்கு அகத்தின் தலைவியாய மனைவியின் நற் குண சற்சுபாவமும், சத்தொழுக்க நல்லா சாரமும், மணாளனோடு கருத்தொருமித்து இனம் இணங்கிவாழ்தலுந்தான் மிகமிக அத் தியாவசியமான சாதனமாகும். ஆகவே இந் நற்சாதனத்தை யடைவதற்கு அகத்தின் தர்மபத்தினி தன்பதியுடன் எங்ஙனம் நடந்து கொள்ளவேண்டும்? என்னென்ன நல்லனுஷ் டானத்தால் மணாளனின் மனத்தையும் அன் பையும் கவர்தல் வேண்டும்? என்பனபோன்ற அரிய உத்தம உபாயங்களை ஈண்டு போதனை மூலம் நஞ் சகோதரிகட்கு எடுத்தோது வாம்:—)

குலத்தை வாழ்விக்க வந்த உத்தமியே! நீயுனது பதியின் அன்பின்மீது பூரண நம் பிக்கை வை. கணவன் உன்பால் பெருவாஞ் சைபூண்டு மனமொத்துவாழ்வதற்கு அனு கூலமான நல் உபாயங்கள் புரிதலை கை விடாதே. உன்மீது ஆரம்பத்தில் உன்பதிக்கு அன்பில்லாவிடின் அதற்காகமனஞ்சடைந்து அவரை வெருக்காதே.

நங்கையே! உனது எழில்மிக்க அழகுக் காக மட்டும் உனது கணவர் உன்னை விசுவா சிக்கக் கூடியவராயிருந்தால் அந்த அன்பு சாஸ்தவமானதென்று நம்பியிருந்துவிடாதே. ஏனெனின் உனது சௌந்தரியம் சதாகால மும் நிலைத்திராது. ஆகவே உன் எழிலுக் காக விரும்பிய கணவரிடம் உனது நற்குண சற்சுபாவத்தையும், நல்லொழுக்க அநுஷ்டா னத்தையும், உத்தமத்தன்மையையும் பிர தானமாய் காட்டிக்கொள். உள்ளொன்றுவை த்து புறமொன்று பேசாதே, உள்ளத்தையும் அனுஷ்டானத்தையுல் ஒரேவிதமாய் செய்து கொள். உன் அகத்தின் அழகு உன்முகத் தில் ஜ்வலிக்கவேண்டும். இங்ஙனம் நீ குணத் தாலும் செயலாலும் சுபாவத்தாலும் உன் பதியின் அன்பை கொள்ளைகொண்டு விடுவா யாயின் இவ்வன்பு என்றென்றும் நிலைத்தி ருக்கும் இதை அருஞ் செல்வமெனக் கருதிக் கொள்.

விவாகத்துக்கு முன் வேறு எவர்மீதாவது உனக்கு அன்பும் நேசமுமிருந்திருந்தால் இது போழ்து அதை முற்றும் மறந்து உன் கண வன் மீதே பூரணஅன்பை செலுத்து. இவ்வா றின்றி நீ பழையபடியே பிறர்மீது விசுவாச முடையவளாயிருந்தால் இதனால் உன்கணவ னுக்கு உன்மீது அருவெறுப்பு ஏற்பட்டு, குடும்பவாழ்வே கலகலத்துப் போகும்.

உத்தமியே! உனது மணாளன் உன்மீது அளவுகடந்த அன்பும்வாஞ்சையும் கொண்டு நடந்துகொண்டால், அவர் உன் தயவுக்கு தாஸராகிவிட்டாரென்று மமதை கொண்டு விடாதே. அவரைப்போலவே நீயும் அபரி மிதமான வாத்ஸல்யத்தை அவர்மீது உண் மையாகவே காட்டிக்கொள். இதனால் உங் கள் குடும்பவாழ்க்கை பாலுந் தேனும்போல் கலந்து அபரிமிதமான இன்பந்தரும்.

இயற்கையாகவே, புருஷர்கள் தன்மதிப் பைக்கோரும் சுபாவமுடையவர் களாவர். அப்படிப்பட்டோரை மனைவியர் அடக்கி யாள்வதென்பது முடியுங் காரியமன்று. மனைவியரின் இவ்வகந்தைச் செயல் இறுதி யில் பிணக்காகவும், போராட்டமாகவுமே தான் முடியும். ஆதலின் புருடனுக்கு கீழ்ப் பட்டு நடந்துகொள்வதே உத்தம மனைவியின் உயரிய இலக்ஷணமாகும்.

மாதுசிரோமணியே! நீ யுனது கணவனை உத்தமத்தோழனாகவும், அத்தியந்த நேசனாக வும் பாவித்துக்கொள். நேசத்தின் காரண மாய் நீயுன் தோழிகளுடன் கண்ணியமில்லா மல் சேஷ்டைகள் புரிவதைப்போல் உன் உயிர்த்தோழனான கணவனிடம் புரியாதே.

குடும்பவாழ்வுக்கு அழகு கணவனும் மனை வியும் ஒருயிரும் ஈருடலுமாய் அன்பு வைத்து ஒருமித்து வாழ்தல்வேண்டும். இல்லறவாழ்க் கையென்பது இருஜீவனின் கூட்டுறவுபோலா கும். தம்பதியரின் உடலும் உயிரும் கூட்டுற வுப்பூண்டு வாழ்வதே இல்லற தர்மமென லாம். ஈதன்றி, ஒருவரையொருவர் அடக்கி யாள்வது இல்லற ஒழுக்கமாகாது. ஆனால்

கணவனுக்கு மனைவி கீழ்படிந்து அடங்கி ஒழுகுவது அத்தியாவசியமேயாகும்.

ஒவ்வொரு மனைவியரும் தம் கணவருக்கு உடன்பட்டு, மனமொப்பி பணிவுடன் நடந்து கொள்வதோடு, சொந்த நன்மைகளையும் கோருதல்வேண்டும். தனது நலனுக்குரிய சாதனத்தை கணவரிடம் கேட்குந்தோரணை அன்புமயமாயிருத்தல்வேண்டும். மனைவியர் தம் தேவையைக்கோரி கணவரின் மனத்தை வருத்துவது அடாச்செயலாகும். தம்பதிக்கிடையே பரஸ்பர விசுவாசத்துக்கு பாதகம் ஏற்படும் முறையில் மனைவி தன் தேவையை கணவனிடம் வற்புறுத்திச் சச்சரவிட்டுக் கோருவதினால் குடும்பவாழ்வுக்கே ஹானிஏற்பட்டுவிடும். எனவே, மனைவிக்கு ஏதேனும் தேவைப்பட்டால், தன்மணாளன் சந்தோஷமாயிருக்குஞ் சமயத்தில் மலர்வதனமும்,புன்சிரிப்பும் தவழ, மெய்யான அன்போடு அளவளாவிப் பேசி மிருதுவான முறையில் கேட்டுப் பெறுவதே சாலச்சிறந்ததாகும். இத்தகைய உபாயத்தில் கேட்டால் எப்படிப்பட்ட கணவனாயினும் தன் பத்தினியின் சொல்லுக்கு வயப்பட்டு, மனையாட்டியின் தேவையைப் பூர்த்தி செய்தே தீருவான்.

தம்பதியரின் வாழ்க்கையென்பது ஒரு மெல்லிய கண்ணாடிப் பாத்திரத்துக்கு சமமாகும். அந்த ஸ்படிகத்தின்மீது எவ்வாற்றாலேனும் தாக்குதல் ஏற்படுமாயின் உடனே அது நொறுங்கிப்போகும். இவ்வாறே கணவரும் மனைவியரும் தம் தம் அன்பெனும் கண்ணாடியை அதிஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். அக்கண்ணாடிமீது யாதொரு இடிப்பும் ஏற்படாவண்ணம் கருத்தும் மனமும் செயலும் ஒன்றுமித்து நடந்துகொள்ளுதல் வேண்டும்.

குல விளக்கான பத்தினியே! இன்னொரு விஷயம் சொல்கிறேன். மனைவியினது துர்குணத்தாலோ, அடாச் செயலாலோ ஏதேனும் தனக்கு இடையூறு ஏற்பட்டால் புருடன் அதனை பிற ஆடவர்களிடம் போய் குறை கூறுவது கிடையாது. மனைவியின் விஷமத்திற்காக மனம் நொந்து கவலையுற்று வாடுவதே கணவனின் வழக்கம். தீய மனைவியரோ அப்படியல்ல, கணவனால் ஏதேனும் சங்கடம் விளைந்தால் தன் தாயிடமும் தோழிகளிடமும் பிறரிடமும் தம் குறைகளை எடுத்துக் கூறி பிரலாபிக்கின்றனர். இது எத்துணை தீய வழக்கமென்பதை நான் விளக்கவேண்டியதில்லை. ஆகவே ஒவ்வொரு மனைவியும் தம் கணவரின் அறியாத்தனச் செயலுக்காக மனப்பதற்றமடையாமல் சகித்து-பொறுத்து அன்பாலும் இனிய மொழியாலும் தம் கணவரை நேர்மைக்குக் கொண்டு வருவதே உத்தமப் பத்தினிக்கழகாகும்.

நிற்க. தாய்மார்கள் தம் குழந்தைகளை அளவுக்கதிகமான பாசத்துடனும் செல்லத்துடனும் வளர்ப்பதை அநேக தந்தைமார்கள் வெறுப்பதுண்டு. அளவுகடந்த செல்லத்துடன் வளர்க்கப்படும் பிள்ளைகள் தாய் தந்தையர்க்கு பணிந்து நடக்காமல் அடங்காப் பிடாரிகளாய் கெட்டுப்போவதுண்டு. ஆகவே இத்தகைய சுபாவமுள்ள கணவனையுடைய மனைவி, கணவனுடைய சுபாவத்தை யுணர்ந்து அவரது மனங்கோணாத விதத்தில் நடந்துகொள்ளல் வேண்டும். இதன்றி, கணவனுடைய விருப்பத்துக்கு முரணாக மனைவியானவள் பிள்ளையின்மீது அளவுகடந்த வாத்ஸல்யத்தைகாட்டி கெடுத்துவிட வழிகோலுவாளாயின் இதனால் கணவனுக்கும் மனைவிக்குமிடையே பிணக்கே ஏற்படுமென்பதை சொல்லவும் வேண்டுமோ?

தன் மனைவியின் நல்லுடை, பரிசுத்தம், ஆரோக்கியம், நற்குணம், நல்லொழுக்கம், சௌந்தரியம் முதலியவற்றின் மீது கணவனுக்கு அளவற்ற பிரியமுண்டு. கணவனின் அன்பைப் பெறுதற்கு இஃதொரு நல்ல வழியாகும். தன்னை சுத்தமாகவும், அழகாகவும், நல்லொழுக்கமாகவும் வைத்துக் கொள்ளும் மனைவிக்காக அவளது கணவன் உயிர் அளிக்கவும் தயாராகிவிடுவானென்பது மிகையாகாது.

அதிகமாய் பேசி, வாயாடிக்கொண்டிருக்கும் பெண்டிரை ஆடவர் பெரிதும் வெறுப்பதுண்டு. அதிகமாய் பரிகாசஞ் செய்யும் பெண்டிரையும், ஊர்வம்பு பேசும் மாதரையும் ஆண்பாலார் விரும்புவது கிடையாது. ஆகவே பத்தினிமார்கள், தம் கணவரோடு அதிகம் வாயாடுதல், பரிகாசஞ் செய்தல், குற்றச்சொல் கூறல், சிடுசிடுத்தல் ஆகிய துர்வழக்கங்களை விட்டொழித்து, தம் கணவனின் உள்ளத்தையும் அன்பையும் வசீகரணஞ்செய்து வாழ முனைதல்வேண்டும்.

(தொடரும்.)

நாம் முன்னேறும் மார்க்கம்.

நன்மை தீமை

உலகத்தில் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மையாகும். நன்மை என்றால் என்ன? தீமையென்றால் என்ன? என்பவைகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். தங்கள் மூதாதைகளாகிய தந்தை-பாட்டன் ஆகியோர் கூறிச்சென்றதே—காட்டிச் சென்றதே நன்மை, மற்றவையெல்லாம் தீமை என்று ஒருசாரார் கூறுவர். இன்னொருசாரார், தம் பகுத்தறிவைச் செலுத்தி யோசித்துணர்ந்துப் பார்த்து நடந்துகொள்வதே நன்மையென்று கூறுவர். இன்னொரு சாரார், அரசாங்கத்தாராலும் அதிகாரிகளாலும் பிறப்பிக்கப் பட்டுள்ள சட்டதிட்டங்கட்கு கட்டுப்பட்டு நடந்து கொள்வதே நன்மையென்று கூறுவர்.

ஆனால் நம் முஸ்லிம்கள், எல்லாம்வல்ல இறைவனாலும், அவனது திருத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களாலும் போதிக்கப் பட்ட இஸ்லாத்தின் கட்டளைகளின்படி நடந்துகொள்வதே நன்மை-நேர்வழி என்று வலியுறுத்தவர். உண்மையில் இஸ்லாத்தின் சட்டதிட்ட ஆசாரங்களே மனிதவர்க்கம் பரிபக்குவம் பெற்று முன்னேறுதற்குரிய சன்மார்க்கமாக அமைந்திருக்கின்றது.

தெய்வபக்தி—ஈமான்.

முஸ்லிம்கள் மற்றவர்க்கத்தாரைப் போலல்லாமல் தனிப்பட்ட சிரேஷ்டமான சன்மார்க்கத்தின்படி நடந்து வருகின்றனர். முஸ்லிமொருவர் முதலாவதாக தம் மனப்பூர்வமாக பரிசுத்த கலிமாவாகிய "லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" (வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர்த்து வேறுயாருமில்லை, முஹம்மத் நபி (ஸல்.) ஆண்டவனுடைய திருத்தூதராவர்) என்ற திருவாக்கியத்தைக் கூறி மனத்தில் உறுதி கொண்டதும், இவ்வுலக ஆசாபாச ஆதிக்கங்களினின்றும் முற்றும் விடுதலையடைந்தவராகி அந்த ஒரே ஆண்டவனின் நல்லடியாராக ஆய்விடுவதற்கு ஹேது உண்டாய்விடுகிறது. எனவே, ஒரு முஸ்லிம் தனது தந்தையின் வழியென்ன? பாட்டனின் ஆசாரமென்ன? கால தேசவர்த்தமானத்தின் போக்கென்ன? ஜனங்களின் பழக்கவழக்கங்களென்ன? அரசாங்கத்தாரின் சட்டதிட்டங்களென்ன? அதிகாரியின் ஆக்கினையென்ன? விஞ்ஞானிகளுடையவும் அறிஞர்களுடையவும் முடிவு என்ன? என்பனபோன்ற வாதங்களில் ஈடுபட்டுத் தனக்குமட்டும் சரியெனத் தோன்றியதைக்கண்மூடித்தனமாய்ப்பின்பற்றி அந்தகாரத்திலாழ்ந்து விடாமல், தான் நன்னம்பிக்கை கொண்ட அல்லாஹுடையவும், அவனுடைய திருத்தூதருடையவும் பரிசுத்த இஸ்லாமாகிய சன்மார்க்கத்தைப்பின்பற்றி அதன் ஏவல் விலக்கலாகிய நன்மை தீமைகளை கவனித்து நடந்துகொண்டு முன்னேறுகின்றார்.

வணக்கம்.

ஒவ்வொரு முஸ்லிமும் ஆண்டவனின் அடியாராவர். ஆண்டவனுக்கு அடியாராகிவிட்டபின் உலகத்தின் வேறெந்த சக்திக்கும் அடிமைப்பட்டிருத்தல் ஆகாது. இத்தகைய நல்லடியானுக்கு ஆண்டவன் இட்ட கட்டளைகளே அவன் இவ்வுலகத்தில் பின்பற்றி நடக்கவேண்டிய வழியாகும். உலகத்தின் ஆசாபாசங்கள் இந்நல்லடியானைச் சீர்கெடுத்துவிடப் பிரயத்தனப்பட்டபோதிலும், அந்நல்லடியான் ஆண்டவனின்பால் பக்தியும் அச்சமும் பூண்டு அவ்விறைவனொருவனையே துணையாகவும் எஜமானாகவும் கொண்டு ஒழுகுவான். மேலும் "ஏ ஆண்டவனே! யான் உன்னையே வணங்குகின்றேன், உன்னிடமே சகலத்துக்கும் உதவி தேடுகின்றேன்" என்று அனுதினமும் பன்முறை பிரார்த்தித்து சத்திய உத்தம பக்தனாக விளங்குவான். மேலும் உண்மையான முஸ்லிம், 'தான் இவ்வுலகில் இறைவனால் எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டான்' என்பதை உற்றுணர்ந்து பார்ப்பான். "மனித வர்க்கத்தையும் ஜின் வர்க்கத்தையும் யான் என்னை வணங்குவதற்காகவே சிருஷ்டித்தேன்"

என்று எல்லாம் வல்ல இறைவன் திருமறையில் கூறுவதை உணர்ந்து அதன்படி தன்கடமையை நன்குபுரிவான். ஆம்! உண்மையில் இதுவே சன்மார்க்கமாகும். இதுவே நாம் முன்னேறும் மார்க்கமாகும். ஆண்டவனுக்கு அடிமைப்பட்டு அவன் இட்ட கட்டளைப்படி நடப்பதே நாம் உய்வதற்குரிய சத்வழியாகும். இதுவே 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்னும் நேர்மையான பாதையாகும்.

குர்ஆன் வேதம்.

ஆண்டவன்மீது நம்பிக்கையும் பக்தியும் கொள்வதே நாம் முன்னேறுவதற்குரிய முதற்படி என்பதில் சந்தேகமில்லை. ஆண்டவனுடைய சன்மார்க்கத்துக்குரிய முதல் சாதனம் ஆண்டவனுடைய திருமறையாகும். "குர்ஆன் ஷரீப்" என அழைக்கப்படும் இத்திருவேதம் பரிசுத்தமும் பரிபூரணமுமான கிரந்தமாகும். சர்வலோகத்தாருக்கும், சகல சமூகத்தாருக்கும் சகல காலத்தாருக்குமென்று இறைவனால் அருளப்பெற்ற அருள் வேதம் இதுவேயாகும். அது தோன்றிய காலந்தொட்டு இற்றையநாள்வரை (உலக முடிவுகாலம் வரை) ஓரக்ஷரமும் சிறிதும் மாறுபடாது ஆண்டவனால் அருளப்பட்டவாறே பரிசுத்தமாக விளங்குவது குர்ஆனே யாகும். இவ்வுலகத்தின் பல்வேறு வர்க்கத்தாரின் பல்வேறு வேத கிரந்தங்களில் எதுவும் நம் பரிசுத்த குர்ஆனைப் போன்று அகில உலகத்தினருக்கு ஏற்றதாகவோ, எக்காலத்திலும் பின்பற்றிவரக் கூடியதாகவோ, எவ்விதமாறுபாடும் ஏற்படாததாகவோ இல்லை யென்பது உலகமறிந்த ரகசியமாகும். இம்மாபெருஞ் சிறப்பு குர்ஆனுக்கே உரியதாகும். ஏனைய மதஸ்தர்களுடைய வேதங்கள், கவி வாணர்களின் அபிப்பிராயக் கிரந்தமாகவும், சாதாரண நீதியுபதேசங்களுடையதாகவும், மாற்றித் திரித்து வைக்கப்பட்ட கற்பனைக் கிரந்தங்களாகவுமே இருக்கின்றன.

இப்பரிசுத்த குர்ஆன் ஷரீபானது சகல விதமான சன்மார்க்க போதனைகளும், மனிதவாழ்க்கையின் பரிபக்குவத்துக் குரிய சகல சட்டதிட்ட ஆசாரக் கட்டளைகளும் அரிய உபதேசங்களும், எச்சரிக்கைகளும், ஏவல் விலக்கல்களும், நீதிக்கதைகளும், உயரிய உபமானங்களும், நற்குண நல்லொழுக்கப் பேச்சுகளும், உலகார்த்த அனுபவங்களும், பக்திவணக்க ஆசாரக்கொள்கைகளும் மனித வாழ்க்கைக் குரிய சட்டதிட்டங்களும், ஆன்மார்த்த போதனைகளும் நிறைந்ததாகும்.

ஆகவே, மனித கோடிகள் ஆண்டவனின் அருளும் முக்தியும் பெறுவதற்கு இத்தூய்மையான குர்ஆனின் போதனைகளையே ஆசானாகக் கொள்ளல்வேண்டும். குர்ஆனை அனுதினமும் பாராயணஞ் செய்து அதன் கருத்தை யுணர்ந்து அனுஷ்டானம் புரிய வேண்டும்.

நமது வழிகாட்டி யார்?

பரிசுத்த குர்ஆன் ஷரீபு மனித சமூகத்துக்கு சன்மார்க்கத்தையும் சத்தொழுக்கத்தையும், முன்னேறும் மார்க்கத்தையும் போதிக்கும் அரிய கிரந்தமென்பதில் ஐயமில்லை. ஆனால், ஆண்டவனருளிய இவ்வேதபோதனை மனித வாழ்க்கைக்கு ஏற்றதாய்இருக்கிறதா? மனிதரால் அவை ஏற்று அனுஷ்டிக்கப்படக் கூடியனவா? என்ற ஐயம் ஜனிக்கலாம். இவ்வித சந்தேகத்துக்கு இடமில்லா திருக்க வேண்டுமென்றே எல்லாம்வல்ல இறைவன் நமது சன்மார்க்கவழிகாட்டியும், உலக ரக்ஷகரும், சர்வலோகத் திருவருளுமான நபிகள் நாயகம் ரஸூலுல் (ஸல்) அவர்களை, நம்மவர்க்கு நேர்வழிகாட்டியாய் அனுப்பி, குர்ஆனின் போதனையை அனுஷ்டித்துக் காட்டி ஜனங்கட்கு போதிக்குமாறு திருவருள் புரிந்தான். அத்திரு நபிநாயகம் ரஸூலுல் (ஸல்) அவர்களுடைய பழக்கவழக்கங்கள், நடவடிக்கைகள் யாவும் முற்ற முற்ற குர்ஆன் ஷரீபுக்கு ஒத்தமைத்திருந்தன.

திரு நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் நம்மைப்போன்ற மனிதராகவே ஜனித்தவராவார்கள். நம்மைப்போன்றே அவர்களும் உண்டும், உடுத்தியும் பருகியும் உறங்கியும், இன்பதுன்பங்கள் அனுபவித்தும் இவ்வுலகில் வாழ்ந்தார்கள். நம்மைப்போலவே கலியாணம் முடித்து மக்களையீன்று இல்லறதருமம் நடாத்தினர்கள். எனினும் அப்பெருமானர் (ஸல்) அவர்கள் ஆண்டவனின் கட்டளைகளை ஒருசிறிதும் கை நழுவ விடாமல் பற்றிப்பிடித்து ஒழுகி ஆன்மார்த்த பரிபக்குவமும், ஜயமும் பெற்று மனிதர்களில் சிரேஷ்டர்களாகவும், பக்தர்களின்முதன்மையாளராகவும் ஆண்டவனின் உண்மை நேச

ராகவும் விளங்கினார்கள். இவ்வாறே ஒவ்வொருவரும் ஆண்டவன்கட்டளைப்படி தன்னைப் பின்பற்றி நடந்து பரிபக்குவமும் ஜயமும் திருவருளும் பெறவேண்டுமென்று போதித்தார்கள். நாம் உய்வதற்குரிய சன்மார்க்கத்தை நமக்குக் காட்டிக் கொடுத்தார்கள்.

மனிதர்க்குரிய முன் மாதிரி.

சத்திய சீலரும், தூய வாழ்வினரும், ஆண்டவனின் உத்தம பக்தருமான முஹம்மத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் ஜீவிய வாழ்க்கையின் வாயிலாகவே ஜனங்கட்கு முன் மாதிரியாக விளங்கி, ஜனங்கள் எல்லாவித இகபர நற்சாதனங்களைப் பெற்று பரிபக்குவ மடைந்த சத்புருஷராய் விளங்க முடியும் என்பதை எண்பித்துக் காட்டிச் சென்றார்கள். இன்னமும், ஆண்டவனுடைய நோக்கமாகிய விமோசனத்தை மனிதர் அடைந்துய்வதற்குரிய நல்வழியையும் காட்டியுள்ளார்கள். எனவே, அப்பெருமானார் (ஸல்.) அவர்களின் ஜீவியத்தின் ஒவ்வோர் அம்சமும் மனிதர்க்குரியமுன் மாதிரியாக (உஸ்வயே ஹஸனா - வாக) விளங்குகின்றது. ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடக்கவேண்டியது மனிதனாகப் பிறந்தவனது கடமையாகும். திரு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி வழிப்பட்டு நடப்பது ஆண்டவனுக்கு முற்றும் வழிபட்டு நடப்பதற்கு ஒப்பாகும்.

'அல்லாஹ் ரஸூலின் கட்டளைகளைப் பின்பற்றியொழுகி உத்தமபக்தராய் விடுங்கள்', என்று குர்ஆனும் போதிக்கின்றது. நாயகத்தின் திரு ஜீவியம் நாம் உத்தமராகி ஜயமும் பரிபக்குவமும் பெறுதற்குரிய நமூனாவைக்காட்டுகின்றது. முஸ்லிம்களுடைய வாழ்க்கையின் முக்கிய நோக்கம் ஆண்டவனுக்கு முற்றும் வழிப்பட்டு நடப்பதாகும். ஆண்டவனுக்கு எவ்விதம் வழிப்பட்டு நடப்பது என்பதை நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் தங்களது அனுஷ்டான பூர்வமாக நமக்கு காட்டிவிட்டார்கள். குர்ஆன் ஷரீபும் இதனை நம்மவர்க்கு நல்ல விதமாய்ப்போதித்து விட்டது. எனவே, பரிசுத்த குர்ஆனையும், நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் வாழ்க்கை நமூனாவையும் பின்பற்றி நடப்பதே நாம் இகபரமிரண்டிலும் முன்னேற்றமும் பரிபக்குவமும் அடைவதற்குரிய சன்மார்க்கமாகும்.

மனிதவாழ்கைக்கு சம்பந்தப்பட்ட அரிய விஷயங்கள் எதுவும் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஜீவிய வாழ்க்கையில் இல்லாமற் போகவில்லை. வணக்கம், தவம் நேசம், அன்னியோன்னியம், பக்தி, ஏழ்மை, வெற்றி, ஆக்ஷி, அரசியல், கீர்த்தி, ராணுவ முறை, நிர்வாகம், பரிபாலனம், உலகவியல், இல்லறம் ஆகிய எல்லாத் துறைக்கும் நபி பெருமானாரின் ஜீவிய வாழ்வில் நமக்கு அரிய வழிகாட்டியான நமூனா காணப்படும். எல்லா காலத்தாரும் அந்த நபிபெருமானார் லோக நாதர் முஹம்மத் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடந்து தான் விமோசம் பெறவேண்டுமென்பது இறைவனின் கட்டளையாகும். ஆகவே ஒவ்வொருவரும் ஆண்டவன் மீது பூரண பக்திகொண்டு நம் வள்ளல் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்களைப் பின்பற்றியொழுக வேண்டும். குர்ஆனையும், ஸுன்னத்தையும் பற்றிப்பிடித்து ஒழுகவேண்டும். சிறப்பாகமுஸ்லிம்களெல்லோருக்கும், பொதுவாக உலகத்தாரெல்லோருக்கும் இதுவே சரியான முன்னேற்றமார்க்கமாகும். அஞ்ஞான அந்தகாரத்தினின்று விடுபட்டு சத்திய சாந்திபெற இதுவே தக்க வழியாகும். நமக்கு ஜெயத்தையும் கீர்த்தியையும் நல்வழியையும் அளிக்க வல்லதாகும். ஆகவே நாமெல்லோரும் நாயகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்போமாக.

இனம் ! இனம் !!

அல்ஹாஜ் லார்டு ஹெட்லீயின் வீரத் பிரசங்கம்.

வெளிநாட்டாருக்கு 3000-பிரதிகளை விநியோகிக்க முடிவாகியுள்ளது. இப்பிரசங்கங்கள் உர்து, ஆங்கிலம், குஜராத்தி, தமிழ், கோர்முகீ ஆகிய பாஷைகளில் உள்ளன. வேண்டியவர்கள் "ஈமான் ஆபீஸ், பட்டி, லாஹூர் ஜில்லா" என்ற விலாசத்துக்கு எழுதிக் கொள்க !

மேனாட்டு வாழ்க்கையில் இஸ்லாத்தின் ஆதிக்கம்.

ஜனங்களுள் பலர் சரித்திரங்களெனப்படுபவை பெதுப்படையாய் உண்மையானவரலாறுகளைக் கூறுவனவென்றே நம்பி இருந்துவிடுகின்றனர். போனதைப்பற்றிப் பேசிப் பயன் என்ன? என்பது சிலரின் குறுகிய நோக்கமாகும். மேலும் மனிதனொருவன் முன்தினம் புரிந்த காரியத்தை மறுதினமே மறந்துவிடுங்கால், பல்லாண்டுகளோ நூற்ருண்டுகளோ கடந்த முன்னர் நடந்தசம்பவங்களைப்பற்றிய வரலாற்றைக்கேள்வியுற்றுச்சிறுவர்களே போல் ஆச்சரியப்பட்டுஇருந்துவிடுவதல்லாமல் வேறென்ன செய்வதென்பது இத்தகையயோரின் அபிப்பிராயமாகும்.

ஆனல், உண்மையான சரித்திரங்களைச் செவியுறுவதால் நூற்றுக்கணக்கான நல்விஷயங்கள் புலனுகின்றன, தற்கால ராஜ்ய வாழ்க்கையில் அவ்வரலாறுகள் பெரிதும் பயனையளிக்கக் காணலாம். பொய்யான சரித்திர வரலாற்றைச் செவியுறுவதால் தவருன பல விஷயங்கள் மனத்தில் இடம் பெற்றுவிடுகின்றன. ஆகவே, உண்மையான சரித்திர வரலாறு இன்னதென்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள முயலல் வேண்டும். நல்வாழ்வின் நிலையை ஒரு மரத்தில் கட்டப்பட்டுள்ள ஊஞ்சலுக்கு ஒப்பாகக் கூறலாம். ஊஞ்சலின் நடுவிலுள்ள பலகை நிகழ்காலமாகும்; அதன் ஒருபக்கத்திலுள்ள கயிறு சென்றகாலமாகும்; மற்றொரு பக்கத்திலுள்ள கயிறு வருங்காலமாகும். எனவே, நாம் நிகழ்காலத்திலிருந்து கொண்டே சென்ற காலத்தை அறிந்து வருங்காலத்தை ஊகித்துக் கொண்டால் தான் உலகவாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.

மேலும் தற்கால உலகத்தின் வாழ்க்கை முறை, உலகத்தாரின் வழக்க ஒழுக்கங்கள், மக்களின் அறிவு ஆகியவை யெல்லாம் காலத்தினல் சுயமாய் உண்டாய்விட்டனவல்ல. இவை பண்டைக்கால மக்களால் விதைக்கப்பட்ட விதைகளினின்று முளைத்த விருக்ஷங்களும் பழங்களும் புஷ்பங்களுமாகும். அப்பண்டைக்கால சிரேஷ்டர்கள் பல வழக்க ஒழுக்க ஆசார வியல்களை தமது பிற்கால சிஷ்ய கோடிகளுக்கென்று பூஸ்திதியாகவிட்டுச் சென்றுள்ளார்கள். எனவே, இக்கால சமூகத்தினர் பண்டைய மக்களுடைய இப்பேருபகாரங்களுக்காக அவர்கள்பால் நன்றியும் விசுவாசமும் செலுத்தவும், அவர்களது போதனைகளையும் கட்டளைகளையும் பின்பற்றி நடக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனல் நமது மூதாதையாரின் பழக்க வழக்கங்களையும் மற்ற விபரங்களையும் அறிவதற்குச் சரித்திர அறிவும் ஆராய்ச்சியும் தேவை.

மேனாட்டு சமூகாசாரமும், இஸ்லாத்தின் விவேகமும்.

மேனாட்டாரிடையே காணப்படும் தற்போதுள்ள நாகரிக வாழ்க்கை ஆரம்பமான காலம், அன்னோர் இரண்டாம் பிரளயம் என்று கூறும் "நஷ்அத்துஸ் ஸானியா" சம்பவத்துக்குப் பிறகு தோன்றியதேயாகும். ஈண்டு நாம் முக்கியமாய் எடுத்துக் கூறவேண்டிய விஷயம், மேனாட்டுக் கல்விக்கும் ஆசாரத்துக்கும் மூலபோதகராயும் ஸ்தாபகராயும் விளங்கியவர்கள் ஆதியில் அரபியர்களே யாவர் என்பதேயாம். அவ்வராபியரின் விவேக முழக்கந்தான் அவிவேகத்தில் ஆழ்ந்திருந்த மேனாட்டாரை எழுப்பிவிட்டதெனலாம். இந்த உண்மையை பாரபக்ஷமற்ற ஐரோப்பிய அறிஞர் பலர் ஒப்புக்கொள்கின்றனர். மற்றும் ஸ்பெயின் முதலிய தேசங்களின் புராதனச் சரித்திர சம்பவங்களும் இந்தக் கூற்றின் உண்மையை மெய்ப்பிக்கும். ஆனல் இதுகாலையோ ஐரோப்பியரின் நாகரிக வாழ்க்கை நம்மவர்க்கே வியப்பைத் தரத்தக்கதாயிருக்கின்றது. அவர்களது நாகரிகம் உலகத்தையே பாதித்துவருவதாய் விளங்குகின்றது. அவர்கள் இவ்வளவு மேம்பாடடைந்ததற்குக் காரணம் முற்காலத்தில் அராபியர் அவர்களிடம் இஸ்லாமியக் கலையையும் நாகரிகத்தையும் பரத்தியதேயாகும்.

உலகத்துக்கே பெரியதோர் உபகாரம் புரிந்து உத்தம மாறுதல் உண்டாக்கிய அக்

கால அராபியர்கள் சுதந்தரமுள்ளவராயும் அஞ்சா நெஞ்சம் படைத்த வகுப்பினராயுமிருந்தார்கள். பிறவர்க்கத்தாரின்முன் சிரம் பணியும் இழிதன்மையை அவ்வராபியர்கள் அறியவேமாட்டார்கள். தம் ஜீவிய காலத்தில் உலகத்தில் இஸ்லாத்தின் மேன்மையைப் பரவச்செய்ய வேண்டுமென்ற வீரம்பூண்டு இத்தாரணி எங்கும் பரவிச்சென்று ஆங்காங்கு பலவித இன்பதுன்பங்கள், லாபநஷ்டங்கள் அடைந்ததில் ஒரு சிறிதும் பின்னடையாமல் வீரத்தோடு வாழ்ந்து பிறநாட்டாருக்குப் பேரனுகூலங்கள் புரிந்தார்கள். மரணத்துக்கோ, காலபேதத்துக்கோ அவ்வராபியர்கள் ஒரு சிறிதும் அஞ்சாமல், தங்கட்கு நேர்ந்த சங்கடங்களைச் சிறிதும் லக்ஷியஞ் செய்யாது வாழ்ந்துவந்தார்கள். இஸ்லாத்தைப் பரத்தி உலகத்துக்கு விவேகத்தை புகட்டவேண்டுமென்றும், வியாபாரம்புரிந்து நலன்பெற வேண்டுமென்றும் உலகத்தின் பல திக்கிலும் பரவி வதிந்தார்கள்.

இஸ்லாத்தின்பேரனுகூலத்தால் வாழ்க்கை நலனும், நல்லாசாரப்பண்பும், சமத்துவத்தின் சீரும், ஆன்மார்த்த வெற்றியும் பெற்ற அராபிய மக்கள், தங்கள் இஸ்லாத்தின் சிறந்த தத்துவங்களையும் திவ்வியக்கொள்கைகளையும் உலகத்திலுள்ள ஏனையமக்களும் பெற்றுத் தம்மைப்போலவே நலன்பெற வேண்டுமென்ற உத்தம நோக்கத்துடன் உலகத்தின் நானுதிசைகளுக்குஞ் சென்று இஸ்லாமியப் போதனைபுரிந்து வந்தனர். அவ் வராபியர்கள் சென்ற இடங்களிலெல்லாம் சத்தியம், சுதந்திரம், பரந்தநோக்கம், விவேகம் முதலியவற்றைப் போதித்தார்கள். எனவே, உலகமக்களிடையிலே தங்கள் சமூகத்துக்கும் மதத்துக்கும் பேராதரவைப் பெற்றுத் திகழ்ந்தார்கள்.

ஐரோப்பாவில் இஸ்லாத்தின் விஜயம்.
ஸ்பெயின் வெற்றி.

ஹிஜ்ரீ முதல் நூற்றாண்டு முடிவுக்கு 11-வருடங்கள் முன்னர் (கி. பி. 708-ல்) அராபியர்கள் பலேர்க்கு தீவுகள் மீது (அதாவது மஜர்கா, மனோர்கா, ஆயூபா முதலிய இடங்கள் மீது) படையெடுத்துச் சென்று அவற்றைப்பிடித்துக்கொண்டார்கள். மூன்று வருடங்கள்கழிந்தபின் (கி. பி. 711-ல்) தாரிக் பின் ஜியாத் என்பவர் ஜபலுத்தாரிக் என்னுமிடத்தில் தமது சேனையை நிலை நிறுத்தினர். அக்காலை ரமலான்மாத மத்தியில் நிகழ்ந்த மதீனா யுத்தத்தில் 12-ஆயிரம் முஸ்லிம் வீரர்கள், ரஜ்ரீக்கரின் ஓர் இலக்ஷம் வீரர்கள் கொண்ட படையை முற்றும் முறியடித்து ஜயங்கொண்டார்கள்.

ஆப்ரிக்காவின் அதிபராயிருந்த மூஸா என்பவர் அக்காலை 18-ஆயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு கி. பி. 712-ல் ஸ்பெயின் தேசத்தை ஜயித்துக்கொண்டனர். இவ் வெற்றிக்குப் பிறகு பிரான்ஸில் பிரவேசித்தனர். ஆனால், அக்காலை கலீபா வலீத் என்பார் பரவி வியாபித்துக் கொண்டிருந்த தமது அரசாங்க நிர்வாகத்தை நன்கு ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார். எனவே, இவர் தாரிகையும், மூஸாவையும் தமக்கு ஆதரவாய் திமஷ்கு தேசத்துக்கு அழைத்துக்கொண்டார். அக்காலை மூஸா என்பவர், பிரான்ஸையும் ஜெர்மனியையும் ஜயித்துக்கொண்டு கஸ்தன்தனியா வழியாக ஏஷியா கோசக்கில் பிரவேசித்து தமது ஆதிக்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார். இவரது எண்ணத்தை ஆதரிக்கும்பிரெஞ்சு சரித்திராசிரியர் ஒருவர், "அங்ஙனம் அவர் காரியம் சாதித்திருந்தால், ஐரோப்பா தேசத்தில் ஐக்கியமான சன்மார்க்கம் தோன்றி மக்கள் நாகரிகமும் நல்லாசாரமும் பெற்றுத்திகழத் தக்க நாகரிகம் ஆரம்பமாகி யிருக்கும்" என்று எழுதியுள்ளார். இது கவனிக்கத் தக்கது.

தூர் யுத்தம்.

இச் சம்பவம் நிகழ்ந்து முடிந்த 20-வருடங்கட்கு பின்னர் 732-ல் கலீபா ஹிஷாம் அவர்களுடைய காலத்தில் குறிப்பிடத்தக்க யுத்தமொன்று நடந்தது. இந்தப்போர் கிறிஸ்துவர்களுடன் புரியப்பட்டதால் அது ஐரோப்பா முழுவதையுமே பாதிக்கக் கூடியதாய் இருந்தது. ஆனால் அராபிய சேனையில் பலசச்சரவுகளும் கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் ஏற்பட்டிருந்ததால், பல அராபிய சிப்பாய்கள் தங்கட்கு ஏராளமான கொள்ளைப் பொருள் கிடைக்குமென்ற ஆசையால் அராபியச் சைன்யத்தை விட்டு வெளியேறி சார்லெஸ் மார்டல் என்ற அதிபனுக்கு வேண்டிய உதவிபுரிந்து வந்தார்கள்.

இதை கண்டுங்கூட அந்த அதிபன் அராபிய சிப்பாய்களை ஆதரிக்காமல் கைநழுவவிட்டு விட்டான். ஆகவே அராபியர்கள் அவ்விடத்தை ஓர் இரவில்விட்டுக் கிளம்பி தெற்குப் பிரதேசத்தை நோக்கிப் போய்விட்டார்கள்.

பிரான்ஸில் அராபியர்கள்.

மேலே கூறிய யுத்தத்தில் அராபியர்களின் உதவியால் சார்லஸ் மார்டலுக்கு வெற்றி கிடைத்ததெனினும் யுத்தத்துக்குப் பின்னர் அராபியர்களை அலக்ஷியஞ் செய்து விட்டதால் அவன் அவர்களது அதிருப்திக்கும் வெறுப்புக்கும் ஆளானான். அவன் தெற்குப் பிரான்ஸ் தேசத்தில் பல்லாண்டுகள் வரை ஆட்க்ஷி புரிந்துகொண்டிருந்தான். இவன் அராபியர்க்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக எதிரிடையாகப் பல சூழ்ச்சிகள் புரிந்து வந்தான்.

மேற்படி தூர்யுத்தம் முடிவடைந்தபின்னர் இரண்டு வருடங்கள் கடந்து (734 ல்) அராபியர்கள் பிரான்ஸின்மீது படையெடுத்துப் போர் தொடுத்தனர். ஒபீனியர்களுடைய நாட்டை கைப்பற்றிக்கொண்டனர். உக்பா என்ற அராபிய வீரர் ஒபீனீ என்ற பிரதேசத்தின்மீது போர் தொடுத்தார். இவரது சேனைகள் பர்கந்தி முதலிய பகுதிகளில் பரவிச்சென்று பொதுவாய் பிரான்ஸ் தேசத்தையே ஆபத்துக்குள்ளாகும்படி செய்த பின்னர், 735-ல் அராபியர்கள் இத்தாலியின் வடமேற்குத் திசையிலுள்ள பேட்மூன் என்னும் பிரதேசத்தைப் பிடித்துக்கொண்டனர். எனவே சார்லஸ் மார்டல் மீண்டும் அராபியர்க்குக் கடும் விரோதியாகிக் கிறிஸ்துவர்களைத் தூண்டிவிட்டு முறியடிக்கப் பிரயத்தனப்பட்டனன். எனினும் இவனால் நார்பூன் என்ற சிற்றூரைக் கூட பிடித்துக் கொள்ள முடியவில்லை. எவ்வாறேனும் அராபியர்க்குத் தீங்கிழைக்க வேண்டுமென்று லீவார் நதியின் தெற்குப் பிரதேசத்திலுள்ள பல நகரங்களைத் தகர்த்து நாசப்படுத்திவிட்டான். எனினும் இவன் ஜயம் பெறவில்லை

முஸ்லிம்களின் அரசாங்கம்.

ஹிஷாம் மன்னர் காலகதியடையும்போது (743-ல்) முஸ்லிம்களுடைய அரசாங்கம் பெரிதும் முன்னேற்றமடைந்து உயர்வு பெற்றிருந்தது. ஐரோப்பா கண்டத்தில் மட்டும் ஸ்பெயின், தெற்குப் பிரான்ஸ், வடமேற்கு இத்தாலி ஆகிய நாடுகள் முஸ்லிம்களுடைய ஆதீனத்துக்குட்பட்டிருந்தன. இன்னும், கார்ஸீகா, ஸார்டீனியா, கிரேட் ரோடர், ஸைப்ரெஸ், ஸிஸ்லீ, யாஸ்பிலியாவின் ஒருபாகம் ஆகிய தீவுப்பிரதேசங்களும், யூனன் தீவுகளுள் சிலவும் முஸ்லிம்களுடைய ஆதீனத்துக்குட்பட்டிருந்தன.

சிறிது காலத்துக்குப்பின் முஸ்லிம்கள் தங்களாதீனத்துக் குட்பட்டிருந்த எல்லா நாடுகளையும் கட்டி ஆளமுடியாதவர்களாய் விட்டனர். அராபியர்க்கும் பர்பரியர்க்கும் இடையே ஏற்பட்ட விகற்பமும் பிணக்கும் அவர்களது அரசாங்கத்தை தளர்வுறச் செய்துவிட்டது. இஸ்பானிய அரசாங்கத்தினர் பிரான்ஸு தேசத்து முஸ்லிம்களுடைய சம்பந்தங்களை நிராகரித்துவிட்டனர். வேறு பல இடையூறுகளும் முஸ்லிம்கட்கு புரியப்பட்டன. இறுதியாக 759-ம் ஆண்டில் பிரான்ஸில் அராபிய முஸ்லிம்களின் ஆட்சி நீங்கிவிட வேண்டியதாய்விட்டது.

அதன் பிறகு பல்லாண்டுகள் கழிந்து, பனூ உமய்யாக்களின் ஐந்தாவது கலீபாவாகிய அப்துல்லா என்பவரது ஆக்ஷிகாலத்தில் சில அராபியக் கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து மீண்டும் தெற்கு பிரான்ஸ் மீது படையெடுத்தார்கள். இதில் வெற்றி கிடைத்தது. பின்னர், 9-வது நூற்றாண்டில் ஸேவ்வாய், ரோவான்ஸ், வாபீனீ ஆகிய நாடுகளில் முஸ்லிம்களின் ஆக்ஷி பரவிவிட்டது. இதன் பின்னர் லேகோரியாவின் கரைப் பகுதிகளில் இஸ்லாமிய ஆக்ஷி பரவி ஸ்வீட்ஜர்லாந்து வரைக்கும் போய்ச் சேர்ந்துவிட்டது. ஸ்வீட் ஜர்லாண்டின் ஒரு பகுதி முஸ்லிம்கட் குரியதாகி விட்டது.

பிரான்ஸின் தெற்குத் திசையில் தான் முஸ்லிம்கட்கு நல்ல செல்வாக்கு இருந்தது. எனவே மார்ஸெல்ஸ், கர்மினூபெல் ஆகிய நகர்களில் இன்றுங்கூட முஸ்லிம்கள் செல்வாக்குள்ளவர்களா யிருக்கின்றனர். இந்த நகரின் ஒருபாகம் "அராபிய ஊர்" என்ற பெயரால் தற்போதும் அழைக்கப்படுகின்றது.

இத்தாலியில் அராபியர்கள்.

கி. பி. 872-ல் அராபிய முஸ்லிம்கள் இத்தாலிய சமுத்திரக் கரைப் பிரதேசத்தின்

மீது படையெடுத்து ஆதிக்கங் கொண்டார்கள். அக்கால ரோமாபுரி வேந்தனை எட்டாவது ஜான் முஸ்லிம்களது அரசாங்கத்துக்குக் கப்பம் கட்டக் கடமைப் பட்டவனுகயிருந்தான். நேபில்ஸ் நகரப் பாதிரி மனப்பூர்வமாய் முஸ்லிம்களுடன் நற்சம்பந்தங் கொண்டிருந்தமையால் முஸ்லிம்கள் தாம் ஜயமடைந்த போது இவருக்குப் பெருட் சன்மான மளித்தனர்.

பத்தாவது நூற்றுண்டில், எகிப்தின் ஆக்பியி கலீபாவான காயிம் என்பவர் இத்தாலிய கடற்கொள்ளைக்காரர்களின் கொட்டத்தை அடக்குவதற்காகப் பெரியதொரு படை தயாரித்தார். இவர் ஆங்குப் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றுக் கொண்டே தெற்கு இத்தாலியிலுள்ள கீத்தா என்ற நகர் வரைக்குஞ் சென்று வெற்றி யடைந்தார். இவரது யுத்தக் கப்பல்கள் கப்வா என்னும் பகுதியை ஜயித்துகொண்டதல்லாமல், அல்அன்கிர்தா என்றதேசத்தின் ஒரு பகுதியையும் பிடித்துக்கொண்டன. அக்கால முஸ்லிம்கட்கு பல இடையூறுகள் நேர்ந்தில்லாதிருப்பின் நிச்சயமாய் இவர்கள் இத்தாலியை ஜயித்துக் கொண்டேதானிருப்பர்.

(தொடரும்)

பண்டை உலமாக்களின் மார்க்க சேவை.

உலக சிரேஷ்டர் சத்தியசீலர் நபி முஹம்மது ரஸூல் (ஸல்.) அவர்களும், உண்மைத் தோழர்களாகிய சஹாபாக்களும், கலீபாக்களும், இவர்களைச் சார்ந்த இதர பெரியார்களும் நம் சுத்தசத்திய தீனுல் இஸ்லாத்தின் பாதுகாப்புக்காகவும், அபிவிருத்திக்காகவும், வெற்றிக்காகவுமென்று புரிந்த தியாகங்கள், சத்திய சேவைகள், அடைந்த கஷ்டநஷ்டங்கள் முதலியவற்றைப் பற்றி முன்னர் விவரமாக கூறிவந்திருக்கிறேம். எனவே அவற்றை மீண்டும் ஈண்டு விளக்க வேண்டியதில்லை. அவ்வுத்தம மகான்களுக்குப் பின்னுண்டான உலமாக்கள், ஞானவான்கள், இஸ்லாமிய அதிகாரிகள், இமாம்கள் முதலியோர் சத்தியத்தைநிலை நிறுத்துவதற்காகவும், இஸ்லாத்தின் கீர்த்தியைப் பாதுகாப்பதற்காகவும் புரிந்த மார்க்கச் சேவைகள், அடைந்த கஷ்டநஷ்டங்கள், ஆகியவற்றை ஈண்டு சுருக்கமாக கூறுவாம் :—

உலமாக்களின் தொண்டு.

பனூஉமய்யாவின் ஆக்ஷி காலத்தின்போது இஸ்லாமியப் பெரியோர்களாகிய முஹத்தீன்கள் அதிகார வர்க்கத்தின் தாக்ஷண்ணியத்தை எதிர்ப்பாராமல் தீமைகளைக் கண்டித்து நன்மைகளை ஏவி வந்தார்கள். அக்கிரமம் புரிபவர்களைத் தடுத்து, அவர்களுடைய தவறுகளைப் பகிரங்கமாய் எடுத்துக் கூறிவந்தனர். இங்ஙனம் இவர்கள் தம் கடமையைப் புரிந்து சத்தியத்தை எடுத்துக் கூறியதற்காக, அதிகார வர்க்கத்தினர் அவ்வுத்தமப் பெரியார்களில் சிலரைச் சிறையிட்டார்கள், சிலருக்கு விலங்கும் பூட்டினுர்கள், சிலரை விர்கதியாக்கினர், சிலரைத் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டனர். ஆனல் உலமாக்கள் இக்கொடுமைகளை ஒரு சிறிதும் இலக்ஷியஞ் செய்யாமல் சத்தியத்தையே மேன்மேலும் எடுத்தோதி வந்தார்கள்.

ஹஜ்ரத் ஸயீதுபின் முஸைப்.

(1) ஹஜ்ரத் ஸயீதுபின் முஸைப் என்னும் பெரியார் 'தாபிஈன்' களில் பெரும் பதவி வகித்திருந்தவராவர். இவர்களது சத்திய சேவைகள் உலக மக்களுக் கொரு முன்மாதிரியாகும். இப்பெரியார் அரசர்கள் அளிக்க முன்வந்த சன்மானங்களை ஏற்காமலும், அரசாங்க உபகாரச் சம்பளங்களை விரும்பாமலும் சன்மார்க்கத் தொண்டாற்றி வந்தார்கள். சத்தியத்தை எடுத்துச் சொல்லுங்கால் எவ்வித ஆபத்துக்கும் அஞ்சமாட்டார்கள். ஒருமுறை ஸிரியாதேச கலீபாவின் தூதர் இப்பெரியாரது முன் போய்க் கொண்டிருந்தார். அச்சமயம் அன்னவரை அழைத்து, உங்கள் நாட்டில் பனூஉமைய்யா வர்க்கத்தார்

என்ன நிலையில் இருக்கின்றனர்'' என்று வினவினர்கள். "க்ஷேமமாய்த் தானிருக்கின்றனர்'' என்று அத்தூதர் பதிலளித்தார். ஹஜ்ரத் ஸயீத்பின் முஸைப் அவர்கள் அவரது உண்மையற்ற மொழியை மறுத்து "உங்கள் ராஜ்ஜியத்தில் மனிதர்கள் பட்டினியாய்க் கிடக்க, நாய்கட்கு உணவளிக்கப்படுகிறதல்லவா?'' என்று வினவினர்கள். (அதாவது ஏழைகளெல்லாம் பட்டினியால் வாட இவர்களது பிரயாசையினாலான செல்வத்தைக் கொண்டு அதிகார வர்க்கத்தினர் வயிறு புடைக்க உண்டு சுகிக்கின்றனர், என்பதாகும்.) இதைக் கேட்ட சிரியாத்தூதருக்கு கோபம் வந்துவிட்டது. ஆனால் அப்பெரியார் அவர் கோபத்தைக் கவனியாது மேலும் அவரை நோக்கி 'யான் சத்தியத்தை எடுத்துக் கூறுகின்றேன்; ஆண்டவன் என்னை நிராதரவாய் விடமாட்டான்'' என்று மேலும் கூறினர்.

இங்ஙனம் பெரியாரவர்கள் சத்தியத்தை எடுத்துக் கூறி பனூஉமையாக்களின் அக்கிரமத்தைப் பகிரங்கப்படுத்தியதற்காக பல கொடுமைகள் இழைக்கப்பட்டார்கள். மிகக் கடுமையான குளிர் காலத்தில் அப்பெரியாரின் உடலில் குளிர்ந்த ஜலத்தை ஊற்றி சவுக்காலடித்தார்கள். சிறையிலும் அடைத்துக் கஷ்டப்படுத்தினர்கள். மரண தண்டனையும் விதித்தார்கள்.

இப்ராஹீம் கியம்.

(2) இப்ராஹீம் கியம் என்னும் பெரியார் கூபாதேசத்திய சத்திய உலமாக்களுள் ஒருவராவர். ஹஜ்ஜாஜ் என்னும் அதிபர் இப்பெரியாரைச் சிறையிட்டு வைத்தார்; எனவே தமது ஜீவியமனைத்தையும் சிறையில் கழித்தார்கள். இப்பெரியாரைப்பற்றி யஹ்யா பின் அமீர்என்பவர் எழுதியிருப்பதாவது:— "குர்ஆன் வியாக்கியானத்தில் புகுத்தப்பட்ட குறையைக் கண்டுபிடித்துக் கூறியவருள் இப்பெரியார் தான் முதன்மையானவராவர். முதலில் ஹஜ்ஜான் என்னும் அதிகாரி இப்பெரியாரைத் தேசப்பிரஷ்டம் செய்தனன். எனவே இப்பெரியார் பல கஷ்டநஷ்டங்கள் அடைந்து குராஸான் தேசம் போய் சேர்ந்தனர். அங்கிருந்த கவர்னர் இப்பெரியாரைப் பெருமைப் படுத்தி ஆதரித்தார். சிலநாள் சவுக்கியமாயிருந்தனர். அதற்குள் மேல் அதிகாரியிடமிருந்து உத்தரவுவந்து இங்கிருந்தும் வெளியேறலானர்கள். எனினும் இப்பெரியார் சத்தியத்தை எடுத்து கூறுவதில் பின்னடையவில்லை.

இமாம் ஷாஅபீ.

(3) இமாம்ஷாஅபீ யவர்களுடைய கீர்த்திப் பிரதாபத்தைப் பற்றி அறியாதார் யார்? இவரும் கூபாவாசியேயாவர். முக்தாருடைய ஆக்ஷியின் காலத்தில் இப்பெரியார் கூபாவைவிட்டு மதீனாவுக்கு வந்து சேர்ந்தனர். இதற்குபின், ஹஜ்ஜாஜுடைய ஆக்ஷி காலத்தில் மீண்டும் கூபாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தனர். அரசாங்க சபையில் இப்பெரியாருக்குக் கண்ணியமும் செல்வாக்குமிருந்து வந்தன. மார்க்க விஷயமாக கூபாவில் உலமாக்களுக்கும் ஹஜ்ஜாஜின் வர்க்கத்தாருக்கும் ஒரு சச்சரவு மூண்டுக்கொண்டது. இச்சமயத்தில் நம் இமாம் ஷாஅபீ யவர்கள் நடுநிலைமை வகித்து இருசாராருக்கிடையே நின்று, ஹஜ்ஜாஜின் கொடுமைகளையும் அநீதிகளையும் வெளிப்படுத்திக் கூறினர்கள். இச்சச்சரவில் தோல்வி ஏற்படவே இமாம் ஷாஅபீ யவர்கள் வீட்டுக்குள்போய் 9மாதம் வரைக்கும் பாதுகாவலில்கிடந்துவந்தனர். அதன்பின் தக்கசந்தர்ப்பத்தில் இராணுவத்தோடு சேர்ந்து குராஸான் தேசம்போய் சேர்ந்து, இஸ்லாமியச் சேவை புரிந்துகொண்டிருந்தனர். எனினும் ஹஜ்ஜாஜின் உளவாளிகள் துப்பறிந்து அரசருக்கு இச்செய்தியை தெரிவித்து விட்டனர். எனவே, இமாம் ஷாஅபீயை பிடித்து விலங்கிட்டு அனுப்புமாறு கூபாவின் மேலதிகாரியிடமிருந்து உத்தரவு வந்தது. குராஸான் அதிபர் இமாம் ஷாஅபீயின் பெருந்தன்மையை நன்குணர்ந்தவர். எனவே, தம்மூரை விட்டு வேறெங்கேனும்சென்று தலைமறைத்திருக்குமாறு கோரிக்கொண்டார். ஆனால் இமாம் ஷாஅபீ அவர்கள் இதற்குசம்மதிக்கவில்லை. சிப்பாய்கள் இமாம் ஷாஅபீயை கால் விலங்கிட்டு தலைமை அரசாங்க ஸ்தலத்துக்குக்கொண்டு போனர்கள். ஹஜ்ஜான் அதிபர் மீண்டும் இமாம் அவர்களை விடுதலைச் செய்துவிட்டார்.

இமாம் அபூஹனீபா.

(4) ஹிஜ்ரீ 132ம் ஆண்டில் காலம் அமைதியடைந்திருந்தது. ஸிரியா தேசமும் இராக் தேசமும் க்ஷேமவாழ்வு பெற்றன.

ஹு உமைய்யாக்களுடைய எதேச்சாரிகார ஆக்ஷி ஆதிக்கம் பனூ அப்பாஸியர்களுடைய ஆதீனத்துக்குள் வந்துவிட்டது. இக்காலத்தில்ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது அப்பாஸிவர்க்கத்தைச்சேர்ந்தமன்ஸூர்என்பவரிடம்'பைஅத்து'ப்பெறக் கூடாதென்று மார்க்கப்பெரியோர்கள் ஹிஜாஸில் ஒரு பெரும் இயக்கம் தோற்றுவித்தார்கள். மேன்மைதங்கிய மற்ற உலமாக்களைப்போலவே நமது "இமாம் அபூ ஹனீபா" அவர்கள் "மன்ஸூர் அப்பாஸியிடம் பைஅத்து பெறுதல் கூடாத காரியம் என்றும், கிலாபத் ஆக்ஷி அஹ்லபைத் களுக்குத்தான் உரிமையானதென்றும்" பத்வா விடுத்தார்கள். ஸாதாத் என்ற பெரியோர்களுடைய கக்ஷித்தோல்வி யடைந்த பின்; மேற்படி மன்ஸூர் என்பார் நாட்டைப் பிடித்துக்கொண்டு சுய ஆக்ஷிசெலுத்தினர். இக்காலை இமாம் அபூஹனீபா அவர்களை தனது தர்பாருக்கு வரவழைத்து 'காஜீ' ஸ்தானத்தை ஒப்புக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். நமது இமாம் அவர்கள் அநீதியான அவ்வாக்ஷியில் இப்பதவி வகிக்கமாட்டேன், என்று முற்றும் நிராகரித்து விட்டார்கள். எனவே மன்ஸூர், நமது இமாம் அவர்களை இருள்சிறையில்அடைத்துக் கைதியாக்கினர். உத்தமப் பெரியாரான இமாமவர்கள் அநீதியான காஜீஸ்தானத்தைக் காட்டிலும் சிறைச்சாலையையே சிலாகித்து ஆயுள் காலமனைத்தும் சிறைவாச மனுபவித்து வந்தனர். நமது சத்திய இமாம் அவர்கள் சிறைவாசத்தில் மார்க்கத்தொண்டும், கல்விச்சேவையும்வழக்கம்போல் தமது ஜீவிய காலமெல்லாம் குறைவற புரிந்தே வந்தார்கள். கல்விக்களஞ்சியமான 'இமாம் முஹம்மத்' அவர்கள்நமது இமாம் அபூஹனீபா அவர்களிடம் சிறைவாச மதரஸாவில் படித்துப் பயிர்ச்சிப் பெற்றவர்களேயாவர்.

இமாம் ஹன்பல்.

(5) ஹி. 218-ம் ஆண்டில் மாமூன் என்ற அரசர்"குர்ஆன் ஷரீபு சிருஷ்டிக்கப்பட்டது" என்னுங் கொள்கையை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று அக்கால உலமாக்களை நிர்ப்பந்தப்படுத்தினர். உலமாக்களாகிய பெரியோர்கள் மேற்படிகொள்கையைதிரஸ்கரித்து மாமூனுக்கு வழிப்படாமல் ஸ்திரமாகவும், பிடிவாதமாகவுமிருந்தார்கள். இவ்விதம் ஸ்திரமாயிருந்த பெரியோர்களில் "இமாம் அஹ்மத் பின்ஹன்பல்" அவர்களே முதன்மையானவர்களாவர். இக்காலை இமாம் அவர்கள் பக்தாதில் இருந்துவந்தார்கள். மாமூன் அரசர், பக்தாதின் அதிகாரிக்கு ஓர் உத்தரவு அறிக்கை வெளியிட்டு, இமாம் அவர்களையும் இதர உலமாக்களையும் அழைத்து மேற்படி கொள்கையைப்பற்றி பரீக்ஷை செய்யுமாறு கட்டளைப் பிறப்பித்தார்.

அவ்வாறே இமாம் அவர்களை அழைப்பித்து "குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்டது" என்பதைப்பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று வினவினர். அதற்கு இமாம் அவர்கள், ஒரு சிறிதும் அஞ்சாமல், "குர்ஆன் ஆண்டவனது திருமொழியாகும். அது சிருஷ்டிக்கப்பட்டதன்று. மேலும் உலக ரக்ஷகர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்கு இஸ்லாத்தின் எல்லா மூலக்கொள்கைகளையும் போதித்துள்ளார்கள். ஆனல், குர்ஆன் சிருஷ்டிக்கப்பட்டதென்று ஒத்துக் கொள்வதைப்பற்றி எந்தச்சமயமும் போதித்ததில்லை" என்று விளக்கமாய் பதிலிறுத்து விட்டனர். பக்தாத் அதிகாரி இந்த பதிலைக் கேட்டு இதனை, மாமூன் அரசருக்கு எழுதித் தெரியப்படுத்தினர். பிறகு அரசரிடமிருந்து உத்தரவு வந்தபிரகாரம், இமாம் அவர்களை கால் விலங்கிட்டு கூபாவின் தர்பாருக்கு அனுப்பி வைக்கலானர். இங்ஙனம் சிறையிட்டுச் செல்லுங்கால் ரிக்கா என்னுமிடம் போய் சேரு முன்னரே ரோமாபுரியின் எல்லைப்புறத்தில் மாமூன் அரசர் மவுத்தாகி விட்டார். இவரது மரணத்துக்குப் பின் இவரது ஸ்தானத்துக்கு "முஅதஸிம் பில்லாஹ்"என்பவர் அதிபராய் வந்து கிலாபத் ஆக்ஷி செலுத்தலானர்.

முஅதஸிம் பில்லாஹ்வும் தீய கொள்கைகளில் காலஞ் சென்றதம் தமயனைப் போலவே யிருந்தார். ஆகவே நம் இமாம் அவர்களை விடாமல் ரிக்கா என்னுமிடத்துச் சிறையில் அடைத்து வைத்திருந்தார். முஅதஸிம் பில்லாஹ் ரோமாபுரிக்கு வந்ததும் இமாம் அவர்களை தன் தர்பாருக்கு கொண்டு வருமாறு செய்து, தனது கொள்கையை யொட்டி உலமாக்களிடம் தர்க்கம் செய்தனன். அதுசமயம் நம் இமாம் அவர்கள் சிறிதும் அஞ்சாமல் குர்ஆனின் தூய்மையை பற்றிய உயரிய ஆதாரங்களை எடுத்துக் கூறினர்கள். முஅதஸிம்

ஒரு கற்றறிவாளராயில்லாமல் போர் வீரராக யிருந்தமையால் இமாம் அவர்களின் ஆதாரங்கள் அவருக்கு திருப்திப்படவில்லை. எனவே மீண்டும் இமாம் அவர்களை நோக்கி, "ஒன்றிருக்கில் தாங்கள் கூறியது தவறு என்று ஒப்புக் கொள்ளவேண்டும், இன்றேல் சிறைவாசமனுபவிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டனன். இமாம் அவர்கள் சத்தியத்தைக் காப்பதற்காக வென்று, சிறைவாசத்தையே ஏற்றுக்கொண்டார்கள். இங்ஙனம் 30 மாதங்கள் வரை பற்பல சிறைச்சாலைகளில் பற்பல கொடுமைகளை யனுபவித்து வந்தார்கள். கால் விலங்கினல் கால் புண்ணாய் விட்டால், அவிழ்த்து இடுப்பில் அச்சங்கிலியைகட்டி தொங்கப்போட்டு விடுவார்களாம். ஆனால் தொழுகை, தூக்கம் முதலிய நேரத்தில் மட்டும் விலங்கை அவிழ்த்து விடுவார்கள்.

இமாம் ஹன்பல் அவர்கள் சிறைவாசமும் விலங்குக்கஷ்டமும் அனுபவித்துங்கூட தமது மார்க்கக்கடமைகளை சிறிதும் புரக்கணித்தது கிடையாது. சிறையில் இதர கைதிகளுக்கும் தொழுகையில் இமாமாக இருந்து ஜமாஅத்து நடாத்துவார்கள். மாணவர்கள் இமாமிடம் வந்து பாடங்கற்றுச் செல்வார்கள்.

முஅதஸிம் என்ற அதிகாரி இரண்டு ஆட்களை நியமித்திருந்தார்; இவ்விருவரும் தினந்தோறும் இமாம் அவர்களிடம்சென்று, "தங்கள் அபிப்பிராயத்தில் மாறுதல் ஏதேதும் ஏற்பட்டதா?" என்று கேட்பர். அனுதினமும் அதற்கு "இல்லை" என்ற விடையே கிடைத்து வந்தது. ஒருநாள் இந்த ஆட்கள் மேற்படி பதிலால் மிகக் கோபமடைந்து காவலாளிகளை அழைத்து இமாம் அவர்கட்கு காலில் இரண்டு விலங்குக்கு பதிலாய் நான்கு விலங்கைப் போடுமாறு கட்டளை யிட்டனர். இமாம் அவர்கள் இந்தக் கஷ்டத்தையும் மனமுவந்து மிகப் பொறுமையோடு சகித்துக் கொண்டனர். முஅதஸிம் அதிகாரி இமாம் அவர்களது மனஉறுதியைக் கண்டு வியந்தார். இரண்டி லொரு முடிவை செய்வதற்காக கால் விலங்கிட்டு இமாமை தன் தர்பாருக்கு அழைத்துவர கட்டளை யிட்டார், விலங்கினல் இமாம் அவர்களுடைய கால்கள் புண்பட்டு, நடக்க முடியாமலாய் விட்டதால் ஒருவாகனத்திலேற்றி தர்பாருக்கு கொண்டு போய் தர்பாரில் நிறுத்தப்பட்டனர். உருவிய வாளுடன் கொலையாளிகள் தயாராய் நின்று கொண்டிருந்தனர். இமாமை நோக்கி, இப்போதேனும் தாங்கள் தங்களது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வீரா? மாட்டீரா? என்று கடுமையாய் கேட்கப்பட்டது. அதற்கு இமாம் அவர்கள், "அல்லாஹ்வின் வேதக் கட்டளையையும் ரஸூலுல்லாஹ்வின் (ஸல்)ஸுன்னத்தையும் தவிர்த்து வேறெந்த விஷயத்தையும் நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன்" என்று முடிவு கூறிவிட்டனர். இமாம் மீது சவுக்கடி அடிக்குமாறு கொலையாளிகட்கு உத்தரவு பிறந்தது. அவ்வாறே சவுக்காலடிக்கப் பட்டது. பெருந்தகையாரான இமாம் அவர்கள் தங்கள் மீதுபட்ட ஒவ்வொரு அடியின் போதும், தஸ்பீஹும், கலிமாவும் ஓதி ஆண்டவனை தியானித்தார்கள். பத்தொன்பது அடிகள் கடுமையாய் விழுந்ததும் இமாம் அவர்கள் தாளமாட்டாமல் மூர்சித்து விழுந்துவிட்டார்கள். முதுகிலும் புஜத்திலுமிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஒருகாலத்தில் ரோமர்களுடைய ஆதிக்கத்தை ஆட்டி விட்ட சக்தியை யுடைய முஅதஸிம் அதிகாரி, இமாம் அவர்களின் பரிதாப நிலையையும், மன உறுதியையும் கண்டு திக்பிரமை யடைந்து விட்டார். அதிகாரியின் மனம் உருகிவிட்டது. உடனே இமாம் அவர்களை மன்னித்து விடுதலை அத்தாக்ஷிப்பத்திரம் எழுதிகொடுத்தார்.

ஆ! என்னே பண்டை இமாம்களின் மார்க்க பக்தி! உண்மையில் கண்ணியம் மிக்க உலமாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் உத்தமர்கள் என்பதில் சந்தேகமுண்டோ?

ஹஜ்ரத் பக்கார் இப்னு குல்யா.

(6) ஹஜ்ரத் காஜீ பக்கார் இப்னு குல்யா அவர்களது வாழ்க்கைச் சம்பவமொன்று நமக்கு நற்படிப்பினையை அளிக்கக்கூடியதாயிருப்பதால் அதைமட்டும் இறுதியாய் ஈண்டு கூறுவாம்—:

இப்னுதூலூன் என்பார் அப்பாஸிய அரசாங்கத்தின் சார்பாக எகிப்தின் கவர்னராய் இருந்து வந்தவராவர். தற்பெருமைத் தன்மையானது அவரை எதேச்சாதிகாரமாய் நடக்கச் செய்துவிட்டது. அதுகாலை ஹஜ்ரத் பக்கார் இப்னுகுல்யா அவர்கள் எகிப்தின் காஜீயாக யிருந்துவந்தனர். முதலில் இப்பெரியாரை இப்னுதூலூன் பெரிதும்

பாராட்டி கவுரவித்து வந்தார். ஆண்டுதோறும் ஓராயிரம் தங்க நாணயங்கள் கொண்ட பையை அப்பெரியாருக்கு சன்மானமாக அளித்துவந்தார். கி. பி. 647-ம் ஆண்டில் மேற்படி கவர்னர் கலீபாவுக்கு விரோதமாய் கிளர்ச்சிச் செய்தபோது கலீபாவை பொது மக்கள் பகிஷ்கரித்து விடுவதற்காக பத்வா அளிக்குமாறு காஜீபக்கார் அவர்களை வேண்டிக்கொண்டார். நியாயமில்லாமல், இப்படிப் பட்ட பத்வா அளிக்கமுடியாது' என காஜீ சாஹிபவர்கள் முற்றும் நிராகரித்து விட்டார்கள். எனவே இப்னுதூலூன், காஜீபக்கார் அவர்கள்மீது ஆத்திரங்கொண்டு "என்னுடைய உத்தரவின்படி பத்வா அளிக்க சம்மதமில்லாவிட்டால் இதுவரை யான் சன்மானமாக அளித்துவந்த தங்க நாணயப் பைகளையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடக்கடவீர்" என்று கடிந்தார். காஜீபக்கார் அவர்கள், இதுவரை அளிக்கப்பட்டுள்ள பவுன் பைகளை யெல்லாம் அப்படியே பத்திரமாய் வீட்டில் வைத்திருந்தனர். எனவே சிறிதுந் தாமதமில்லாமல் (அந்த எகிப்து அதிகாரி 18-வருடங்களாய் அளித்துவந்த) 18-பைகளை முத்திரை யிட்டவண்ணமே திரும்ப அளித்து விட்டார்கள். இவ்வற்புதமான நிகழ்ச்சியை கண்ட இப்னுதூலூன் வெட்கத்தால் தலை குனிந்தார். எனினும் குரோதத்தின் காரணமாய் காஜீசாஹிபை பிடித்து சிறையில் அடைத்துவிட்டார். காஜீ சாஹிப் கடுமையான சிறைவாசத்தை ஏற்றுக் கொண்டார்களெனினும், சத்தியத்துக்கு விரோதமாய் கலீபாவை திரஸ்கரிக்கும்படியான அறிக்கையில் கையெழுத்து போடமுடியாதென முற்றும் மறுத்துவிட்டனர்.

காஜீபக்கார் அவர்கள் அவ்வாறே இரண்டு வருடங்கள்வரை சிறைவாச மனுபவித்து வந்தனர். எனினும், கல்வி யபிவிருத்திச் சேவையை இனிது புரிந்தேவந்தனர். இரண்டு வருடங்கட்குபின் மேற்படி சிறைக்கூடத்தின் ஒரு ஜன்னலைத் திறந்து அதன் வாயிலாய் பிறர்க்கு கல்வி போதிக்க அனுமதியளிக்கப் பட்டது. இவ்வாறே காஜீ பக்கார் இப்னு குல்யா அவர்கள் தமது ஜீவியகாலமெல்லாம் சிறைவாசத்திலிருந்து கொண்டும், ஜன்னல் வழியாக மார்க்கக் கல்வியை இதரர்கட்கு போதித்துக் கொண்டும் வாழ்வை கழித்தார்கள். வாழ்க்கையின் இறுதி மூச்சுவரை காஜீயார் அவர்கள் சத்தியத்தின்மீதே ஸ்திரமாயிருந்தார்கள்.

அன்பர்காள்! பண்டைக்கால உலமாக்கள், இமாம்கள்,காஜீகள் ஆகியபெரியோர்கள் தம் கடமைகளை எங்ஙனம் புரிந்துவந்தார்களென்பதை அறிவைகொண்டு நன்காராய்ந்து பாருங்கள். இவ்வுத்தமோத்தமர்களின் ஜீவிய வாழ்க்கைகளினின்று நாம் கிரகித்து அனுஷ்டிக்கவேண்டிய புத்திமதிகளும், படிப்பினைகளும் ஏராளமாயிருக்கின்றனவன்றோ? ஆகவே, நாம் அப்பெரியார்களின் நற்குண நல்லொழுக்கங்களையும், ஸ்திரமான தன்மையையும், மன உறுதியையும், சத்தியத்துக்காக எல்லாவித கஷ்டநஷ்டங்களை சகித்துக் கொள்ளும் அரியதன்மையையும் கைகொண்டு ஒழுகி இகபர நலம் பெற்றுய்வோமாக. வஸ்ஸலாம்!

லார்டு ஹெட்லி அஹ்மதியரா ?

தாருல் இஸ்லாம் ஆசிரியர்களின் பொய்க்கூற்று.

("தப்லீகுல் இஸ்லாம்" ஆசிரியர் A. S. அப்துல் கப்பார் வரைவது.)

முஸ்லிம்களிடை பலவிதத் தீய குணங்கள் காணப்படினும், பொய் உரைப்பது என்பது அவர்களிடை காணப்பட மாட்டாது என்பது திண்ணம். "மௌலானா" தாவூத்சா சாஹிபும், அவரின் முதல் ஆசிரியராகிய யூசுப்பாகவியும் பின்பற்றும் முறைகளை ஆராயப்புகுங்கால், இவ்விருவர்களும் நம் தீனுல் இஸ்லாத்துக்குத் தங்கள் உடல், பொருள், ஆவியாவையும் தியாகஞ் செய்துவிட்டதாகப் பறைசாற்றிப் பாமர முஸ்லிம்களை ஏமாற்று

வது, தம் "தாருல்இஸ்லாம்" வியாபாரமூலம் பணஞ்சம்பாதிப்பதற்கேயன்றி வேறு எதற்காகவுமல்ல வென்பது வெள்ளிடைமலைபோல் விளங்காநிற்கின்றது.

"தாருல் இஸ்லாம்" மாத சஞ்சிகையாய் வெளிவந்துலாவிக் கொண்டிருந்தபோது லார்ட்ஹெட்லி, முஹம்மது மார்மடியூக் பிக்தால் முதயவர்களை நம் தீனுல் இஸ்லாத்திலாக்கியவர் காஜா கமாலுத்தீன் என்பதாக ஓர் அபாண்டப்புளுகை "மௌலானா" தாவூத்சா சாஹிப் வெளியிட்டார். அவ்வயமே நம் "மௌலானா" அவர்களைப் பீடித்திழுக்கும் பொய்யுரைபுகலும் பிணிக்குப்போதிய ஔடதத்தை ஈரோடு "தாஜுல் இஸ்லாம்" பத்திரிகை மூலமாகப் புகட்டியிருந்தேன். பின்னரும் நாம் நம் தப்லீகுல் இஸ்லாம் பத்திரிகை மூலமாயும் அன்னவரின் பொய்ப் பிரசாரத்தின் மர்மங்களை வெளிப்படுத்தியிருந்தும் "தென் இந்திய ஸர் செய்யத்" உண்மையை ஒப்புக்கொள்வதாய்க் காணப்படவில்லை.

சென்ற ஆகஸ்டுமீ 7, 14-ந் தேதிகளில் வெளிவந்த "தாருல் இஸ்லாம்" பத்திரிகைகளில் முன்கூறிவந்த பொய்க்கூற்றுகளை மறுபடியும் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. 7வ பத்திரிகையில் 'லார்ட் ஹெட்லி அவர்கள் ஓர் அஹ்மதியென்றும், காஜா கமாலுத்தீன் என்பவரின் சிஷ்யரென்றும் ஹாபிஸ் பாகவியால் வரையப்பட்டிருந்தது. 14வ வெளியீட்டில் லார்ட் 'ஹெட்லி, மார்மடியூக் பிக்தால், காலித் ஷெல்டிரேக் முதலியோர் யாவரும் காஜா கமாலுத்தீனுடைய சிஷ்யர்களென்றும், "காஜா கமாலுத்தீன் லண்டனுக்குச் சென்று தாம் இஸ்லாமியப் பிரசாரவேலையை ஆரம்பிக்குமுன்னரே தீனுல் இஸ்லாத்தைத் தழுவிவிட்டதாகக் கூறிப் பொதுமக்களின் கண்களில் மண்ணைத் தூவிவிடப் பார்ப்பார்கள்" என்றும் "மௌலானா" தாவூத்சா சாஹிப் எழுதியுள்ளார். நாம் உலக சரித்திரத்தைப் பார்த்தமட்டில் பொய் யுரைப்பதில் காதியானி (அஹ்மதி) களைப் போன்ற சாமார்த்தியமுடையவர்களை இதுவரை காணவில்லை. ஆனால், கொஞ்சமேனும் சுயமரியாதை யுடையவனுக்கு உள்ளதை எடுத்துக் கூறினால் உடனே தனது தவறுகளை உணர்ந்து சத்தியத்தைப் பின்பற்றி நடந்துகொள்வான்; ஆனால், காதியானிகளுக்கு திருக்குர்ஆனில் (2 : 6) முன்னறிக்கை செய்துள்ளவண்ணம் அவர்களுக்கு எவ்வளவு உபதேசஞ் செய்தபோதிலும் செவிடன் காதில் சங்கூதுவதுக் கொப்பாயிருக்கும். எனினும், "தாருல் இஸ்லாம்" ஆசிரியர்களின் பொய்க்கூற்றின் மர்மங்களை யெடுத்து உரைக்க உத்தேசிக்கின்றோம்.

(1) முதன் முதலாக லார்ட் ஹெட்லியுடைய விஷயத்தைக் கவனிப்போம்:—

காஜா கமாலுத்தீன் லண்டனிலிருந்து பிரசுரித்துவந்த "இஸ்லாமிக் ரிவியூ அண்டு முஸ்லிம் இண்டியா" வென்னும் மாதச் சஞ்சிகையின் 1913ம் வருடம் டிஸம்பர் மாத இதழில் லார்ட் ஹெட்லி அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய விஷயம் வரையப்பட்டிருந்தது. அதில், "முஸ்லிம்களின் தூண்டுகோலின் மீது நான் இஸ்லாத்தைத் தழுவியதாய் எமது நண்பர்கள் யூகிக்கக்கூடும் உண்மை அவ்வாறன்று! "எனது நண்பர் காஜா கமாலுத்தீன் இவ்விஷயத்தில் ஒரு சிறிதேனும் என்னைத் தூண்ட வில்லை என்று லார்ட் ஹெட்லி அவர்களே கூறியுள்ளார்கள். தவிர லண்டனிலுள்ள இஸ்லாமிய சங்கத்தில் தாம் பேசுங்கால் "இஸ்லாம் மார்க்கத்தைத்தாம் தழுவிய விஷயத்தைக் கூறும்போது பொதுவாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டியது அவசியமெனதோன்றுகிறது! இஸ்லாத்தின் மீது இந்த இருபது வருட காலமாக நான் கொண்டிருக்கும் அபார நம்பிக்கையை என்னால் மாற்ற முடியாது" என்றும் லார்ட் ஹெடலி கூறியிருக்கின்றார். (ஆங்கிலப்பத்திரிகை டெய்லி நியூஸ் 1913-ம் வருடம் டிஸம்பர் மாதம் 9-ந் தேதி பிரதி பார்க்க. லார்டு ஹெட்லி, "நான் இஸ்லாமைத்தழுவும் விஷயமாய் காஜா கமாலுத்தீன் என்னை எள்ளளவேனும் தூண்டவில்லை" என்று தம்மாலியற்றப்பட்ட (A Western awokening to Islam) என்ற ஆங்கில நூலின் 12ம் பக்கத்தில் வரைந்துள்ளார். 1914-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ந் தேதியன்று ஹஸ்ரத் அக்தஸ் மௌலானா மௌலவீ அஹ்மத் றஹ்பானி அவர்களுக்கு லண்டனிலிருந்து ஜனப்ஷாஹ் நிஃமத்துல்லா சாஹிபவர்கள் அனுப்பிய கடிதத்தில், நான் அவர்களிடம் (லார்ட் ஹெட்லியிடம்) ஒரு முறை சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது "தொழுகையில் சஜ்தா

முதலியன புரிவதற்கு உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்று நான் யூகிக்கின்றேன்'' என்று கூறினேன். அதற்கு "இருபது வருடகாலமாய் இந்த (இஸ்லாமிய) முறைப்படியே யான் வணக்கஞ்செய்து வருகின்றேன்'' என்று லார்டு ஹெட்லி மறுமொழி அளித்தார் என்று எழுதியுள்ளார். 1930-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இலங்கை "யங் முஸ்லிம் லீக்'' வெளியிட்ட "ஸெரந்தீப்'' பத்திரிகையில் லார்டு ஹெட்லியின் கடிதமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தில், அவர் அஹ்மதியல்லவென்றும், மிர்சா குலாம் அஹ்மதை "வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ்'' என்றோ, அல்லது "நபீ'' என்றோதாம் விசுவாசிக்கவில்லை யென்றும் எழுதப்பட்டிருந்தது.

"தாருல் இஸ்லாம்'' ஆசிரியர்களின் கூற்றுப் பொய்யென்று நிரூபிக்க இத்தனை ஆதாரங்களிருக்க, லார்டு ஹெட்லி அஹ்மதியென்றும், காஜா கமாலுத்தீனால் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார் என்றும் மீண்டும் மீண்டும் கூறுவது நாணமற்ற தன்மையாகவே காணப்படுகிறது.

(2) முஹம்மத் மார் மடியூக் பிக்தால், இஸ்லாத்தைத் தழுவியதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:—

"சிறு வயதிலிருந்தே இஸ்லாத்தில் எனக்கு இயற்கையாகவே பற்றுதலுண்டாய் விட்டது. யான் பாலியவயதிலேயே இஸ்லாம் மார்க்கத்தின் பல நூல்களை பார்வையிட்டிருந்தேன். அப்புத்தகங்களைப் பார்வையிட்டதன் பயனாக யான் உண்மையில் இஸ்லாமியக்கொள்கைகளை யுடையவனாகி விட்டேன்; எனக்கு வயது வந்தபோது பைத்துல் முகத்தஸிலுள்ள பெரிய முப்தியிடம் சென்று அப்பெரியாரின் கரங்களால் இஸ்லாத்தைத் தழுவும்பொருட்டு எனது விருப்பத்தை வெளிப்படுத்தினேன். இதற்கு "நீயோ சிறு பிள்ளையாய் இருக்கின்றாய், உன்னை இப்பொழுது இஸ்லாத்தில் சேர்த்தால் பின் ஒரு சமயம் இஸ்லாத்தைவிட்டும் மாறிவிடக்கூடும் என்று நான் அஞ்சுகின்றேன்'' என்று கூறி இஸ்லாத்திலென்னைச் சேர்க்காமல் மீண்டும் சொற்பகாலம் வரை இஸ்லாமிய நூட்களை நோட்டமிடும்படியாகக் கற்பித்தார். ஆனால், இஸ்லாத்தின்மீது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியானது நாளுக்கு நாள் அதிகரித்து வரவே இறுதியாக கான்ஸ்டாண்டி நோபிளுக்குப்போய் தல்அத் பாஷா ஷஹீத் அவர்களின் கரங்களில் 1912 வது ஆண்டு இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினேன்.'' (1928-ம் வருடம் ஜனவரிமாதம் 21-ந் தேதி வெளியாகிய 'தன்வீம்'' பத்திரிகையைப் பார்க்க.)

சகோதரர்காள்! "தாருல் இஸ்லாம்'' ஆசிரியர்களின் அபாண்டப் புளுகை அறிந்தீர்களா? பாமர ஜனங்களின் கண்ணில் மண்ணைத் தூவுவது யார்? "தாருல் இஸ்லாம்'' ஆசிரியர்களா? அன்றேல் மற்ற முஸ்லிம்களா?

(3) டாக்டர்காலித் ஷெல்டிரேக் அவர்கள் "நான் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவுவானேன்?'' என்ற தலையங்கமிட்டு ஓர் பிரசங்கஞ்செய்தார். அப்பிரசங்கத்தைக் காஜா கமாலுத்தீனால் 1914-ம் வருடம் செப்டம்பர் மாதம் வெளியான "இஸ்லாமிக் றிவியூ அண்டு முஸ்லிம் இண்டியா'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அப்பிரசங்கத்தில், "சத்தியத்தைப் பத்து வருடங்களுக்கு முன்னர் அறிந்து நான் ஒருமுஸ்லிமாயிருக்கிறேன் என்றுணர்ந்துகொண்டேன். நான் முதன் முதலாகச் சந்தித்த முஸ்லிம், டாக்டர் அப்துல்லா அல்மாமூன் ஸொஹ்ரவர்தியாகும்............அவரிடம் நான் சம்பாஷித்து முடிந்தபின் எனது சந்தேகம் முழுதும் நீங்கி நான் முஸ்லிமென்று விளம்பரப்படுத்தினேன்'' என்று கூறியுள்ளனர். (இஸ்லாமிக் றிவியூ அண்டு முஸ்லிம் இண்டியா 2-வது வால்யூம் 376-ம் பக்கம் பார்க்க.)

டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களை ஆசிரியராய்க்கொண்டு வெளிவந்த "மினரெட்'' பத்திரிகை 1927-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரசுரிக்கப்பட்ட இதழின் 4-ம் பக்கத்தில் "தான் அஹ்மதியரை ஒருபோதும் சேரவில்லை யென்றும், இஸ்லாமைத் தழுவியது 1903-ம் ஆண்டிலென்றும்'' டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களே எழுதியுள்ளார். எனவே, டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்கள் காஜாகமாலுத்தீன் இங்கிலாந்திற்குப் போவதற்குச் சுமார் பத்துவருடங்களுக்கு முன்பேயே, அதாவது 1903-லே டாக்டர் அப்துல்லாஅல்மாமூன் ஸொஹ்ரவர்தி அவர்

களின் கரங்கரங்களில் இஸ்லாத்தைத் தழுவினர் என்பது வெளிப்படை.

எனவே, காஜா கமாலுத்தீன் இங்கிலாந்துக்குப் போகுமுன்னமேயே முஸ்லிம்களாயிருந்தவர்கள், அவர் இங்கிலாந்து சென்றபின் அவரால் இஸ்லாத்தைத் தழுவச்செய்யப்பட்டனரென்றும், அவரது சீடர்களாய் விட்டனரென்றுங் கூறுவது பச்சைப் பொய் என்பது கூருமலே விளங்கும். இது, தாய்க்கு முன்னமேயே அவளது பிள்ளை பிறந்ததாகச் சொல்லும் கதையைப் போலத்தானிருக்கிறது. இப்படிப்பட்ட கெட்ட பொய்யுரைக்கும் அஹ்மதிகளும் காதியானிகளும் பாமர முஸ்லிம்களின் கண்ணில் மண்ணை யள்ளித் தூவப் பார்க்கின்ருர்கள். எச்சரிக்கையாய் இருங்கள்! "எவனில் விசுவாசம் (ஈமான்) இல்லையோ அவனில் வெட்கமில்லை; வெட்கமில்லாதவனுக்கு ஈமான் (விசுவாசம்) இல்லை" யென்று நமது நபிகள் நாயகம் (ஸல்.) கூறியது சத்தியமே சத்தியம்.

முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

(மாணவர் அ. அ. அ.)

இந்திய மக்களுள் ஹிந்துக்களே பெரும்பான்மையின ரென்பதையும், அவர்களிடையே எண்ணத் தொலையாத பல்வேறு பிரிவினைகள் இருக்கின்றனவென்பதையும் நீங்கள் நன்கறிவீர்கள். எனினும், அந்த ஹிந்துக்கள் தம்முள் பிரிவினைகள் இருப்பதன் காரணமாகப் பரஸ்பரச் சச்சரவு பூண்டு ஏனைய மார்க்கத்தினர் அவர்களைப் பார்த்துப் பரிகசிக்குமாறு நடந்துகொள்வ தில்லை. பிரிவினைகளுடேயும் ஐக்கியத்தன்மை காணப்படுவது ஓர் ஆச்சரியமான விஷய மன்றே?

அன்னர் இவ்விதம் ஒற்றுமையுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அவர்களது தலைவர்கள் தம் சமூகத்திடையே ஒற்றுமையை நிலைநிறுத்தச் செய்வதற்குள்ள வழிகளை யாராய்ந்து பார்த்து அவ்வழிகளை எல்லோரும் பின்பற்றச் செய்வதில் இடைவிடா முயற்சி செய்துவருவதேயாகும்.

ஆனல், சகோதர தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம்கள் என்ன செய்கின்றனர்? தமது சமூக மார்க்க அபிவிருத்தியில் சிரத்தையுறுது சுத்த சோம்பேறிகளாயிருந்து வருகின்றனர். இதன் பயனுக இந்தியாவில் பல சமஸ்தானங்களிலும், உலகத்தின் ஏனைய பாகங்களிலுமுள்ள முஸ்லிம்கள் பிறமார்க்கத்தினரின் தொந்தரவுக்குள்ளாகி வருகின்றனர். மற்ற மார்க்கத்தினரெல்லோரும் தமக்குள் எத்தனை சச்சரவுகளிருப்பினும் இஸ்லாத்தை ஒடுக்கும் விஷயத்தில் ஒத்துழைக்கின்றனர். ஆனல் முஸ்லிம்களாகிய நாமோ இன்னும் உறக்கத்திலேயே ஆழ்ந்திருக்கிருேம்; நாம் உழைக்க வேண்டியதைப்பற்றி மூச்சு விடாமல் பேசிய வண்ணமாக இருந்து வருகிருேம். ஆனல் செயலிலோ எல்லாம் பூஜ்யமாகத்தானிருக்கிறது. இவ்வாறு நம் காலத்தைக் கடத்தி வருவோமாயின் பின் நம் சமூகமும், மார்க்கமும் அபிவிருத்தியடைவதெங்ஙனம்? நாயகம் (ஸல்.) அவர்களும், அவர்களது சஹபாக்களும் ஒரு சிறு கோஷ்டியினராக இருந்தும், உலக முழுவதிலும் இஸ்லாத்தை பரவச்செய்ததற்கு அடிகோலி விடவில்லையா? மிகச் சிறிய காலத்துள்ளேயே இஸ்லாத்தை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா முதலிய கண்டங்களில் உச்சஸ்தானமடையச் செய்யவில்லையா? இப்பொழுதோ முஸ்லிம்கள் கோடிக்கணக்காயிருக்கின்றனர். இருந்தும் பயன் என்ன?

முஸ்லிம்கள் இவ்வாருக தம் சமூக, மார்க்க விஷயங்களில் போதுமான ஊக்கமெடுத்து உழைக்காததாலேயே ஏனையமார்க்கத்தினர் இஸ்லாத்தை அடியோடு ஒழித்துவிடுமாறு மேலும் மேலும் முயற்சிசெய்த வண்ணமாயிருந்து வருகின்றனர். திருப்போலியில் இத்தாலியர்கள் செய்த அட்டூழியங்களைப்பற்றி நீங்கள் எல்லோரும் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். திரிப்போலி முஸ்லிம்கள் சுதந்

திரக் கிளர்ச்சி செய்ததைக் காரணமாக வைத்துக்கொண்டு இத்தாலிய சிப்பாய்கள் வயோதிகரென்றும், ஸ்திரீகளென்றும், குழந்தைகளென்றும் பாராமல் முஸ்லிம்களைக் கொடுமைக் குள்ளாக்கினர்; ஸ்திரீகளைக் கற்பழித்தனர்; கன்னிப் பெண்கள் சிப்பாய்களின் மிருகத்தன்மைக் கிலக்காகி உயிர் துறந்தனர்; அந்த முஸ்லிம் மாதுகள் இத்தாலிய இராணுவ உத்தியோகஸ்தரின் இஷ்டத்துக்கு உட்பட கட்டாயப் படுத்தப்பட்டனர். பல முஸ்லிம்கள் வீடு வாசல்களை விட்டும் வெளியேற்றப்பட்டு பாலைவனத்துக்குத் துரத்தப்பட்டனர்.

ஐரோப்பாவின் சமீபத்திலேயே இந்த அனியாயங்கள் நடந்து வந்தும் ஏனைய நாட்டினர் அவற்றைக் கண்டிக்கக் முன்வரவில்லை. துருக்கிய முஸ்லிம்கள் இத்தாலிய சாமான்களை பகிஷ்கரித்து வருகின்றனர்; நாமும் அவ்விதஞ் செய்துவரல் வேண்டும். இத்தாலியின் துணிகளையும், தொப்பிகளையும், குடைகளையும் முற்றும் பகிஷ்கரிக்க வேண்டும்.

காஷ்மீர் போன்ற ஹிந்து சமஸ்தானங்களிலும் முஸ்லிம்கள் பலவித கஷ்டநஷ்டங்களுக் காளாகி வருகின்றனர். ஆகவே, முஸ்லிம் இளைஞர்காள்! வாலிபராகிய நாம் இனியும் வாளா இருக்காது நமக்குள்ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு சமூக, மார்க்கத் தொண்டாற்ற முன்வரல் வேண்டும். இதற்கு நீங்கள் தொண்டர்படை ஒன்று ஏற்படுத்திக் கொண்டு அதை அபிவிருத்தி செய்து வர வேண்டும்.

ஒரு கண்ணோட்டம்

சென்னை, தாருல் இஸ்லாம் ஆசிரியர்களால் ஹிஜ்ரி 1350 ரபீஉல் அவ்வல் பிறை 12 (28—7—1931) மீலாதெ ஷரீபுக்காக இயற்றப்பெற்ற "உலக மதபோத உத்தமர்" என்னும் புத்தகம் சரியானதா?

உலகமதபோத உத்தமர், என்னும் புத்தகத்தில் நம்இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு முரண்பாடான விஷயங்களும், நந்திருமறையாம் குர்ஆனின் வாக்கியங்களுக்கு அதன் விரிவுரைக் கர்த்தாக்களால் கூறப்படாத கருத்துக்களும், அரபி பாஷா ஞானமுள்ள எவரும் வெறுக்கத்தக்க பொருள்களும் நிறைந்துகிடக்கின்றன. அன்றியும் பைபிளில் கூறப்பட்டிருக்கும் ஒரு சில போலி விஷயங்களை ஆதாரமாய்க் கருதி, பரிசுத்த தீர்க்கதரிசிகளாகிய நபிமார்களை ஏளனம் செய்தும், இழிவுபடுத்தியும் அந்நூலில் வரையப்பட்டிருக்கின்றன.

"மீலாதெஷரீபின்" வைபவத்தின்போது இவ்வித நூல்களை விநியோகிப்பதினால், அந்நிய மதஸ்தர்களின் இருதயத்தைக் கவரச் செய்து அவர்களை இஸ்லாத்தின்பால் வயப்படுத்துவதையே முக்கிய நோக்கமாய்க் கருதப்படும் இக்காலை, இதரமதஸ்தர்கள் வெறுப்புக் கொள்வதற்குரிய மததூஷணைகளும், பொய்க்கதைகளும் 'உலகமதபோத உத்தமர்' எனும் அந்நூலில் மலிந்து கிடக்கின்றன. அவைகள் யாவையும் இங்கு எடுத்து எழுதுவதென்றால் அஃதோர் பெரிய புத்தகமாகும் எனக் கருதி விடுத்து, நம் தீனுல் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பாடான ஒரு சில குற்றங்களை மாத்திரம், கீழே குறிப்பிடுகின்றோம். அவையாவன :—

"உலக மதபோத உத்தமர்" என்னும் அப்புத்தகம் 9-வது பக்கத்தில் "அன்றியும் இத்தரணியின்கண் ஒன்று அழிந்து மற்றொன்று உற்பத்தி யாகுங்கால், மனிதனே அதனைச் சிருஷ்டித்து விடுவது முடிவதில்லை. உதாஹரணமாக, இவ்வுலகில் மரித்து வரும் மனிதர்களின் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன" என்று வரையப்பட்டிருக்கின்றது. இந்நவீன மறுபிறப்புக் கொள்கை நம் சுத்த சத்திய இஸ்லாத்திற்கு முற்றிலும் விரோத

மானதாகும், ஏனெனில், இக்கொள்கை "ஆலமே பர்ஸகில்" (கப்ரில்) இன்ப துன்பம் உண்டு என்பது உண்மை என்னும் இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கையை முற்றிலும் தகர்க்கக்கூடியதாய் இருக்கின்றது. மேலும் இந்நவீன கொள்கையின்படி இறுதிநாளில் (கியாமத்தில்) எல்லோரும் எழுப்பப்பட்டு தீர்ப்பளிக்கப் படுவார்கள், என்னும் இஸ்லாத்தின் பிரதானக் கொள்கையையும் மறுக்கவேண்டியதாகு மன்றோ? உண்மையில் கப்ருடைய இன்பதுன்பம் உண்டு என்பதையும், இறுதிநாளில் எல்லோரும் எழுப்பப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுவார்கள் என்பதையும் மறுப்பவர்கள் ஒரு போதும் முஸ்லிம்களாய் இருக்கமுடியாது என்பது இஸ்லாம் மார்க்கத்தின் சம்பிரதாயமாகும்.

ஒரு சரீரம் நாளடைவில் பல ஆன்மாக்களைப் பெறுகிறதென்னும் அக்கொள்கையோடு தீர்ப்பு நாள் உண்டென்னும் நம்பிக்கை கொள்ளலாம் என எவரும் கூற முன்வரின், அது சம்பந்தமாகவும் பல கேள்விகள் பிறக்கின்றன. அவைகளில் சிலவற்றை குறிப்பிடுகின்றோம் :—

"தவறான இக்கொள்கையின்பிரகாரம் ஒரு காலத்தில் அப்துல்லாவின் சரீரமாய் இருந்த அணுக்களே, மற்றொருகாலத்தில் அமானுல்லாவின் சரீரமாகவும், பின்னுமொரு காலத்தில் யூஸுப் என்பவனின் சரீரமாகவும் ஏற்படுவது சாத்தியமாயிருக்கின்றது. ஆகவே இம்மூவரில் முதன்மையானவன் ஈமான் கொண்டு நன்மையே செய்தான். இரண்டாவதானவன் ஈமானோடு தீமையே செய்து வந்தான். மூன்றாவதானவன் முனபிக்காய் இருந்து காபிராய் மரித்தான் என்று வைத்துக்கொண்டால், இறுதிநாளாகிய தீர்ப்பு நாளில், அவ்வணுக்களை இம்மூவரில் எவனுடைய சரீரமாக எழுப்பப்படும்? அப்துல்லாவின் சரீரமாகவா? அல்லது அமானுல்லாவின் சரீரமாகவா? இல்லையேல் யூஸுபின் சரீரமாகவா? அவ்வாறு இம்மூவர்களில் எவனது சரீரமாகவேனும் அவ்வணுக்கள் ஆக்கப்படின், மற்ற இருவர்களின் நிலைமை என்ன? அவர்கள் எழுப்பப்படுவார்களா? இல்லையா? எழுப்பப்படுவார்களாயின் அவர்களுக்குச் சரீரம் ஏது?

இவ்வுலகில் உற்பத்தியாகும் ஒவ்வொரு மனிதரது சரீரமும், அதற்குமுன்னர் இருந்து இறந்துபோனவர்களின் சரீரத்தின் அணுக்களையே உபயோகித்துச் சிருஷ்டிக்கப்படுவதாயின், ஆதி மனிதரின் சரீரம் எவ்வாறு உற்பத்தியானது? அதற்குமுன்னர் எம்மனிதரும் இவ்வுலகில் இருந்ததில்லை. தவிர, முற்காலத்தின் ஜனசங்கியையைவிடப் பிற்காலத்திலுள்ள ஜன சங்கியை அதிகப்படுவதற்கு எவ்வித நியாயமுமில்லை. எனினும், நாளுக்கு நாள் ஜன சங்கியை அதிகரித்துக்கொண்டு போவதை நாம் பிரத்தியக்ஷத்தில் காண்கின்றோம். ஆகவே "உலகமதபோத உத்தமர்" என்னும் நூலின் ஆசிரியர்களினுடைய இக்கூற்று அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும், அனுபவத்திற்கும் முற்றிலும் மாறானதென்பதை சொற்ப அறிவுடையோரும் எளிதில் உணர்ந்துகொள்ளலாம்."

ஷை புத்தகம் 10-ம் பக்கத்தில் "இவ்வாறெல்லாம் யூதமதம் கிறிஸ்துமதம் முதலியவற்றாலும் ஒன்றும் மனிதவர்க்கம் திருத்தமடையாத காலத்தில் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா தன் கரத்தைக் கட்டிக்கொண்டு வாளா இருந்து விடுவானென்று எண்ணுகின்றீர்கள்" என்று வரையப்பட்டிருக்கின்றது. அதில் "தன் கரத்தைக் கட்டிக்கொண்டு" என்று ஆண்டவனைப் பற்றிக் கூறுவது தவறாகும். ஏனெனில், நம் மார்க்க நிர்ணயப் பிரமாண கிரந்தக் கர்த்தாக்கள், நம் திருமறை வாக்கியங்களிலும் நாயகத் திருவசனங்களிலும் கூறப்பட்டிருக்கும் முறையே அல்லாமல் வேறுவிதமாய் அரபிபாஷையில், ஆண்டவனது ("எது") 'கரம்' என்னும் வர்ணனையைக் கூறவும் எழுதவும் கூடாதென்றும், (அவ் வர்ணனை பொதிந்திருக்கும் அரபி வாக்கியங்களை அவ்வாறே மொழிபெயர்க்கும் சந்தர்ப்பங்களைத் தவிர) அரபியல்லாத வேறு பாஷையில் பொதுவாய் ஆண்டவனின் திருக்கர மென்றோ, அல்லது 'தஸ்தெமுபாரக்' என்றோ எழுதுவதும் உரைப்பதும் கூடாதென்றும் கூறிச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, இவ்வாறு ஆண்டவனின் திருக்கரமென்று கூறுவதுங் கூட குற்றமாகுமெனில் "எல்லாம்வல்ல அல்லாஹுத்தஆலா தன் கரத்தைக் கட்டிக்கொண்டு வாளா இருந்துவிடுவானா" என்றெழுதுவது எவ்வாறுபொருந்தும்? அதைக்

கண்ணுற்ற எந்த உண்மை முஸ்லிமின் ஹிருதயம்தா கொதிப்படையாமல் இருக்கும்? எனவே, அவ்வார்த்தைகளை அடாத மொழிகளென்றே கருதுகின்றோம்.

அப்புத்தகம் 5-வது பக்கத்தில் குர்ஆனின் 2: 213-வது வாக்கியத்தின் மொழி பெயர்ப்பு காணப்படுகின்றது; அம்மொழி பெயர்ப்பில் அநேகப் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளுள் "பஅஸ" என்னும் மூலபாஷை பதத்திற்கு "எழுப்பி வைத்தான்" என்று மொழிபெயர்த்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். ஆகவே, அப்பதத்திற்கு "அனுப்பி வைத்தான்" என்று மொழிபெயர்ப்பதுதான் சந்தர்ப்பத்திற்கேற்றதாயும், அர்த்த புஷ்டி உள்ளதாயும் இருக்கின்றது. மேலும், விரிவுரை கர்த்தாக்களின் வியாக்கியான நடைக்கும் தமிழிலும் அரபியிலும் பாஷா ஞானம் படைத்தோரின் பொருட் சுவைக்கும், உணர்ச்சிக்கும் ஒத்ததாயிருக்கின்றது.

அப்புத்தகம் 6-வது பக்கத்தில் 16: 63: 64-வது திருமறை வாக்கியங்களின் மொழி பெயர்ப்பு காணப்படுவதில் அநேக குற்றங்கள் காணக்கிடக்கின்றன. என்றாலும் அவைகளில் "வமா அன்ஸல்னா" என்னும் மூல பாஷை பதங்களுக்கு "வெளியாக்கித் தரவில்லை" என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். "இன்ஸால்" என்னும் தாதுவிலிருந்து பிறந்த "அன்ஸல" என்னும் பதத்திற்கு "வெளியாக்கித் தந்தான்" என்று வியாக்கியானம் செய்வது சுத்தத் தவறாகும். அதே புத்தகம் 5-வது பக்கத்தில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கும் 2: 213-வது திரு வாக்கியத்தில் வந்திருக்கும் "அன்ஸல" என்னும் பதமும் நாம் இப்பொழுது பேசிவரும் "வமா அன்ஸல்னா" என்னும் திருமறை வாக்கியத்திலுள்ள "அன்ஸல" என்னும் பதமும் முற்கூறிய "இன்ஸால்" என்னும் ஒரே தாதுவிலிருந்துதான் பிறந்திருக்கின்றன. ஆனால் அங்கு இறக்கி வைத்தான் என்றும், இங்கு வெளியாக்கித் தந்தான் என்றும் வரையப்பட்டிருக்கின்றது. எனவே, "வமா அன்ஸல்னா" என்னும் பதங்களுக்கு இறக்கிவைக்கவில்லை என்று மொழி பெயர்க்காமல், வெளியாக்கித் தரவில்லை என்று மொழிபெயர்த்திருப்பது அறியாமையேயாகும்.

அப்புத்தகம் 46-வது பக்கத்தில் குர்ஆன் 110-வது அத்தியாயத்தின் மொழிபெயர்ப்பு வரையப்பெற்றிருக்கிறது. அது முற்றிலும் தவறாகவே இருக்கின்றது. ஏனென்றால் "வஸ்தஃபிர்ஹு" என்னும் வாக்கியத்திற்கு "அன்றியும் அவனுடைய பாதுகாப்பைத் தேடுக" என்றும், "கானதவ்வா" என்னும் வாக்கியத்திற்கு "கிருபையுடனே மீளக்கூடியவனாயிருக்கிறான்" என்றும் வியாக்கியானம் பண்ணுவது முற்றிலும் பிசகேயாகும். இவைகளுள் முந்திய வாக்கியத்திற்கு "அன்றியும் அவனிடம் குறை நிவர்த்திக்கக் கோருவீராக" என்றோ, அல்லது "பிழை பொறுக்கத் தேடுவீராக" என்றோ, அல்லது "மன்னிப்புத் தேடுவீராக" என்றோ மொழிபெயர்ப்பது தான் சரியானதாகும். இரண்டாவது வாக்கியத்திற்கு (பாவத்தினின்று விலகி தன்பால் மீளுவோரை) "அன்போடு ஏற்றுக்கொள்பவனாய் இருக்கின்றான்" என்றோ, அல்லது (தனக்கு வழிபடும் அடியாரை நேரான வழிப்யில்) "திரும்புவோனாய் இருக்கின்றான்" என்றோ அர்த்தம் செய்வதே சரியானதாகும். நம் திருமறை வாக்கியங்களுக்கு அர்த்தம் செய்வதில் விரிவுரை கர்த்தாக்களில் எவரையுமே பின்பற்றாமல் சுய அபிப்பிராயத்தைக் கொண்டு பொருள் உரைப்போன் காபிரானவான் என்பதற்கு நாயகத் திருவசனம் சான்றாகும். அன்றியும் நம்மார்க்க நிர்ணயக் கலைஞானிகளும் ஏனைய அறிஞர்களும் அவ்வாறே தீர்மானித்திருக்கின்றார்கள். இந்நிலைமையில் "உலக மதபோத உத்தமர்" என்னும் அப்புத்தகத்தின் இரு ஆசிரியர்களும் அதில் வரைந்துள்ள திருமறை வாக்கியங்களுக்கு மேலே நாம் குறிப்பிட்டவாறு நம்முடைய விரிவுரைக் கர்த்தாக்களில் எவரையும் பின்பற்றாமல் தங்கள் மனதில் வந்தவாறு பொருள் உரைத்து அநேக இடங்களில் தவறிழைத்திருப்பதை நாம் பலமாய்க் கண்டிக்கின்றோம். ஆகவே, அவ்விரு ஆசிரியர்களும் இத்தவறுகளை உணர்ந்து பஹிரங்கமாய் அவைகளை ஏற்றுக்கொள்வார்களாயின் உண்மை முஸ்லிம்களால் பாராட்டப்படுவதுடன் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவின் கருணை கடாக்ஷத்திற்கும் ஆளாவார்கள். ஆகவே, நேர்வழியைப் பின்பற்றுவோர்களுக்கு ஆண்டவன் இகபர வாழ்வு தருவானாக! அவர்கட்கே அவனின் சாந்தி யுண்டா

குக ! ஆமீன் ஆமீன் ஆமீன் ! வ ஆகிரு தஃவானு அனில்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

கையொப்பம் 41-பேர்கள்.

இதற்கு ஹாபிஜ் பாக்கவீ விடுத்திருக்கும் பதில்

ஏ 41 கண்ணேட்டக்காரர்காள் !

தாங்களெல்லோரும் ஒருங்கே சேர்ந்து ஒருமனப்பட்டு எமது 'உலகமத போத உத்தமர்' மீதுதீட்டிய கண்ணேட்டம் இங்கு எங்களை வந்து தாக்கியது. இதனை நாம் கவனிக்கப் புகுமிடத்து தாங்களெல்லோரும் மார்க்கத்தில் அதிக பக்தியும் சிறத்தையும் குடிகொண்டவர்களாகவே மிளிர்ந்து நிற்கக் கண்டோம். அன்றியும், இஸ்லாம் கெட்டுப்போய் விடாமல் பாதுகாக்க முற்பட்டவர்களாகவும், அசத்தியத்தையே அரை நிமிட நேரமும் கண்ணேட்ட மிடாதவர்களாகவும் ஆண்டவன் கூறிய வாக்கியங்களுக்கெல்லாம் (அப்பட்டமாய்) எழுத்தெழுத்தாய் அப்படியே அர்த்த ஞானங்களை யெல்லாம்முற்றிலும் உணர்ந்தவர்களாகவுமே இருக்கக்கண்டோம்; எமது சோதரர்களாய தங்களைப்போல்இன்னமும் சில 41 பெயர்கள் முற்படுவார்களாயின் எமது சுத்தம் சுயம்பொருந்திய இஸ்லாம் ஒரு சிறிதும் கெட்டுப்போகாமலிருக்குமென்றே நினைக்கின்றோம்; ஏனெனில் ஈமானென்னும் உறுதி கொண்ட ஒவ்வொரு மனிதனும் சோதரனாவான் என்னும் உண்மையான வாஞ்சையானது உங்களிடையே தானிருக்கலாமென் றெண்ணுகிறோம். இதன்பொருட்டே நமது இஸ்லாமிய சட்டத்தின்படி முஸ்லிம்களெல்லாம் நடந்து செல்ல ஏற்பாடுசெய்திருப்பீர்களென நினைக்கின்றோம். தென்னிந்தியாவின்பால் காணப்படும் எல்லா முஸ்லிம் சோதரர்களும் சகோதரிகளும் உங்களின் பொருட்டாலேயே இது சமயம் மார்க்கபக்தியில் சிறந்தவர்களாய் விளங்குகின்றனர். ஒருவேளை தொழுகையையும் கை நழுவ விடாது தொழுது வருகின்றனர். ஜகாத் கொடுக்கத் தக்க தனவந்தர்கள் எல்லாம் மார்க்கச்சட்டத்துக்கு விரோதமாய் ஒரு செம்புக் காசுக் கூட குறைக்காது அப்படியே தானதர்மமும் பண்ணி வருகின்றனர். நோன்பின் காலம் வந்து விட்டாலோ எந்த முஸ்லிமும் தலைமறைவாய் ஒட்டலில் புகுந்துகொண்டோ, அல்லது பகிரங்கமாகவோ சாப்பிடாமலும், வெற்றிலை தாம்பூலம் தின்பண்டம் முதலியவைகளைத் தின்று கொண்டோ பகிரங்க ரஸ்தாக்களில் செல்லாமலும் முற்றிலும் மாதம் பூராவும் நோன்பு நோற்றுக்கொண்டே வருகின்றனர். ஹஜ்ஜு யாத்திரைக்குச் செல்ல அறுகதையுள்ளவர்களெல்லாம் பூராவும் ஹாஜிகளாவே தாமிருக்கின்றனர். ஈமானெனும் உறுதியைத் தமிழ்நாட்டு முஸ்லிம் சோதரர்கள் (நுங்கள்காரணத்தாலேயே) அதிக வலுவாய்ப் பற்றிக்கொண்டிருக்கின்றனர். எனவே, இவர்களெல்லாம் இஸ்லாத்தின் இன்றியலமையா மூலக்கொள்கைகளை யெல்லாம் இறுகப்பிடித்துக் கொண்டிருக்கின்றனர் !

இதுமட்டுமா? ஆண்டவனைத் தவிர்த்து இதரர்களான பீர்களிடமும், மஷாயிகுகளிடமும், மரணமடைந்து போயிருக்கும் பெரியார்களின் புதை குழிகளிடமும், கப்ரே யில்லாத தர்காக்களிடமும், சாமியார்களிடமும், பகீர்களிடமும், மஸ்தான்களிடமும், தர்வேஷ்களிடமும் நம் முஸ்லிம்கள் தங்களுடைய கோரிக்கைகளை வேண்டுவதில்லை. ஆண்டவனுக்கு இணையாய், இல்லை—ஆண்டவனுக்கு மேலாய் (நவூதுபில்லா) எந்த ஒளலியாவையும் இணையாய் எண்ணி வணங்குவதில்லை! முஸ்லிம்களெல்லாம் கள் சாராயம் முதலிய மதுவகைகளைப் பருகுவதில்லை. இன்னமும் முஸ்லிம் சோதரர்களெல்லாம் ஒரு தம்படியும் வட்டி யென்பதை வாங்குவதே யில்லை. அந்நொகைகளைக் கரங்களால் தீண்டுவதுமில்லை. பிறர்மனை விழைவதில்லை; சூதாட்டம் என்பதைக் கனவிலும் காண்பதேயில்லை. பொய் பேசுவதில்லை. புறம்பேசுவதுமில்லை. நயவஞ்சகத்தனம் என்பதே நம் தென்னாட்டு முஸ்லிம்களுக்கு இன்னதென்பதே தெரியாது. களவென்பதைக் கனவிலும் நினைப்பதில்லை. எந்தப்பகுதியிலும் தென்னாட்டு முஸ்லிம்கள் பஞ்சாவைப்பதுமில்லை; பாடைகளைக் கட்டிக்கொண்டு கூண்டு கொடியேற்றம் முதலிய அனாசார வேலைகளைச் செய்வதுமில்லை; பஞ்சாவை வைத்துக்கொண்டு, அதனை அல்லா சாமியாய்ப் பண்ணிக்கொண்டு, முஸ்லிம் மனிதர்கள் நாய்களாகவும், கரடிகளாகவும், புலிகளாகவும், பன்றிகளாகவும் கோலம் மாறிப் போவதுமில்லை. இவ்வாறே........இல்லை........

இல்லை........இல்லை! இவைகளெல்லாம் இல்லாமலொழிந்து இஸ்லாம் இனிமையானதாகவும், களங்கமற்றதாகவும், தெளிவானதாகவும் நம் தென்னாட்டின்கண் எங்கும் நின்றிலங்குவது எல்லாம் நுங்களுடைய 41-கண்ணோட்டத்தினால்தான் என்பதை யாரே மறுக்கவல்லார்?

இவ்வளவுதானா? இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக இன்னமுமொரு பெரிய காரியத்தை இந்த 41-கண்ணோட்டமும் செய்து முடிக்காமலில்லை. அஃதாவது, இஸ்லாத்துக்கு விரோதமானவர்களான ஆரியசமாஜிகளால் வெளியாக்கப்பட்ட இஸ்லாத்துக்கு மாறான புஸ்தகங்களுக்கெல்லாம் இக் கண்ணோட்டங்கள் விடை சொல்லி வாயாப்புச் செய்திருக்கின்றன. கிறிஸ்தவர் இஸ்லாத்தின்மீது செய்யும் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் இந்த 41-ம் ஜவாப்சொல்லியே யிருக்கலாம். இஸ்லாத்துக்குள்ளேயே தோன்றிக்கிடக்கும் மணிமாலைகளுக்கும், யுத்தப் போர்களுக்கும், கிஸ்ஸாக்களுக்கும் திருமுடியிறக்கின ஹதீதுக்கும், நாமாக்களுக்கும், அனும்களுக்கும் தக்க விடை இக் கண்ணோட்டங்கள் கொடுத்திருக்கலாமென்றே நினைக்கின்றோம். அந்த எல்லாப் பெரிய புஸ்தகங்களையும் ஆராய்ச்சி செய்து அவைகளுக்குள்ளெல்லாம் மலிந்து கிடக்கும் தப்புத் தவறுகளுக்கெல்லாம் தக்கன இக் கண்ணோட்டங்கள் 41-ம் செய்துவிட்டன. எனவே இக் கண்ணோட்டங்களிடத்தில் எஞ்சியிருந்து வந்தது இந்த எமது "உலக மதபோத உத்தமர்" என்னும் சிறிய பிரசுரம் தான். ஆகையால், இந்தச் சிறிய பிரசுரத்தையும் இக் கண்ணோட்டங்கள் விட்டு விடாது இதற்குத் தக்க ஆராய்ச்சி செய்து இதற்குள் அடி முதல் முடிவரை மறைந்து கிடந்த தவறுகளை யெல்லாம் பொறுக்கி எடுத்து வெளியிட்டிருப்பதைக் கண்ட யார் தான் இக் கண்மணியான கண்ணோட்டங்களை மெச்சாமலிருப்பர்? எல்லாம் வல்ல அல்லாவானவன் இக் கண்ணோட்டங்ளுக்குக் கோணலாயில்லாத நேரான பாதையையும் அழகானபார்வையையும் தந்தருளப் போதுமானவன். ஏ பெரியோனே! முஸ்லிம்கள் இன்னமும் உறங்கிக்கொண்டுகிடந்து மஹா பெரியபிரளயத்துள் மாட்டிக்கொண்டு மாண்டுபோகாமல் காப்பாற்றிவைப்பாயாக. இன்னமும் கெடுவேன் என்ன பந்தயமென்றால், அதற்கு யாம் என்னசெய்யமுடியும்? இறுதியாக இவர்களது கண்ணோட்டத்தின் மீது யாமொருகண்ணோட்டம் வேறுமறுப்பாய்ச்செய்யத் தேவையில்லை. இஸ்லாத்தின் தத்துவத்துக்கும், இப்பிரபஞ்சத்தின் உண்மைக்கும் நேர்மாறாகவும் தவறாகவும் வரையப்பட்டுள்ள அந்த 41 மேதாவிகளின் கண்ணோட்டப் பிரசுரம் அதிக பத்திரமாக எமதாபீஸ் கு. கூ. க்குள் மடித்து வைக்கப்பட்டுள்ளது. ஆதலின், அதிலுள்ள விஷயங்களை ஈண்டு ஆராய்ந்து பார்க்க ஆவசியகமில்லையென்பதே எமது துணிபாகும்.

(ஹாபிஸ் பாகவீ)

['தா. இ.']

குறிப்பு:—சகோதரர்களே! 'உலக மத போத உத்தமர்' என்ற புத்தகத்தில் மலிந்து கிடக்கும் தவறுகளில் சிலவற்றை விளக்கிக் காட்டி நாங்கள் வரைந்துள்ள 'கண்ணோட்டம்' என்ற மறுப்புப் பிரசுரத்திற்கு ஜவாபாக ஹாபிஸ் பாக்கவி வரைந்துள்ள மேற்கண்ட வியாசத்தையும் நாங்கள் வரைந்துள்ள கண்ணோட்டப் பிரசுரத்தையும் நேயர்களே சீர்தூக்கிப் பார்த்து நாங்கள் வெளியிட்டுள்ள கண்டனத்திற்கு ஹாபீஸ் பாக்கவி எழுதியிருப்பது ஜவாபாகுமா என்பதை முடிவு செய்துக்கொள்ள விட்டுவிடுகின்றேன். அதுபற்றி நாங்களொன்றும் வரையாமலே நேயர்களறிந்து கொள்வார்களென்று நம்புகின்றேன்.

முஸ்லிம் சமூகத்தில் தொன்று தொட்டு நல்லவர்களும், கெட்டவர்களும், கலந்திருந்து வருவதும்; நன்மையும் தீமையும் கலந்தே நடைபெற்றுவருவதும், நபிகள் நாயகம் (ஸல்.) காலமுதலிதுவரை எக்காலத்திலேனும் எச்சமயத்திலேனும் முஸ்லிம்களில் எவரும் பாபகாரியம் செய்யாமல் இஸ்லாம் சமூகம் பாதுகாக்கப்பட்டுப் பரிசுத்தமாக இருக்கவில்லையென்பதும் எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். ஒரு சமூகமென்றிருந்தால் சிலர் மார்க்கத்திற்கு விரோதமாக நடந்துவருவது உலக இயற்கை யென்பது வெளிப்படை. அதற்கேற்பவே நம் சமூகத்தில் பல அனாசாரங்கள், பல அறிவிலிகளால்செய்யப்படுவதும், பல கடமைகள் பலரால் நிறைவேற்றப்படாமல் தவறிவிடுவதும் சகஜமாயிருந்து வரு

கிறது. இவைகளைத் தடுக்கவும், ஒழிக்கவும், கடமைகளை நிறைவேற்றும்படி செய்யவும், ஆயிரக்கணக்கான நல்லோர்கள், பெரியோர்கள், மௌலானுக்கள், மௌலவிகள், இங்ஙிஷமும் அரும்பாடுபட்டு வருகின்றனரென்பது உலகேற்கும் உண்மையாகும். இங்ஙனமிருந்தும் ஒரு சிலர்கள் வழிதவறி நடப்பது ஆண்டவனின் கட்டளையையும், அவர்களது விதியாம்சத்தையும் பொருத்ததாகும்.

அவைகளையெல்லாம் தடுத்துப் பரிசுத்தப் படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை ஹாபிஸ் பாக்கவி என்பார் எங்கள்மீது சாட்டி ஏளனம் செய்து வரையத் துணிந்திருப்பது விந்தையினும் விந்தையாகவே காணப்படுகின்றது.

அவர்கள் புத்தகத்திலிழைத்துள்ள தவறை நாங்கள் எடுத்துக்காட்டியுள்ளோம். அதற்கு அவர்கள் நியாயமான பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்; அல்லது அதை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். இங்ஙனமிருக்க, அன்னார் தங்கள் கடமையை விட்டுவிட்டு உலகக் கதையை வரைந்து ஜனங்களை ஏளனம் செய்திருப்பது எம்மட்டும் பொருத்தமாகு மென்பதை நேயர்களே யூகித்துணர்ந்து கொள்வார்களாக.

ஆரிய சமாஜிகளும், கிறிஸ்துவர்களும் நம் மார்க்கத்தைத் தாக்கியும் விரோதமாகவும், செய்துவரும் பிரசாரத்திற்கும், பிரசுரத்திற்கும், 1000-க் கணக்கான முஸ்லிமறிஞர்களால் அப்போதைக்கப்போது வாயாப்புகள் தொன்று தொடுத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் பிரசுரங்களைச் சாதாரண முஸ்லிம்கள் மார்க்க விரோதிகளின் சொற்களென்றும், அதை நாம் நம்பலாகாதென்றும், அடியோடு மறுத்து விடுகின்றனரென்பது வெள்ளிடைமலை.

"தா. இ." ஆசிரியர்களோவெனில் முஸ்லிம் என்ற ஹோதாவில் இஸ்லாம் மார்க்க விரோதமான விஷயங்களை பிரசுர மூலமாக வெளியிடுவதை சாதாரண முஸ்லிம்கள் நம்பி வழிகெட்டுப் போகக் காரணமாக இருப்பதும், அவ்வாறு பலர் வழிகெட்டுப் போயிருப்பதும் நேயர்களறிந்த விஷயம். ஆனது பற்றியே நாங்கள் உண்மையை பொது முஸ்லிம்கட்கு எடுத்துக்காட்ட முன்வந்தோம். பல நண்பர்கள் "உலக மதபோத உத்தமர்" என்ற புத்தகம் புதைக்கப்பட்டதற்குக் காரணங் கூறவில்லையென அதைப் புதைத்தவரின்மீது குறை கூறி பலர் "தா. இ." வில் வியாசங்கள் வரைந்திருக்கின்றனர். அவர்களதிலுள்ள தவறை யுணர்ந்து கொள்வார்களாக.

நபிகள் நாயகம் (ஸல்.) சரிதத்திலோ மார்க்க விஷயத்திலோ இஸ்லாம் மார்க்கக் கொள்கைகளுக்கு விரோதமாக வெளியிடப்படும் பிரசுரங்களைபறிமுதல்செய்து புதைக்க வேண்டியதும், அல்லது எரிக்கவேண்டியதும் உண்மை முஸ்லிம்களின் கடமையாகு மென்பதை நேயர்களறியக் கடவர்.

இங்ஙனம்,

கண்ணோட்டக்காரருள் ஒருவர்.

"உலக மதபோத உத்தமர்" மீது கண்ணோட்டமும் தா. இ. ஹாபிஸின் தடுமாற்றமும்.

முஸ்லிம் சோதரர்காள்! நபிகள் திலகம் உலக ரக்ஷகர் முஹம்மத் முஸ்தபா (ஸல்.) அவர்கள் பிறந்ததினக் கொண்டாட்டத்தன்று அப் பெருமானாரது உயர்ந்த குணதிசயங்களையும், தூய வாழ்க்கை முறைகளையும் அகில உலகத்தினரும் உய்த்துணர்தல் கருதி, அகில உலக வீரத் கமிட்டியார் பற் பல பாஷைகளில் நாயக மான்மியப் பிரசுரங்கள் வெளியிட்டுவருவது யாவருமறிந்த விஷயமே யாகும். அப்பிரசுரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு அவை தென்னிந்தியா, பர்மா, ஸிலோன், மலாய் நாடு முதலிய பகுதிகளிலும் வினி

போகிக்கப்பட்டதென்பதையும் யாவருமறிவர். உலகத்தில் நாயகமவர்களின் (ஸல்.) உண்மையான உபதேசங்களையும், வாழ்க்கைச் சம்பவங்களையும் திரித்துக் கூறும் பற்பல பிரசுரங்களும் மலிந்து கிடப்பதால் அவைகளை அகற்றி உண்மையான விஷயங்களை மக்களுக்கு எடுத்துக்கூறுவான் வேண்டி பல பெரியார்கள் முயர்ச்சித்து தீர்க்க ஆராய்ச்சியின் மீது நாயக மான்மியப் பிரசுரங்களை நல்ல முறையில் வெளியிட்டு வருகின்றனர். ஆனல் இதன் உண்மையான நோக்கத்தை முற்றிலுமறியாத ஒரு சிலர் தமது பேராலும் ஒரு பிரசுரம் வெளிவர வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் உண்மைக்கு மாருன விஷயங்கள் நிறைந்த ஏதேனும் ஒரு பிரசுரத்தை வெளியிட்டுவிடுகின்றனர். இவ்வாறு வெளியிடப்படும் புத்தகங்களுள் தா. இ. ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட "உலக மதபோத உத்தமர்" என்னும் பிரசுரமும் ஒன்ருகும்.

தா. இ. ஆசிரியர்கள் "உலக மதபோத உத்தமர்" என்னும் பிரசுரத்தை, அதை அனுப்பும்படி ஆர்டர் செய்திருந்த ஊர்களுக்கனுப்பியது மன்றித் தாமாகவே வேறு சில ஊர்களுக்கும் அனுப்பியிருந்தனர். இவ்விதம் எவ்விதத் தகவலுமின்றி அந்த ஆசிரியர்கள் தாமாகவே அனுப்பிவைத்த ஊர்களுள் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த இளங்கா குரிச்சியும் ஒன்ருகும். அக்கிராமத்திய ஜனுப் கதீப் எம். முஹம்மது இப்ராஹீம் சாகிப் அவர்கள் விலாசத்துக்கு தா. இ. ஆசிரியர்கள் எவ்வித ஆர்டருமின்றி நூறு பிரதிகள் அனுப்பி அது சம்பந்தமாகக் கடிதமும் எழுதி யிருந்தனர்.

ஆனல், பாவம்! தா. இ. ஆசிரியர்களின் துரதிர்ஷ்டம் போதும்! இளங்கா குரிச்சி வாசிகள் அவ்வூர் ஜனுப் மௌலவீ முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (நூரீ) அவர்கள் மூலமாய் மேற்கூறிய பிரசுரத்திலுள்ள பெருந் தவருன விஷயங்களை அறிந்ததும், அனுப்பப்பட்டிருந்த நூறு பிரதிகளையும் கிழித்து பூமியில் புதைத்து விட்டனர். இது விஷயத்தை அறிந்த தா.இ. பிரதம ஆசிரியரான ஹாபீஸ் பாகவி என்பார் இளங்காகுரிச்சி ஜனுப் மௌலவீ முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (நூரீ) அவர்கட்கு 4-8-1931-ல் அரபியில் இலக்கண வழுக்கள் நிறைந்த "அரை அணு ஒலை" ஒன்று விடுத்திருக்கிருர். அக்கடிதத்தில் பல சம்பந்தமற்ற விஷயங்களை எழுதிய தன்பின்,

"தாருல் இஸ்லாம் பத்திரிகை சம்பந்தமாய் தாங்கள் என்மீது கோபங் கொண்டிருப்பதாய்க் கேள்விப்படுகிறேன். அது உண்மைதானு? அப்படியானல் அதற்குக் காரணமென்னவென்பதைத் தெரியப்படுத்துங்கள். ஏதேனும் தவறிழைத்திருந்தால் மன்னித்தருளுங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிருர்.

இதே ஹாபிஜ் பாகவீ 11-8-1931-ல் திண்டுக்கல் ஜனுப் ஷர்புத்தீன் ஆலிம்சாஹிப் அவர்களுக்கு உர்தூவில் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் மௌலவீ முஹம்மத் ஹுஸைன் சாஹிப் அவர்களைப்பற்றி ஏளனமாகவும் இழிவுபடுத்தியும் எழுதிவிட்டுப் பின் வருமாறு அக் கடிதத்தை முடித்திருக்கிருர்:-

"உலக மதபோத உத்தமர்" என்னும் நமது பிரசுரத்தின் ஒரு பிரதியைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்; அதைத் தாங்கள் பார்வையிட்டு, அது சரியா யிருக்கின்றதா? தவரு யிருக்கின்றதா? என்பதையும் அவசியம் தெரியப்படுத்த வேண்டும். இந்த வாரம் முதல் தாருல் இஸ்லாம் 5-பிரதிகளைத் தங்கள் சமுகம் அனுப்பி வைக்கிருேம்; அவற்றை விற்பனை செய்து மாதா மாதம் நமக்குரூபாய் வந்துசேர ஏற்பாடு செய்யவும்"

தங்களின் ஊழியன்,

(ஒ.) ஹாபிஸ் முஹம்மது யூசுப் (பாகவி.)

தா. இ. ஆசிரியர் ஹாபிஸ் (பாகவி) இடமிருந்து மேற்கூறிய கடிதம் வரப்பெற்ற, ஜனுப் ஷர்புத்தீன் ஆலிம் சாஹிப் இளங்கா குரிச்சி மௌலவீ முஹம்மது ஹுசைன் சாஹிப் அவர்களுக்கு 14-8 31-ல் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அது வருமாறு:—

786

ஷர்புத்தீன் மதரஸா மன்பவுல் கைருத்,
திண்டுக்கல் 14-ஆகஸ்ட்.

"மேன்மைதங்கிய கனம் மௌலவீ முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (நூரீ)

அவர்கள் மேலான சமுகங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும். உபைய கைர்.

யான் தங்களின்மீது ஏதோ பழிசுமத்தியதாயும், தாங்கள் உலகமதபோத உத்தமர் என்ற புத்தகத்தைப் புதைத்தது சரியல்லவென்று கண்டித்ததாயும் யாரோ சிலர் கட்டிவிட்டதாகக் கேள்வியுற்றேன். அதுஎன் மனதிற்கு மிகவும் வருத்தத்தை யுண்டுபண்ணுகிறது. எதுவரையிலும் பூராவிஷயமும் எனக்குத் தெரியவில்லையோ அதுவரை யாரைப்பற்றியும் எவ்வித அபிப்பிராயமும் சொல்லிக்கொள்வது வழக்கமில்லை. தா. இ. ஆபீஸிலிருந்து எனக்கு ஒரு புத்தகம் அனுப்பி அது "சஹீஹா" அல்லது "கலத்தா" (சரியா, தப்பா) என்று பார்த்து தவறு இருந்தால் அதைத் தெரிவிக்கும்படி எழுதியிருந்தார்கள். அக்கடிதம் வருகிற சமயத்தில் என் முஹிப்பு காதிர்இப்ராஹீம் ஆலீம்சாயபு கூட இருந்தார். அவரிடம் தங்களூரில் நடந்த விஷயங்களைச் சொல்லிக்காண்பித்து, அந்தப் புத்தகத்தை இவ்விடத்தில் மற்ற உலமாக்களிடமும் காட்டவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தேன். அச்சமயம் தங்களூர் வாசிகளான இரண்டு பெரியார்கள் பேகம்பூர் மஸ்ஜிதுக்கு குளிக்க வந்தார்கள். யான்சொன்ன விஷயங்களைச் சரியாய்க் கவனிக்காமல் "மாகப்லு மாபஃது" (முன்பின்) பார்க்காமல் ஏதோ ஒன்றை விளங்கிக் கொண்டார்கள்போல் தெரிகிறது. அந்த விஷயம் தங்களுக்கு யாரும் சொல்லியிருந்தாலும் அது உண்மைக்கு மாறுகுமாதலால் தாங்கள் அதை மறுத்து விடுவதவசியம். இது விஷயம் சித்துவார்பட்டி சின்ன முதலாளி யவர்களின் மைத்துனருக்கும் சொல்லுங்கள். இதுதான் விஷயம். தற்பொழுது யானும் இவ்விடத்தில் மற்ற உலமாக்களும் சேர்ந்து அப்புத்தகத்தைப் பார்வையிட்டு வருகிறோம். ஸைபுல் இஸ்லாம் மூலமாக விஷயம் தெரியும். வஸ்ஸலாம்." ஷர்புத்தீன்.

நேயர்காள்! மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் மூன்று கடிதங்களையும் கவனிக்கும்போது இளங்காகுரிச்சி ஜனுப் மௌலவீ முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (நூரீ) அவர்கள் "உலக மதபோத உத்தமர்" என்னும் புத்தகத்தின் நூறு பிரதிகளையும் புதைக்கச் செய்தது தவறு என்றும், அப் புத்தகத்தில் எவ்விதத் தவறுமில்லையென்றும் அவ்விதத் தவறிருந்தால் தெரிவிக்கவேண்டுமென்றும் தா. இ. ஹாபிஸ் பாகவீ கேட்டுக்கொண் டிருக்கிருரென்றும் தெரியவருகிறது.

ஆனல் ஜனுப் ஷர்புதீன் ஆலிம் சாஹிப் அவர்கள் தா. இ. ஹாபிஸின் வேண்டுகோளின்படி தாம் ஒருவராகவே பிரஸ்தாபப் பிரசுரத்தைப் பரிசீலனை செய்வதைப் பார்க்கினும் திண்டுக்கல் நகரிலுள்ள மற்ற உலமாக்களும் பெரியார்களும் ஒருங்கு கூடிப் பார்வையிட்டு அந்தப் புத்தகத்தைப் பற்றிய முடிவான அபிப்பிராயம் வெளியிடவேண்டுமென விரும்பினர்போலும். அவர்கள்தாம் விரும்பியவாறே முயற்சி செய்ததன் பயனுய் தா. இ. பிரசுர சம்பந்தமாக "ஒரு கண்ணேட்டம்" என்ற பிரசுரம் வெளியாயிற்று. இப் பிரசுரத்தில் கையொப்பமிட்டுள்ள 41-அறிஞர்களுள் ஜனுப் ஷர்புதீன் ஆலிம் சாஹிபும் ஒருவராவார் என்பதை நேயர்கள் அறிய விரும்புகிறேன்.

"உலக மத போத உத்தமர்" என்னும் நூலில் காணப்படும் பெரிய தவறுகளெல்லாம் "ஒரு கண்ணேட்டம்" என்ற பிரசுரத்தில் நன்கெடுத்துக் கூறப்பட்டுள்ளதைக் கண்ட ஹாபிஸ் பாகவி கோபமுற்றுத் தடுமாற்றங்கொண்டு, தமது நூலிலுள்ள தவறுகளுக்கு எத்தகைய நியாயமான சமாதானம் கூறுவதற்கில்லை யென்பதை யறிந்தும், தவறுகளை ஆண்மைத்தனமாக ஏற்றுக்கொள்ள அஞ்சியும், 11-9-31-ல் வெளிவந்துள்ள தா. இ. வில் "ஏ 41-கண்ணேட்டக்காரர்காள்!" என்ற தலைப்பின்கீழ் மனம்போனவாறு உளறிக் கொட்டியிருக்கின்ருர். இந்த உளறலும் முன்னுக்குப் பின் விரோதமாயும் உண்மையை மறைத்துக் கூறுவதாயும் இருக்கின்றது. இதில் வேடிக்கை யென்னவென்ருல், ஹாபிஸ் (பாகவி) தமக்கு வந்த ஆத்திரத்தில், தமது நூலில் ஏதேனும் தவறுகளிருக்கின்றனவா என்று பார்த்துக் கூறும்படி ஜனுப் ஷர்புத்தீன் ஆலிம் சாஹிப் அவர்களுக்

குக் கடிதம் எழுதியதை மறந்துவிட்டதே யாகும்.

"உலக மதபோத உத்தமர்" என்னும் பிரசுரத்தைக் கண்ணோட்டஞ் செய்த 41-பெரியார்களும் சாதாரண நபர்களல்லர். அவர்களுள் சிலர் நூற்றுக்கணக்கான ஹிந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவியதற்குக் காரணமானவர்கள். சிலர் முஸ்லிம்களை கொடி, கூண்டு, பஞ்சா முதலிய துர்க்கிருத்தியங்களினின்றும் தப்புவிக்கவும், தொழுகை நோம்பு ஜகாத்து ஹஜ்ஜு முதலிய நற்கருமங்களை நிலைநாட்டவும் தன்னலமின்றி ஓயாமல் உழைத்து வருபவர்கள். நல்ல உண்மையான மார்க்க ஞானமுள்ளவர்கள். இத்தகைய பெரியோர்கள் நாற்பத்தொருபேர், ஹாபிஸின் வேண்டுகோளுக்கிணங்க "உலக மதபோத உத்தமர்" என்ற பிரசுரத்திலுள்ள தவறுகளை எடுத்துக் காண்பிக்க முன்வரும்போது ஹாபிஸ் பாகவி அவற்றிற்குத் தக்க சமாதானம் சொல்ல முயற்சிப்பதே நியாயமான முறையாகும். ஆசிரியர் என்ற பதவியை வகிப்பதாகக் கூறிக்கொள்ளும் ஒருவருக்கு பொருத்தமானதுமாகும். ஆனால் அரபி பாஷையில் தவறின்றி ஒரு கடிதம்கூட எழுத யோக்யதையற்ற ஹாபிஸ் (பாகவி) 41-கண்ணோட்டக்காரர்களையும் பரிகசிக்க முன்வருவது நகைப்புக் கிடமாகத்தானிருக்கிறது. இதுவா ஒரு மௌலவியின் திறமை! அதிலும் பாவிலாம்!! மு....த....ல் ஆசிரியராம்!!!

ஆகவே, ஹாபிஸ் (பாகவி) கல்வி ஞானத்திலும், மதச் சேவையிலும், தானதர்மம் செய்யும் விஷயத்திலும் தம்மிலும் பலவிதத்தில் மேம்பட்டவர்களான 41-அறிஞர்கள் குற்றமென்று சொல்வதைச் சரியென்றே ஒப்புக்கொண்டாகவேண்டும்; அல்லது எடுத்துக் காட்டப்படும் குற்றங்களுக்குத் தக்க சமாதான பதிலளித்தல் வேண்டும். இவ்விதஞ் செய்யாது தேசத்திலுள்ள சகல பாவங்களெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டதா? எங்களுடையபுஸ்தகம்தானா உங்கள் கண்ணுக்குப் புலனாயிற்று? என்று வினவுகின்றார். உலகத்தில் ஏராளமான பாபங்கள் நிறைந்திருப்பதினாலும் அவை நிறுத்தப்படா திருப்பதனாலும் ஹாபிஸ் (பாகவி) பாவ காரியங்கள் செய்து கொண்டே போகலாமென்று நினைக்கிறார போலும்! பேஷ்! இஸ்லாத்தின் போதனைகளுக்கு முற்ற முற்ற நேர்விரோதமான மறுபிறப்புக் கொள்கைகள் முதலியன நிறைந்த "உலக மதபோத உத்தமர்" என்ற பிரசுரத்திலுள்ள குற்றங் குறைகளைக் களைந்துவிட முற்படுதல் நியாயமேயன்றி ஏதாவதொன்றை எழுதித் தப்பித்துக்கொள்ள முயல்வது பகுத்தறிவு, பகுத்தறிவு என்று பறைசாற்றிவரும் பத்திரிகையின் ஆசிரியருக்கு அவமானம் விளைப்பதேயாகும்.

கண்ணோட்டகாரர்களில் ஒருவர்.

தாருல் இஸ்லாத்தின் சிருஷ்டிவாதம்.

அபுல் ஹஸன் மதராஸீ எழுதுவது

அருமந்தசோதரர்!

இவ்வருடம் "யவ்முன்னபீ" யன்று விநியோகிப்பதற்காக தா. இ. ஆசிரியர்கள் "உலகமதபோத உத்தமர்" என்னும் நூலை எழுதி வெளியிட்டிருந்தனரென்பது யாவரும் அறிந்ததே. அவ்வாசிரியர்களின் நூற்களில் தவறுகளும் விபரீதக் கொள்கைகளும் மலிந்து கிடக்கும் வழக்கம்போலவே இந்நூலிலும் பற்பலதவறுகளும் நூதனக்கொள்கைகளும் நிறைந்திருந்தன. இதனைக் கண்ணுற்ற இளங்காக்குறிச்சி வாசிகள், அப்புத்தகங்கள் தங்களூர் பாமரர்கள் கையில்போய் அவர்கள் படிக்க நேரிட்டால் அவ்விபரீதக் கொள்கையினால் வழிகெட்டுவிடநேரிடுமென அஞ்சி அப்பிரசுரங்களைக் கிழித்து மண்ணில் புதைத்துவிட்டனர். இச்செய்தியை அறிந்த தா. இ. ஆசிரியர்கள் பேராத்திரங்கொண்டு' அகாரணமாய்த் தம் நூல்களைப் புதைத்து விட்டனரென்று பெருங் கூக்குரலிட்டனர்; கண்டனங்களும் வரைந்தனர்; வேடிக்கைப் படங்களையும் வரைந்து பிரசுரித்தனர். அத்துடன், தமது நூலில் ஏதேனும் தவறுக

ளிருப்பின் அவற்றைத் தெரியப்படுத்தினல், திருத்திக்கொள்வதாகவும் நிருபம் எழுதினர். எனவே பல உலமாக்களும் அறிஞர்களும் ஒருங்கு சேர்ந்து அந்நூலை நன்கு ஆராய்ச்சி செய்து அதில் மலிந்துகிடந்த தவறுகளை எடுத்துக்காட்டி தக்க ஆதாரங்களுடன் உண்மையை வெளிப்படுத்தினர். இதைக் கண்ட தா. இ. ஆசிரியர்கள், தங்கள் தவறுகள் பகிரங்கமாகிவிட்டதே என்று மனம் நொந்து, ஏதாவது போலிச்சமாதானம் கூற முற்பட்டனர்; அது பலிக்கவில்லை. ஆகவே அத் தவறுகளை ஒப்புக்கொண்டு, தமது பத்திரிகையில் தாறுமாருக ஒருகட்டுரை வரைந்தனர். அதில் கண்ணோட்டக்காரர்களை இழிவு படுத்திக் கூறுந் தோரணையில், "உலகத்தில் எத்தனையோ கெட்டகாரியங்கள் நடைபெறுகின்றன, கூடு கொடியேற்றங்கள் நிகழ்பெறுகின்றன, ஹராமான செயல்கள் புரியப்படுகின்றன, முதலில் அக் கண்ணோட்டக்காரர்கள் இவற்றை யெல்லாம் அகற்றிப் பரிசுத்தப்படுத்திவிட்டல்லவா எமது நூலின்மீது கண்ணோட்டமிட்டு அதின் தவறுகளை எடுத்துக் காட்டவேண்டும்?" என்று பிதற்றினர். என்னே இவர்களின் புத்தி போனவாறு!

பொதுவாக, குற்றங்குறைகளை அகற்றுவதில் ஒழுங்குமுறைகளை (தர்த்திபை) அனுசரிப்பது வாஜிப் (கடமை) என இன்னோர் நினைக்கின்றனர் போலும்! பிறரால் நிகழ்த்தப்பட்ட குற்றங்குறை நிவர்த்திக்கப்படாத வரை தங்களால் இழைக்கப்பட்ட தவறுகளை நிவர்த்தித்து விடுவதுகூடாதென்று விழைகின்றனர் போலும்! கூடுகொடியேற்றம் முதலிய துர்க்கிருத்தியங்களை நடத்திவைக்க முற்படும் நபர்களும் இதேவிதமாகத்தான் விதண்டாவாதம் புரிகின்றனர். அத்தகையோர்க்கு தா. இ. ஆசிரியர்களின் வாதமும் பெரும் உதவியாய் விடுகின்றது.

மேற்படி நூலில் குப்ரியத்தை உண்டாக்கும் விபரீதக் கொள்கைகள் இருப்பதாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனினும் அப்புத்தகம் நூற்றுக்கணக்காய்ப் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அதனுல் எத்தனை கெடுதிகள் மலிந்து பரவி யிருக்குமென்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை எனவே அதனையே முதலில் தடுக்க வேண்டியது முக்கிய கடமையாகும். மேலும் தா. இ. ஆசிரியர்கள் தமது நூலில் மலிந்திருக்கும் குப்ரியத்தான கொள்கைகளை அகற்றிக் கொள்வதற்கு வழி தேடிக்கொள்ளாமல் தங்கள் மீது ஆலிம்கள் குப்ர்பத்தா விடுக்க முன் வந்துவிட்டனர் என்று வீண் குறை கூறுவதற்கு முற்பட்டுவிட்டனர். இது எம் மட்டும் ஒழுங்கானச் செயல் என்பதை நேயர்களே தீர்மானித்துக் கொள்வார்களாக.

நிற்க, தா. இ. ஆசிரியர்கள் தமது உலக மதபோத உத்தமர் என்னும் நூலின் 9-வது பக்கத்தில் "அன்றியும், இத்தானியின் கண் ஒன்று அழிந்து மற்றொன்று உற்பத்தியாகுங்கால் மனிதனே அதனை சிருஷ்டித்து விடுவது முடிவதில்லை. உதாஹரணமாக, இவ்வுலகில் மரித்துவரும் மனிதர்களின் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்பட்டு வருகின்றன" என்று வரைந்திருக்கின்றனர். இதில் ஒரு நவீன மறு பிறப்புக்கொள்கை இருப்பதாக உலமாக்கள் முடிவு செய்திருக்கின்றனர். மரித்துப் போகும் ஒருவர் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்பட்டு வருகிறதென்று தா. இ. ஆசிரியர்கள் வரைந்துள்ளனர். அவ்வாறு ஒரு சரீரத்தினின்றும் வெளியாகும் அணுக்களே மற்றொரு சரீரத்தின் 'ஜுஸ்வு' என்னும் அம்சமாகிவிடவில்லையா? அப்படியாயின் மரித்தோர் எழுப்பப்படும்போது அவ்வணுக்கள் யாருடைய சரீரமாக எழுப்படுமென்பது விளங்கவில்லை. பாவஞ் செய்யாத உத்தமரொருவரின் சரீரத்தின் அணுக்கள் வேறொருவருடைய சரீர சிருஷ்டியில் சேர்க்கப்பட்டு இவன் பாவஞ்செய்த பெரும்பாவியாகி விடுவானுயின் பாவஞ் செய்யாத உத்தமனின் அணுக்கள் பாவியின் சரீரத்துடன் சேர்ந்து துன்பத்தை அடைய நேரிடவேண்டியதாகி விடுமல்லவா? ஆகவே "ஒருவர் செய்த பாவத்துக்கு மற்றவர் ஜவாப்தாரியாக மாட்டார்" என்னும் அல்லாஹ்வின் திருவாக்கியத்துக்கு இந்நவீனக் கொள்கை எத்தனை தூரம் முரணுயிருக்கிறதென்பதை உற்றுப் பாருங்கள்!

விஷயம் இவ்வாறிருக்க, திருச்சி கே. எ. அப்துல் ஹமீது என்பார் பா. தா. வின் விபரீதக் கொள்கைக்கு சப்பைக்கட்டு கட்ட

முனேந்து, தா. இ. 18-9-31-ம் தேதி பத்திரிகையில் வரைவதாவது :—

"மரித்துவரும் மனிதர்களின் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்பட்டு வருகின்றனவென்று சொல்வதால் மறுபிறப்பு-மறுஜன்மம் உண்டு என்று ஏற்பட்டதாய் சொல்வது அறியாத் தன்மையேயாகும். ஏனெனின் மறுஜனனம்—மறுபிறப்பு என்று சொல்வது ஆன்மசம்மந்தமான விஷயமாகும். மரணமடைந்துபோன சரீரத்திலுள்ள ஆன்மா மீண்டும் மற்ருெரு சரீரத்துள் வந்து நுழைந்து கொள்வதென்பதே மறுஜன்ம சிந்தாந்தத்தின் சத்தாகும்..........'உலக மத போத உத்தமர்' என்னும் பிரசுரத்தில் 'சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே' என்னும் சொற்கள்தான் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. சரீரத்தினின்று வெளியாகும் ஆன்மா சம்பந்தமாக அதிலொன்றும் சொல்லப்படவேயில்லை. அணுக்கள் மாறி மாறி மனித உடலாகவும், மிருக சரீரமாகவும், மரமாகவும், மட்டையாகவும், தின்பண்டமாகவும், மண்ணுகவும், கல்லாகவும், மேடாகவும், மணலாகவும், புல்லாகவும், செடியாகவும்...........அதன் பின் மண்ணுகவும் ஆகிகொண்டே புரண்டுபுரண்டு சென்றுகொண்டிருக்கிற தென்பதை ஒரு சிறிதேனும் ஞானமுள்ள எவர்தான் மறுத்துக் கூறுதல் முடியும்? எனவே சரீர அணுக்கள் மாறிமாறி வருகின்றன வென்பதில் என்ன ஆக்ஷேபமுளதென்பதுதான் விளங்கவில்லை..."

முதலாவது தா. இ ஆசிரியர்களின் கருத்தையே இவர் விளங்கிக் கொள்ளவில்லையெனத் தெரிகிறது. முதன் முதலாய், கியாமத்து நாளில் எழுப்பப்படுவதின் விபரத்தை கூறினுல்தான் இந்த சிக்கலான விஷயம் துலக்கமாகும். மரித்தோர் எழுப்பப்படும்போது, மனிதனுடைய "அஜ்ஸாயெ அஸலிய்யா" வென்னும் 'மூலஅம்சங்களைக் கொண்டேஎழுப்பப்படுவார்கள். மூலஅம்சங்கள்' என்பது இறைவன் சிசுவை சிருஷ்டிக்கும்போது உண்டான உருப்புக்களாகும். அவ்வுருப்புக்கள்தான் சிசுப்பருவத்தில் சிறிதாகவும், முதுமைப் பருவத்தில் பெரிதாகவும் காணப்படுகின்றன. இவை அப்படியே பூரணமாய் எழுப்பப்படுமென்பது இஸ்லாத்தின் சித்தாந்தமாகும். மனிதனின் நிறம் தோற்றம், குறி, தொனி முதலியனவெல்லாம் எழுப்பப்படும்போது பூரணமாய் நிலைத்திருக்குமென்பதுதான் முடிவான விஷயமாகும். (இவ்விபரங்களை 'ஷரஹ் பிக்ஹுல் அக்பர்', 'ஜவ்ஹரதுத் தவ்ஹீத்' முதலிய கிதாபுகளில் ஹஷருடைய பாடத்தில் காணலாம்.)

தா. இ. ஆசிரியர்கள் 'ஒரு மனிதனுடைய சரீர அணுக்கள் மற்ருெரு மனிதனின் சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்படுகிறது' என்று வரைந்துள்ளனர். அப்படியாயின், ஒரேவித அணு இரண்டு மனிதருக்கும் "ஜுஸ்வெ அஸலிய்யா" என்ற மூல அம்சமாக அமைகிறதல்லவா? இவ்வாருயின், அந்த மூல அம்சம் யாருடைய சரீரத்துடன் கியாமத்தில் சேர்த்து எழுப்பப்படுமென்பது புலனுகவில்லை. இவ்வாதமானது இஸ்லாத்தின் 'அகீதா'வுக்கு நேர்முரணுனதாகுமென்பது வெளிப்படை.

இங்ஙனமிருக்க திருச்சி அப்துல் ஹமீது என்பார் "மனிதரின் அணுக்கள் மரமாகவோ,மட்டையாகவோ, கல்லாகவோ, மண்ணுகவோ இன்னும் என்னென்னவாகவோ ஆகிக்கொண்டே போகவில்லையா?" என்கின்ருர். இது இரசாயன (கீமியா) வென்றும் கழறுகின்ருர். இந்த ஆக்ஷேபனையை இன்றல்ல, சென்ற 1350-வருடங்களுக்கு முன்னரே குப்பார்கள் கூறியிருக்கின்றனர். மனிதர்கள் மரித்துப்போனபின் எலும்புகள் மக்கி அழிந்து மண்ணோடும் மரத்தோடும் சேர்ந்து போய்விடுகின்றன; மனிதரை காட்டு மிருகங்கள் அடித்துப் புசித்துவிடுகின்றன; மனிதனே மனிதனைபிடித்து நரமாம்சபக்ஷணம் செய்துவிடுகின்ருன்; இந்நிலைமையில் கியாமத்தில் இவர்களின் அம்சங்கள் எங்ஙனம் சேர்த்து எழுப்பப்படும்? என்று காபிர்கள் ஆக்ஷேபித்தனர். இவ்வாக்ஷேபனைக்கு அல்லாஹுதஆலாவே தனது திருமறையில் பதிலளித்துள்ளான். அதாவது :—

(முஹம்மதே) சொல்வீராக! முதன் முறை சிருஷ்டித்தவன், (ஆண்டவன், மீண்

டும்) அவைகளை உயிர்ப்பிப்பான். அவன் (இறைவன்) சர்வ சிரிஷ்டிகளையும் நன்கறிந்தவனுவான்.'' (அல்குர்ஆன்)

அல்லாஹுதஆலா, எழுப்பப்படவேண்டியவைகளின் "அஜ்ஸாயெ அஸலிய்யா" என்னும் மூல அம்சங்களையும், "அஜ்ஸாயெ பாஇய்யா" என்னும் புற அம்சங்களையும் நன்கறிந்தவனுவான். அவன் அந்தந்த அம்சங்களைப் பாகுபடுத்திப் பிரித்து உடையவர்கள்பால் சேர்த்து மரித்தோரைப் பூர்த்தியான விதத்தில் எழுப்பிவிட வல்லவனுவான். அஜ்ஸாயெ அஸலிய்யா (மூல அம்சங்க)கள் எங்கிருந்தபோதிலும் ஆண்டவன் அவற்றை கிரகித்து அதற்குடையவர்களதுபால் சேர்த்து அமைத்துவிடுவானென்பது திண்ணம். (இது சம்பந்தமான சகல விபரங்களையும் "தப்ஸீரெ கபீர்" 7-வது வால்யூம் 114-ம் பக்கம் பார்க்க.)

தவிர தா. இ. ஆசிரியர்களின் கூற்றுகள் வேறுவிதமாகும். அதாவது, ஒரு மனிதரினின்று வெளிப்படும் அணுக்களே மற்றொரு மனிதரின் சிருஷ்டியில் சம்பந்தப்படுகின்றன என்பதாகும், அவ்வாறு சிருஷ்டியில் சம்பந்தப்படின் ஒரேவித அணுக்கள் இரண்டுமூன்று மனிதர்களுக்கு மூல அம்சங்களாக அமையவேண்டிய சங்கடம் நேரிடுகின்றது. இது இஸ்லாத்தின் கொள்கைக்கு முற்றும் விரோதமென மேலே நிரூபிக்கப்பட்டுப் போயிற்று. 'மறுபிறப்பு—மறுஜன்மம் என்பது, மரணமடைந்த சரீரத்தின் ஆன்மா மீண்டும் மற்றொரு சரீரத்தில் வந்து நுழைந்துகொள்வதற்குத்தான் சொல்லப்படும். ஆசிரியர்களின் கூற்று அவ்வாறில்லையே, என அப்துல் ஹமீது கூறுகின்றார். ஆசிரியர்களுடைய கூற்றின் பிரகாரம் இறந்துபோன ஒருவரின் சரீரம் மற்றொரு சரீரத்துடன் சிருஷ்டியில் சம்பந்தப்பட நேரிடுகின்றது. இதனுற்றான் இதற்கு நூதன மறுபிறப்புக் கொள்கையென்று "ஒரு கண்ணேட்டம்" என்ற பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மறுபிறப்புக்கொள்கை எவ்வாருயினும், இக்கொள்கை இஸ்லாத்துக்கு முற்றும் முரணுனதென்பதை தா. இ. ஆசிரியர்களும், திருச்சி அப்துல் ஹமீதும் உணர்ந்து கொள்வார்களாக!

ராமர், கிஷ்ருணர், பௌத்தர் எல்லாம் நபிமார்களாம்?

அதே வியாஸத்திலேயே அப்துல் ஹமீது என்பார், 'ராமர், கிருஷ்ணர், புத்தர் முதலியோரை சத்தியத்தூதர்களென்றும், நபிமார்களென்றும்' வரைந்திருக்கின்ருர். ஆண்டவனது நபிமார்கட்கு அமைந்திருக்க வேண்டிய இலக்ஷணங்கள் யாதென்பதை இவர் அறியவில்லைபோலும்! ராமர், கிருஷ்ணர், புத்தர் முதலியோரைப்பற்றி ஹிந்துக்களின் புராணங்களில் கூறப்பட்டிருக்கும் சரித்திரக் கதைகளிலிருந்து அவர்கள் "நபிமார்"களின் பதவிக்கு எத்துணை தூரம் லாயக்கானவர்களென்பது முஸ்லிம்கள் யாவருக்கும் எளிதில் விளங்கக் கூடியதாகவே இருக்கின்றது. இவர்கள் நபிமார்களுக் குரித்தான லக்ஷணங்களுடைய வர்களாக யிருந்தார்களென்பதற்கு வேறு ஏதேனும் சரியான சரித்திர ஆதாரங்காட்ட முடியுமா? ஆகவே இக்கூற்றும் இஸ்லாத்துக்கு எத்துணை முரணுனதென்பதை நேயர்களே யூகித்தறிந்துகொள்வார்களாக.

பா. தா. வின் பகுத்தறிவு என்னே!

"குர்ஆன் ஷரீபு அல்லாஹ்வின் திருவாய்மொழி, இப்பிரபஞ்சமோ அன்னவனது 'திருக்கர'ச் சிருஷ்டி. இவ்விரண்டினையும் ஒத்திட்டுக் காட்ட வேண்டுவது நமது சுன்னத்து ஜமா அத்தாரின் முதற்கடமை யாகும். இதனைவிடுத்து சைன்ஸ் என்பதே எத்தனைக்கால் மிருகமென்று கூட சற்றுந் தெரிந்து கொள்ளாமலும், தெரிந்து கொள்ள சிறிதும் பிரயாசை எடுத்துக் கொள்ளாமலும் அந்த சைன்ஸ் என்னும் பகுத்தறிவை நாஸ்திகமென்று ஒதுக்கிவிட்டு வெறுந்திண்ணை வேதாந்திகளைப்போல் வீண் வாய் வேதாந்தமட்டும் பேசித்திரியும் உலக வியல்பறியா ஒரு சில வைதீகர்கள் நல்லோர் பார்த்து நகைக்கும் முறையிலே நடந்துகொள்ளத் துணியுங்கால் அன்னவரின் பிரபஞ்ச ஞானமின்மையைகண்டு யாம் பெரிதும் வருந்த வேண்டியவராகவே யிருந்து வருகின்றேம்.............ஆகவே அன்னவருக்குப் பகுத்தறிவு 'படைத்த

எம்மால் என்ன பதில் சொல்லப்பட்டால் அது விளங்கும்?''

என்று தா. இ. ஆசிரியர் பா. தா. மேற்படி வியாஸத்தின் கீழ் ஒரு குறிப்பு வரைந்துள்ளார். மேற் குறிப்பிட்டபடி ஒரு மனிதனின் ஒரேவித அணு இரண்டு சரீரத்தின் அம்சங்களாயின் அது பகுத்தறிவுக்குப் பொருந்துமா? அது சம்பந்தமாய் ஏற்படும் வினுக்களுக்கு பா. தா. தம் பகுத்தறிவை உபயோகித்துத் தகுந்தவிடை பகருவாரா? முஸ்லிம்கள் எடுத்தாளும் ஸைன்ஸானது இஸ்லாத்துக்கு ஒத்தமைந்ததாக வன்றோ இருக்கவேண்டும்? அத்தகைய சைன்ஸன்றோ முஸ்லிம்கட்கு வேண்டற்பாலது? அங்ஙனமின்றி இதற்கு நேர்முரணுகவிருக்கும் நவீன சைன்ஸினுல் முஸ்லிம்கட்கு யாதுபயன் உண்டாகக்கூடுமோ? தெரியவில்லை. சைன்ஸுக்கு எத்தனை காலென்று உலமாக்களை நம் பா. தா. கேட்கின்றுர். அன்னவர் சன்மார்க்கத்தை இன்னதென்றறியாமல், மார்க்கப் பிரசாரம் புரிய முன்வந்துவிட்டது பெரும் வியப்பைத் தரத்தக்கதாகவே யிருக்கிறது. சைன்ஸுக்கு இத்தனைகாலென்று நன்கறிந்த பா. தா. இஸ்லாமிய சைன்ஸ் இன்னதென்பதை அறிந்து கொள்ளாது போனமைக்கும், முஸ்லிம்களின் கொள்கைக்கு மாற்றமானவை இன்ன தென தெரிந்து கொள்ளாமைக்கும் நாம் வருந்த வேண்டியிருக்கின்றது.

ஆகையால், 'மரித்துவரும் மனிதர்களின் சரீரத்தினின்று வெளிப்படும் அணுக்களே மீண்டும் மனித சிருஷ்டியில் ஆண்டவனுல் உபயோகிக்கப்படுகின்றன' என்று கூறுவது இஸ்லாத்துக்கு நேர்முரணுனதென்பது நன்கு வெளியாகி விட்டது. இதை திருத்தி ஒழுங்கு படுத்தாது வீண் தர்க்க வாதம்புரிவதும், ஆபாசக்கட்டுரைகள் எழுதி வெளியிடுவதும் எவ்வித பிரயோஜனத்தையும் தராதெபன்து திண்ணம். இவ்வாறெல்லாம் விதண்டாவாதம் புரிவதனுல் பொது மக்களை ஏமாற்றிவிட முடியாதென்பது உண்மை.

ஆராய்ச்சி மேடை.

ஜவாஹிருல் புர்கானில் தாருல் இஸ்லாம் ஆசிரியர்கள் இழைத்த பெருந்தவறு!

(எம். வி. அப்துல்ஜப்பார் வரைவது.)

சோதரீர்! தா. இ. ஆசிரியர்களால் இயற்றப் பெற்ற ஜவாஹிருல் புர்கானிலும், இதர நூல்களிலும் சத்திய இஸ்லாத்துக்கு முற்றும் விரோதமான பல தவறுன கொள்கைகள் மலிந்து கிடக்கின்றன வென்பது அடிக்கடி நிரூபிக்கப்பட்டுவரும் விஷயமாகும். அவ்வாசிரியர்களும் அவைகளைத் திருத்தி அமைப்பதாக ஒப்புக்கொண்டிருந்தனர். ஆனுல் அவ்வாறு செய்தனராவென்று எவரேனும் வினவுவராயின் அது தான் "குதிரைக் கொம்பாய்" காணப்படுகின்றது. ஆனுல். இவர்களின் கொள்கைகள் இன்னதென்பதை நம் முஸ்லிம் சகோதரர்கள் நன்கறிந்து கொண்டனர். இவர்களின் நூல்களை ஆராயப்புகின், நம் சன்மார்க்கத்துக்கு விரோதமானவைகள் காணப்படுவது சகஜமாகவே யிருந்துவருகின்றது. இவர்களால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜவாஹிருல் புர்கான் நான்காவது வெளியீட்டை கவனிக்கும்போது அதில் கணக்கற்ற தவறுகள் காணப்படுகின்றன. அதி லொன்றை இச்சிறு வியாஸத்தில் வெளியிட விரும்புகின்றேன்; நேயர்கள் படித்துணர்வார்களாக:—

அல்லாஹுதஆலா தன் திருக்குர்ஆனில் "தலாக்" சொல்லப்பட்ட பெண்கள் இத்தா இருக்கவேண்டிய விஷயத்தைக் கூறுமிடத்து அடியில்கண்டவாறு திருவுளம்பற்றி யுள்ளான்:—

'தலாக்கு சொல்லப்பட்ட ஸ்திரீகள் மூன்று மாதவிடாய் (காலம்) வரை எதிர்ப்பார்க்க வேண்டும். (1-228.)

இத் திருவசனத்தில் தலாக் சொல்லப் பட்ட ஸ்திரீகள் மூன்று மாதவிடாய் காலம் வரை "இத்தா" இருக்கவேண்டு மென்பது வெளியாகின்றது. இத் திருவசனத்துக்கு ஜவாஹிருல் புர்கான் ஆசிரியர்கள் வியாக் கியானம் கூறுமிடத்து எழுதியிருக்கும் குறிப்பு வருமாறு:—

"இவ் வத்தியாயத்தில் தலாக் கூறப் பட்டவுடன் இத்தா இருக்கவேண்டி யதே முதன் முதலாய்க் கூறப்படுகின் றது. ஆனால் ஆண்டவன் "குர்உ" என் னும் பதத்தை உபயோகப்படுத்தி, தலாக் சொல்லுமுன் அவள் பரிசுத்த மாய் இருக்கவேண்டுவது அத்தியாவசிய மென்னும் குறிப்பை ஈண்டு சுட்டிக் காட்டியுள்ளான். எனவேமாதவிடாயை விட்டுத் தூரமாயிருக்கும் பரிசுத்த காலத்தில் சொல்லப்படும் தலாக்கே சட்டப்படி செல்லக்கூடியதாக யிருக் கிறது. மெய்யான ஹதீதிலும் இவ் வாறு ஒருசம்பவம் காணக்கிடக்கின் றது. ஹஜ்ரத் இப்னு உமர் (ரலி.) அவர்கள் தங்கள் மனைவி மாதவிடாயி லிருந்தபோது தலாக் சொல்லியதாகக் கேள்வியுற்று நபிகள் நாயகம் (ஸல்) சினங்கொண்டு, இப்னுஉமர் உடனே தமது மனைவியை திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டுமென்று கட்டளையிட் டார்கள். இன்னமும் மாதவிடாயின் போது ஸ்திரிபுருஷர்கள் தாத்காலீக மாக ஒருவரையொருவர் விட்டு விலகி யிருத்தலினால் இடையில் மனஸ்தாபம் உண்டாவதற்கு ஏதுவுண்டாதல் கூடு மாதலினால்தான் அப்பொழுது சொல் லப்படும் தலாக் செல்லக்கூடாததாய் அமைந்துள்ளது... ..." (ஜவாஹிருல் புர்கான், நான்காவதுவெளியீடு 439-ம் பக்கம்.)

இக்குறிப்பிலிருந்து 'மாதவிடாய் காலத் தில்சொல்லப்படும் தலாக்கு செல்லத்தக்க தல்ல, பரிசுத்தமாயிருக்குங்காலத்தில்சொல் லப்படும் தலாக்குதான் செல்லுபடியாகும்' என்று அவ்வாசிரியர்கள் அபிப்பிராயப்படு கின்றனர் என்பது தெற்றென விளக்கமா கின்றது.

இஃது மிகமிகத் தவறானதாகும். இதைப் பற்றி இமாம்கள் கூறியிருக்கும் விபரங்களை ஈண்டு சிறிது விளக்குகின்றேன். அதினின் றும் மேற்படி வியாக்கியான கர்த்தாக்களின் மௌடீகம் வெளியாகிவிடும் அது வரு மாறு:—

"தலாக்கு சொல்லுவது மூவகைப் படும். (1) மாதவிடாயைவிட்டுப் பரி சுத்தமா யிருக்குங்கால்—சம்போகம் செய்யப்படாமலிருக்கும் சமயம் ஒரு தலாக்குமட்டும் கூறுவது. (2) அவ் வாறு பரிசுத்தமா யிருக்கும் சமயங் களில் முறையே மூன்று தலாக்குசொல் வது. (3) மாதவிடாயைவிட்டு பரிசுத்த தமா யிருக்குங்கால் சம்போகம் புரிந்த பின் ஒரு தலாக் சொல்வது; அல்லது, ஒரே சமயத்தில் மூன்று தலாக்குஞ் சொல்லிவிடுவது; அல்லது, ஒரே வார்த் தையைக்கொண்டு முத்தலாக்குச்சொல் வது. அல்லது மாதவிடாய் காலத்தில் தலாக் சொல்வது.

(இம் மூவகைகளில் பல உட்பிரிவுகளும் உண்டு. விரிவஞ்சி விடுத்தனம்.)

இம் மூவகைத் தலாக்குகளும் செல்லுபடி யாகி விடுமென்று எல்லா புகஹாக்களும் ஏகோபித்துக் கூறியிருக்கின்றார்கள். ஹிதா யா, ரத்துல் முஹ்தார், ஆலம்கீரி, ஷரஹ் விகாயா, மஹல்லி, பத்ஹுல்முஈன் முதலிய கிதாபுகளின் தலாக்குடைய பாடம் பார்க்க.

தா. ஆசிரியர்கள் வரைந்து வெளியிட்டிருக் கும் கூற்றானது எல்லா இமாம்களும் கூறி யிருக்கும் மஸ்அலாக்களுக்கு நேர்விரோதமா யிருக்கிறதென்பது வெள்ளிடை மலை. அவ் வாசிரியர்கள் தங்கள் தவறான கூற்றுக்கு ஆதாரமாக அப்துல்லாஹ்பின் உமர் (ரலி.) அவர்களுடைய ஹதீதை எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். அந்த ஹதீதையேனும் தீர்க்காராய்ச்சி செய்து எடுத்தெழுதினரா வென்று நோக்குமிடத்து, அதுவுமில்லை. அப் துல்லாஹ் இப்னு உமர்(ரலி.) அவர்கள் விஷய மாய் நடந்த சம்பவத்தை கீழே குறிப்பிடு கின்றேன்:—

"அப்துல்லா இப்னு உமர் (ரலி.) அவர்கள் தங்கள் மனைவி மாதவிடாயி

லிருக்கும்போது ஒரு தலாக் சொல்லி விட்டார்கள். இவ்விஷயத்தை அவர்களது தந்தையான உமர் கத்தாப் (ரலி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் தெரியப்படுத்தினார்கள்; இதைக்கேட்ட நாயகம் (ஸல்.) சினங்கொண்டு, அப்பெண்மணியை மீட்டுக் கொள்ள உத்தரவிடும்படி கட்டளையிட்டார்கள். அதன்படியே அப்துல்லா இப்னு உமர் (ரலி) அவர்கள் தங்கள் மனைவியை மீட்டுக் கொண்டார்கள்.''

முன்னால் கூறப்பட்ட தலாக்கைப்பற்றி அப்துல்லா இப்னு உமர் (ரலி.) அவர்களைப் பலரும் வினவினார்கள். அதற்குப் பதிலளிக்கும்போது, "என்மீது அதனை ஒரு தலாக்காக கணக்கிடப்பட்டது'' என்று இப்னு உமர் (ரலி.) கூறியதாக ஸஅத் இப்னு ஜுபைர் கூறியிருக்கிறார்கள். இந்த விபரங்களெல்லாம் புகாரீஷரீபின் தலாக்குடைய அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

இமாம் புகாரீ அவர்களும், மாதவிடாய் காலத்தில் சொல்லப்படும் தலாக்கு செல்லத்தக்கதே யென்று அதே பாடத்தில் கூறியிருக்கின்றார்கள். இவ்வாறே மற்ற புகஹாக்களும் இந்த ஹதீதை ஆதாரமாகக் கொண்டு மாதவிடாய் காலத்தில் கூறப்படும் தலாக்கு செல்லுபடியாகி விடுமென்று கூறியிருக்கின் கின்றார்கள்.

மேலும் இந்த ஹதீதில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், அப்துல்லா இப்னு உமர் (ரலி.) அவர்களைத் தங்களது மனைவியை மீட்டுக் கொள்ளும்படி உத்திரவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதில் "ருஜூஉ'' என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ருஜூஉ என்னும் பதமானது தலாக் ஏற்பட்ட பிறகு தான் உபயோகிக்கப்படும் என்பது பிக்ஹு கித்தாபுகளில் ஒரு சிறிது அனுபவமுள்ள எவரும் அறிவர். மேலும், அதே ஹதீதில் இப்னு உமர் (ரலி.) அவர்கள், மாதவிடாய் காலத்தில் கூறப்பட்ட தலாக்கைத் தலாக்கென்றே கணக்கிடப்பட்டதென்று தாங்களே விபரமாகக் கூறிவிட்டார்கள் இந்த ஹதீதிலிருந்து மாதவிடாய் காலத்தில் சொல்லப்படும் தலாக்கு செல்லத்தக்கதல்லவென்று கூறுவதற்கு எவ்வித முகாந்தரமுமில்லை. இவைகளை நன்குணராமலும், ஹதீது கிதாபுகளை நோட்டமிடாமலும், இமாம்களின் கூற்றுக்களுக்கு முரணாய் அந்த தலாக் செல்லத்தக்கதல்ல என்று தா. இ. ஆசிரியர்கள் வரைந்திருப்பது விந்தையினும் விந்தையாகவே காணப்படுகின்றது. ஆனால், மேற்படி திருவசனத்தில் "தலாக் சொல்லப்பட்ட ஸ்திரீகள் மூன்று மாதவிடாய் காலம்வரை எதிர்ப்பார்க்க வேண்டும்'' என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து தலாக் சொல்லப்படும்காலம் ஸ்திரீகள் மாதவிடாய் காலத்திலில்லாத சமயமாயிருக்க வேண்டுமென்று தா. இ. ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர் போலும்! மேற்படி திருவசனத்தில் கூறப்பட்டிருக்கும் "குரூஉ'' என்னும் பதத்துக்கு மாதவிடாய் காலமென்றும், அதைவிட்டுப் பரிசுத்தமாயிருக்குங் காலமென்றும் இமாம்கள் இருவிதமாய் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்கள் மூன்று மாதவிடாய்காலம் வரை தலாக் சொல்லப்பட்ட ஸ்திரீ இத்தா இருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இமாம் ஷாபிஈ (ரஹ்.) அவர்கள் மூன்று பரிசுத்தகாலம் வரை இத்தா யிருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள் அவர்கள் சொற்படி தா. இ. ஆசிரியர்களின் வாதத்துக்கு இடமே கிடையாதென்பது திண்ணம். ஹனபீ இமாம் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி "குரூஉ''க்கு மாதவிடாய் காலமென்று வைத்துக்கொண்டாலும், மாதவிடாய் காலத்தில் சொல்லப்படும் தலாக்கு, மேற்கூறப்பட்ட ஸஹீஹான ஹதீஸின் ஆதாரத்தைக்கொண்டு செல்லத்தக்கதாகிவிடும். ஆனால், அந்த ஸ்திரீயின் இத்தாவானது இதற்கு அடுத்துவரும் மாதவிடாய் காலமுதல்தான் கணக்கிடப்படுமென்று ஹனபீ இமாம் கூறியிருக்கிறார்கள். அவசியத்தை முன்னிட்டு தலாக்கு கொடுக்கநேரிடின், பரிசுத்தமாயிருக்குங் காலத்தில்கொடுப்பது தான் சரியான முறைமையாகும். இதைத் தவிர்த்து, மாதவிடாய் காலத்தில் தலாக்கு கொடுக்கப்பட்டால், அந்த காலம் இத்தாவில் கணக்கிடப்படாமல், அந்த ஸ்திரீயின் இத்தாவுடைய காலம் அதிகரித்துவிடுகின்றது. இவ்விருகாரணத்தை முன்னிட்டே தான் நபிகள் திலகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் இப்னு உமர் (ரலி.) மீது சினங்கொண்டார்கள். அவர்களால் கொடுக்கப்பட்ட

தலாக்கு "ரஜஈ" யான ஒற்றை தலாக்காக இருந்த காரணத்தினால் அவர்களது மனைவியை மீட்டுக்கொள்ளும்படி கட்டளையிட்டு விட்டார்கள். மாதவிடாய் காலத்தில் தங்களால் கொடுக்கப்பட்டுவிட்ட தலாக்கு விஷயமாகிவிட்டதென இப்னு உமர் (றழி.) அவர்கள் தாங்களே விவரித்துக் கூறியுள்ளார்கள். ஆனதுபற்றி மாதவிடாய் காலத்தில் சொல்லப்படும் தலாக்குசெல்லத்தக்கதல்லவென்று கூறுவதற்கு எவ்வித முகாந்தரமும் கிடையாதென்பதை நேயர்கள் உணர்வார்களாக!

சமீபத்தில் ஒரு சிற்றூரில் ஒரு சம்பவம் நடந்தது. "அதாவது ஒருவர் தம் மனைவியை முத்தலாக்குஞ் சொல்லிவிட்டார். பின்னர் வருந்தி அந்த ஸ்திரீயைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென நோக்கங் கொண்டார். தாம் முத்தலாக்கு சொல்லும்போது தம் மனைவி மாதவிடாயி லிருந்ததாகவும், அது சமயம் சொல்லப்படும் தலாக்கு செல்லத்தக்க தல்லவென்றும், ஆகையால் தன் மனைவியைத் தன்னுடன் சேர்த்து வைக்க வேண்டுமென்றும் அவர் அவ்வூர் நாட்டாண்மைகாரரிடம் கோரிக்கொண்டார். அந்த நாட்டாண்மைக்காரருக்கு இஃதொரு நூதன மஸ்அலாவாகத் தோன்றிற்று. எனவே, ஆலிம்களிடம் இதைப்பற்றி வினவினர். அவ்வித தலாக்கு செல்லத்தக்கதாகிவிடுமென்றே உலமாக்களும் கூறினார்கள். மேற்படி தலாக்கு சொன்னவரை அழைத்து அவரது கூற்றுக்குத் தக்க ஆதாரம் ஏதேனும் இருந்தால் கொண்டுவரும்படி கூறினார்கள். அதற்கவர், தா. இ. ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட "ஜவாஹிருல் புர்கான்" நான்காவது வெளியீட்டைக் கொண்டுவந்து அதன் 439-ம் பக்கத்தை விரித்துக் காட்டினர். அதில் அவர் கூறியவாறுதான் எழுதப்பட்டிருந்தது. இத் திரு அத்தியாயத்துக்கு அஹ்லெ சுன்னத்துவல் ஜமாஅத்தின் இமாம்களாலும், உலமாக்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை எடுத்து ஆராய்ந்து பார்த்தனர்; அவை யொன்றிலும் இவ்வாறு நூதன விஷயம் கூறப்படவில்லை. ஒரு சமயம் லாஹூர் அஹ்மதீ—காதியானி மௌலவீ முஹம்மத் அலீ, எம்.ஏ., என்பவரால் எழுதப்பட்ட உர்தூ - ஆங்கில குர்ஆன் விரிவுரையில் இருக்கலாமோவென்று சந்தேகித்து அதை பார்த்தனர். அதில்தான், இந்தத் தா. இ. ஆசிரியர்கள் எழுதியவண்ணம் அந்த நூதன விஷயம் இருந்தது. மேலும், அவ்வழி கெட்ட காதியானி—அஹ்மதீயின் தப்ஸீரையே ஒரு வார்த்தையேனும் விடாமல் மொழி பெயர்த்துக் கொண்டு தங்களால் சுயமே இயற்றப்பெற்றதென்று தா. இ. ஆசிரியர்கள் வரைந்திருக்கும் மர்மமும் அந்த சமயம் அவ்வாலிம்களுக்கு வெளியாகிவிட்டது. ஆகையால் அக்கூற்றை வழிகெட்டோரின் கொள்கையென்று முடிவுசெய்து, தலாக்கு சொல்லப்பட்ட பெண்ணை அந்த மனிதருடன் சேர்த்து வைக்கக்கூடாதென்று நிராகரித்து விட்டார்கள்."

சோதரீர்! இந்நூதனக் கொள்கை குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் எவ்வளவு தூரம் முரண்பட்டதென்பதை நன்கு கவனியுங்கள். இதனால் பாமர மக்கள் வழிகெட்டுப்போகிறதற்கு எத்துணை இடமேற்படுகிற தென்பதையும் நோட்டமிட்டுப் பாருங்கள். முத்தலாக்கும் சொல்லப்பட்ட ஒரு ஸ்திரீயை அவள் புருடனுடன் சேர்த்து வைக்கும் நூலாய் தா. இ. ஆசிரியர்களின் ஜவாஹிருல்புர்கான் விளங்குகின்றதல்லவா? அவ்வாசிரியர்கள் லாஹூர் முஹம்மத் அலீ எம். எ. ஒரு பக்கா அஹ்மதீயென்று ஒரு பக்கல் எழுதிவிடுகின்றனர். மற்றொரு பக்கல் நாங்கள் அந்த அஹ்மதீகளுடன் சேரவில்லையென்றும் சாடையாகப் பறைசாற்றியும் வருகின்றனர். அக்காதியானிகளின் தப்ஸீரை அப்படியே மொழி பெயர்த்துத் தங்களால் சுயமே இயற்றப்பெற்றதென்றும் எழுதிவிடுகின்றனர். இது காதியானி தப்ஸீரின் நேர் மொழிபெயர்ப்பென்று எழுதிவிட்டால் பொது ஜனங்கள் இவ்வாறு வழிகெட்டுப் போகமாட்டார்களன்றோ? இம்மாதிரி மார்க்க மஸ்அலாக்கள் விஷயத்திலும் தாறுமாறாய்ப் பா. தா- எழுதிவிடுவதில் நாமொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது அவரின் இயற்கைக் குணமேயாகு மென்பதை எல்லோரும் அறிவார்கள் ஆனால், ஒரு மௌலவீ, (அதுமட்டுமென்று) பாஜில்! என்பார் இவ்வாறு பெருந்தவறு இழைத்திருப்பதுதான் மிக்க ஆச்சரியத்தைத் தரத்தக்கதாயிருக்கின்றது. இதற்கெல்லாம் தக்க விடையை அந்த ஹாபிஸ்பாகவீ தமது விகடபத்வாவி லேனும் வெளியிடுவாரா?

மலேரியா

மனிதவர்க்கத்தைப் பெரிதும் பாதித்து வரும் பயங்கரமான வியாதிகள் பலவற்றுள் மலேரியா ஜுரமும் ஒன்றாகும். எனினும், பாமர மக்களேயன்றிக் கல்வியறிவுடையோரும் அதைப் பற்றிய விபரங்களை யறியாதவராகவே இருந்து வருகின்றனர்.

மலேரியாவை ஒரு தொத்து வியாதி யெனக் கூற முடியாது. அதாவது, அது காற்று மூலமாகவோ, ஆகாரத்தின் மூலமாகவோ,ஜலத்தின்மூலமாகவோ பரவுவதில்லை. இந்த வியாதியுள்ளவர்களைத் தொடுவதினாலும் அது தொத்திக்கொள்வதில்லை. இது ஒருவிதக் கொசுவினால் பரத்தப்படுகின்றது. அனோபிலஸ் என்ற கொசு வர்க்கத்தினாலேயே மலேரியாக் கிருமிகள் மனிதரிடையே பரத்தப்படுகின்றனவென வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

நம்மைஎத்தனையோ பூச்சிகளும், ஈக்களும், கொசுக்களும் கடித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றினாலுமே வியாதிகளுண்டாகி விடுவதில்லை. அனோபிலஸ் கொசுக்களிலும் ஒரு குறிப்பிட்ட பிரிவு கொசுக்களாலேயே மலேரியா பரவுகின்றது.

மலேரியா கிருமிகள் நமது தேகத்துள் எப்படி இடம் பெறுகின்றனவென்பதை அறிவதற்கு முன்னர் நமது இரத்தத்தின் அமைப்பைப் பற்றி ஒரு சிறிது தெரிந்துகொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். இரத்தத்தில் ஏராளமான சிவப்புக் கண்ணறைகளும் வெளுப்புக் கண்ணறை களுமிருக்கின்றன. ஒருதுளி இரத்தத்தில் சுமார் 3,00000 சிவப்புக் கண்ணறைகளும் 600 - வெண்மையான கண்ணறைகளுமிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. சிவப்புக் கண்ணறைகள் தாம் இரத்தத்தைச் சிவப்பு வர்ண முள்ளதாகத் தோற்றுவிக்கின்றன. இவற்றில் தாம் மலேரியாகிருமிகள் வசித்துவந்து தேகத்தில் வியாதி முற்ற முற்ற அக்கண்ணறைகளையும் நாளடையில் நாசஞ் செய்துவருகின்றன.

மலேரியா கிருமிகளைக் கொண்டு செல்லும் கொசு ஒரு மனிதனைக் கடிக்கும்போது இரத்தத்தில் பல கிருமிகள் செலுத்தப்படுகின்றன. கிருமிகள் அங்குமிங்கும் விரைந்து செல்லக்கூடிய தன்மையுடையனவாதலால், அவை இரத்த வோட்டத்துடன் கலந்து கொண்டு சிவப்புக் கண்ணறைகளுள் புக முயற்சிக்கின்றன. நாளடைவில் கண்ணறைகளுள் இடம்பெற்றதும் அவை அங்கேயே நிலைத்திருந்து கண்ணறைகளையே தமக்கு ஆகாரமாக்கிக் கொள்கின்றன. கிருமிகள் பூரண வளர்ச்சியடைந்ததும் பல கிருமிகளாகப் பெருகி விடுகின்றன. சாதாரணமாக ஒரு கிருமி 8, 10, 12 கிருமிகளாகவும் பெருகிவிடுமாம். இவ்வாறு கிருமிகளால் நிறைந்துவிடும் சிவப்புக்கண்ணறை பலஹீனமடைந்து நாசமுறும்போது அதனுள்ளிருக்கும் கிருமிகள் இரத்தத்தில் கலந்து புதிய சிவப்புக் கண்ணறைகளைத் தேடி யடைந்து மேலும் மேலும் அபிவிருத்தி யடைந்து வருகின்றன.

இவ்விதமாக மனித தேகத்தில் கிருமிகள் சேர்ந்து பத்துப் பன்னிரண்டு தினங்களுக்குள் இரத்தம் முழுதும் கிருமிகளும் அவற்றால் ஏற்படும் விஷசத்துக்களும் நிறைந்ததாய் ஆகிவிடுகின்றன.

இந்த நிலைமையில் தான் தலைவலி, நடுக்கல், ஜுரம் முதலியன தோன்றவாரம்பிக்கின்றன. ஜுரம் ஒரு முறை கண்டுவிட்டால்பிறகு மறுபடியும் மறுபடியும் முறைக்கணக்காக வருகிறது. ஏனெனில், கிருமிகள் ஒவ்வொரு 12, அல்லது 24, அல்லது 36-மணி நேரத்துக்கொருமுறை ஏராளமாகப் பெருகிவிடுவதால் அதற்கேற்ப ஜுரமும் தோன்றுகிறது.

மேலே குறிப்பிட்ட வெள்ளைக் கண்ணறைகள் இரத்தத்தைப் பாதுகாக்கும் போலீஸ்காரர்கள் என்று கூறலாம். சிவப்புக் கண்ணறை நசித்துப் போனபிறகு அதிலிருந்து வெளிப்பட்டு இரத்தத்தில் ஓடும் கிருமிகளை வெள்ளைக் கண்ணறைகள் அழிக்க முயல்கின்றன; ஆயினும் பெரும்பாலானவை தப்பியோடி புதிய சிவப்புக் கண்ணறைகளுள் புகுந்துகொண்டு விடுகின்றன.

வெள்ளைக் கண்ணறைகளேயன்றி வேறு சிலவும் நமது தேகத்தைக் காத்து வருகின்றன. “ஸ்பினீன்” என்பது இவற்றுள் ஒன்

ருகும். மலேரியா ஜுரம் அதிகம் பரவியிருக்கும் பிரதேசங்களிலுள்ள குழந்தைகள் வயிற்றில் ஒருபாகம் கட்டிபோல் முன் வந்திருப்பதைக் காண்கிறோம். ஸ்பினீன் இரத்தத்தை வடிகட்டும் கருவி போன்று அமைந்துள்ளது. மலேரியா வியாதியால் பீடிக்கப்பட்டவரது இரத்தத்தில் ஏராளமான நசித்துப்போன சிவப்புக் கண்ணறைகளும், கிருமிகளும் மல ஜலங்களும் இருப்பதால் இரத்தம் ஸ்பீலினல் வடிக்கட்டப்பட்டு பிறகு தேகத்தின் ஏனைய பாகங்களுக்கு அனுப்பப்படுகிறது. எனினும், சிவப்புக் கண்ணறைகளுள் வாசஞ் செய்யும் கிருமிகள் எவ்விதத் தடையுமின்றி ஸ்பீலினல் பாதிக்கப்படாமல் தப்பிக் கொண்டு விடுகின்றன. மலேரியா கிருமிகள் நிறைந்த இரத்தத்தை வடிகட்டுவதனல் ஸ்பீலினுக்கு அதன் சக்திக்கு மீறிய வேலை ஏற்பட்டுவிடவே அது வியாதிப்பட்டுப் பெருத்து விடுகின்றது.

மேற்கூறிய வற்றிலிருந்து மலேரியா ஜுரம் எப்படி உண்டாகின்றதென்பதை அறிந்தோம். இனி அது வராமற் தடுப்பதற்குள்ள வழிகளைக் கவனிப்போம். கொசு இல்லாமல் மலேரியா உண்டாகாதென்பது நிச்சயம். எனவே, நம்மாலானமட்டும் கொசுக்களை நாசஞ் செய்ய முயலவேண்டும். அவை பெரும்பாலும் சதுப்பு நிலங்களிலும் நீர் நிலைகளிலும் வசிக்கின்றன. எனவே நாம் சதுப்பு நிலங்களைப் பண்படுத்தவும், நீர் நிலைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் முயலவேண்டும். கொசு முதலில் முட்டை வடிவமாகவும் பிறகு புழுவடிவமாகவும் மாறுகின்றது. புழு வடிவமாயிருக்கும்போது உயிர் வாழக் காற்று மிகவும் அத்தியாவசியம். எனவே அசுத்தமான குள்ங் குட்டைகளில் மண்ணெண்ணெயைத் தெளித்து வைத்தால் புழுக்கள் நாசமடையும். இதன் பயனுய் கொசுக்கள் அபிவிருத்தி தடைப்பட மலேரியாவும் குறையும்.

கூடியவரை கொசுக்கடிக்காளாகமலிருக்க வேண்டும். நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள இடங்களிலும் பகல் நேரத்திலும் கொசுக்கள் அதிகம் வெளிவருவதில்லை. அவை இருண்ட இடங்களில் அடைந்து கிடக்கும். எனவே, நாம் நல்ல காற்றும் வெளிச்சமுமுள்ள இடங்களில் வசித்துவர வேண்டியது மன்றிக் கொசுவலைகளையும் உபயோகிக்கவேண்டும்.

மலேரியா கிருமிகளைக் கொல்வதற்கு கொய்னவைப் போன்ற மருந்து வேறெதுவும் இல்லை. இரத்தத்தில் கொய்னு கலந்திருந்தால் சிவப்புக் கண்ணறைகளிலிருந்து வெளிவந்து இரத்தத்தில் கலந்துகொள்ளும் கிருமிகள் நாசமடைந்து விடுகின்றன. எனவே கொய்னவை மாத்திரையாக உட்கொள்வதைக் காட்டிலும் இன்ஜெக்ஷன் செய்து கொள்வதால் சீக்கிரத்தில் மலேரியா ஜுரம் நிவர்த்தியாகும்.

மதிப்புரை.

ஞானிபானு :—இப்பெயர்கொண்ட நூலொன்று வரப்பெற்ருேம். இஃது உத்தமபாளையம் ஜனுப் மௌலவீ S. S. முஹம்மத் அப்துல்காதிர் சாஹிப் பாக்கவீ அவர்களால் இயற்றப்பெற்று நாட்டாண்மை க. மு. முஹம்மது மிரான் ருவுத்தர் அவர்களால் பிரசுரிக்கப்பெற்றிருக்கிறது. இதில் செய்யிதுன முஹையித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் ஜீவியவாழ்க்கை வரலாறுகளும் பஃதாது வாசமும் கல்வி பயிற்சியும் மகான் அவர்களின் அகக்கல்வியின் மகிமையும், அவர்களால் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளும் கூறப்பட்ட திருவாக்குகளும் நல்ல முறையில் விவரித்துக் கூடப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் படித்துப்பார்க்க வேண்டியது அவசியமாகும். இந்நூல் வேண்டுவோர்

1. நா. க. முஹம்மது மீருன் ருவுத்தர், உத்தமபாளையம்.

2. மௌலவீ S. S. முஹம்மது அப்துல்காதிர் சாஹிப் பாக்கவீ, உத்தமபாளையம். என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தா நண்பர்களுக்கு

கடந்த ஆண்டில் சந்தாதாரராயிருந்து நமது மாசிகையை அன்போடு பாராட்டி வந்த கனவான்கள் நடைபெறும் 1931-ம் வருஷத்திற்குரிய சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பித்தந்து, இஸ்லாம் மார்க்கத்திற்கும், சமூசத்திற்கும் இணையிலா தொண்டாற்றி வரும் நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' மாசிகைக்கு தம் குன்ருூ ஊக்கத்துடன் போதிய ஆதர வளித்து தினே தினே அபிவிருத்திக்குக் கொண்டு வருவார்களென எதிர் பார்க்கின்ரேம்.

1931 ஜனவரி முதல் V. P. முதலியன தபாலாபீஸில் 3 நாளைக்கு மேல் வைத்துக் கொள்ளப் படமாட்டாதென போஸ்ட் ஆபீஸார் அறிக்கை வெளியிட்டிருப்பதால், நண்பர்கள் V. P. க்கு ஆர்டர் செய்யாமல் சந்தாவை முன்பணமாக அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி விருப்புகின்ரேம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமா யிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாக யிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு & Co." அவர்களிடமும்,

பேரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானி லுள்ள ஜனப் K. A. பக்கிர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்ட்ரீட் சுகரசம் & Co. தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ முஹம்மது யாகூப்சாஹிப்" அவர்களிடமும்,

கோளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் க்ராஸ் ஸ்ட்ரீட் டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் & Co. அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்ரேம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர் பார்க்கின்ரேம்.

"மானேஜர்"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, மதருஸ், G. T.

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லா சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ **K. O.** முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

மெஸர்ஸ் **K. A.** பக்கிர் முஹம்மத் & Co.,
P. O. Box. 52.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனுப் மவ்லவீ முஹம்மத் யாகூப் சாஹிப்
சுகரசம் & Co, 385, மங்மாரி வீதி.

கொழும்பு

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கிராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜி முஹம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு.

ஜனுப் மவ்லவீ **M.** ஸுல்தான் அஹ்மத் ஸாஹிபு
1/222 அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் ஹாஜி **M. M.** காதர்பகீர்ருவுத்தர் & கம்பெனி,
21, சைனா பஜார் ரோடு.

மெஸர்ஸ் **M. A.** காதர்பாவா & பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R. Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.